


கல்கி

KALKI·13·11·83·ரூ·1·20

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®
ஒன்றில்தான்
அவர்களுக்கு
அன்றுடம் தேவைப்படும்
23 ஊட்டச் சத்துக்கள்
அடங்கியுள்ளன.

வளரும் குழந்தை-
களுக்கென்றே
சிறப்பான சில
தேவைகள்
உள்ளன—வளரும்
வயதிலே உடம்புக்குத்
தேவைப்படும்
மிகச் சிறந்த புரதம்,
22 மூலாதார
ஊட்டச் சத்துக்கள்
—அளிக்கிறது
காம்ப்ளான். மறவாதீர்கள்.
டாக்டர்களின் சிபாரிசு
பெற்ற, திட்டமிட்ட உணவு
காம்ப்ளான்.

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.
"குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி"
தபால் பை எண் 1 9118, (Comp) G-78, பம்பாய் 400 025.

GLC-6-2013 TH

திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®

ஒரு நாற்காலி; ஒரு நாவிதர்; ஒரு யோசனை!



ஒரு நாற்காலி:

மகாத்மாவைச் சந்திக்க ஒரு சமயம் பாராளுமன்ற உறுப்பினர் லார்டு லோர்தியான் வந்தார். வந்தவரை வரவேற்று மகாத்மா அமரச் சொன்னார். அங்கே ஒரே ஒரு நாற்காலிதான் இருப்பதைக் கண்ணுற்ற லார்டு லோர்தியான், 'உங்களுக்கு?' என்றார். காந்தியடிகள் "நான் தரையில் அமர்வேன். நீங்கள் உட்காருங்கள்" என்றார்.

"அப்படியானால் நானும் தரையில் உட்காருகிறேனே?" என்றார் லோர்தியான்.

"கூடாது" என்றார் காந்திஜி. "நீங்கள் தரையில் அமர்ந்து பழக்கப்பட்டவர் அல்ல. அவ்வாறிருக்க, நான் உங்களைத் தரையில் உட்காரச் சொன்னால் அது உங்களுக்கு ஹிம்சையாக இருக்கும். என் அஹிம்சைக்கொள்கை அதற்கு இடம் தரவில்லை. அதற்காகத்தான் உங்களுக்கு நாற்காலி போடச் சொன்னேன்!"

பொள்ளாச்சி திரு நா. மகாலிங்கம் நடத்திய வள்ளலார்-காந்தி விழாவில் மேலும் இரு உண்மைக் கதைகளையும் சொன்னார் செங்கல்வராயன், அண்ணல் காந்தியின் அஹிம்சை தத்துவம் எவ்வளவு ஆழமானது என்பதை விளக்க:

ஒரு நாவிதர்:

ஒரு சமயம் ஒரு நாவிதர் வெள்ளைக்கார கலெக்டர் திரு பட்லருக்கு முக க்ஷவரம் செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயம் பார்த்து ஒத்துழையாமை இயக்கத்தினர் சிலர் சாலையோடு ஊர்வலமாகச் சென்றனர். அவர்கள் எழுப்பிய கோஷங்கள் காதில் விழவும் அந்த நாவிதர் கலெக்டருக்கு க்ஷவரம் செய்து கொண்டிருந்ததைப் பாதியில் நிறுத்தி விட்டு எழுந்து போய்விட்டார்.

பட்லர் ஒன்றும் புரியாமல் என்ன காரணம் என்று கேட்டு வர தமது வேலையாளை அனுப்பினார். காந்திஜி வெள்ளைக்காரர்களுடன் ஒத்துழைக்கக் கூடாது என்று கட்டளை இட்டுள்ளதை நாவிதர் வேலையாளுக்கு விளக்கினார். உடனே வேலையாளும் "நான் இனி கலெக்டரிடம் வேலை செய்யப் போவதில்லை" என்று அமர்ந்து விட்டார். காத்திருந்து அலுத்துப்போன கலெக்டர் பட்லர் தமது காரியதரிசியை அனுப்பிப் பார்த்து வரச் சொன்னார். கலெக்டரின் காரியதரிசியும் மற்ற இருவருடன் கூடவே நின்றுவிட்டார்.

"கலெக்டருக்கு அரை குறை முகக்ஷவரம்" என்ற செய்தி பத்திரிகைகளில் வந்துவிட்டது. அதைப் படித்த காந்தியடிகள் ரொம்ப வருத்தப்பட்டார். தமது அஹிம்சைக்கொள்கையை யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே. கலெக்டர் பட்லர் பாதி முக க்ஷவரத்தோடு எத்தனை அவஸ்தைப் பட்டிருப்பார்? இதுவா அஹிம்சை? என்று மனம் வருந்தி அம் மூவரின் செயலுக்காகவும் தாமே மன்னிப்புக் கேட்டுக் கடிதம் எழுதினார் பட்லருக்கு.

ஒரு யோசனை:

இந்தியா சுதந்திரம் பெறும் நேரம் நெருங்கிவிட்டது. ஆகஸ்ட் 15ம் தேதி பிரிட்டிஷ் கொடியை இறக்கி மூவர்ணக் கொடியை ஏற்ற வேண்டும் - செங்கோட்டையில். ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல், மௌலானா அபுல்கலாம் ஆஸாத் மூவரும் யோசிக்கிறார்கள். 'யார் சுதந்திர இந்தியாவின் கொடியை முதன் முதலில் ஏற்றுவது?' முடிவு எடுக்க முடியாமல் காந்திஜியிடம் செல்கிறார்கள்.

விஷயமறிந்ததும் காந்திஜி கேட்கிறார்: "நீங்களுமா இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை? மவுண்ட் பேட்டன் பிரபுவே நள்ளிரவில் பிரிட்டிஷ் கொடியை இறக்குவார். மூவர்ணக் கொடியையும் அவரேதான் ஏற்ற வேண்டும்."

மகாத்மா இப்படிச் சொன்னதும் தலைவர்கள் உடனே புரிந்து கொண்டார்கள். யூனியன் ஜாக் கொடியை நாம் இறக்குவது பிரிட்டிஷாருக்கு மனக் கஷ்டம் அளிக்கும். அது ஹிம்சை. அதோடு சுதந்திர இந்தியாவின் கொடியை ஏற்றும் பணியையும் நம்மை அடிமைப்படுத்தி வந்த பிரிட்டிஷாரின் ராஜப் பிரதிநிதியிடமே தந்து கௌரவிப்பதன் மூலம் நமக்குப் பிரிட்டிஷார் மீது வெறுப்பே இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும்!

-கே. ராமமூர்த்தி

எம்.ஜி.ஆரைக் கதற வைத்த ஸ்ரீதேவி.



✖ எம். ஜி. ஆர்



✖ ஸ்ரீதேவி

● மயிலை சாஸ்திரி ஹாலில் கவிஞர்கள் சம்பந்தப்பட்ட விழா. அழைப்பிதழில் அச்சிடப்பட்டுள்ள 'கவிதாயினி' என்பது தன்னைக் குழப்புகிறது என்றார் தலைமை வகித்த சிற்பி பாலசுப்பிரமணியம். அடுத்து வந்த நிர்மலா சுரேஷ் அந்தப் பெயர் தன்னையும் குழப்புகிறது என்றார். வந்திருந்தவர்களும் குழம்பினார்கள். கடைசிவரை 'கவிதாயினி'யை ஒருவரும் விளக்கவில்லை.

● இலங்கையின் வட பகுதியை ஆண்ட தமிழ் மன்னன் ஏலேலோ சிங்கன். அம்மன்னனுக்குக் கடல் பயணத்தில் மிகவும் விருப்பம். கடலில் பல சாதனைகள் புரிந்த அம்மன்னன் கதையைக் கட்டுமரத்தில் பயணம் செய்வோர் பாடிக்கொண்டே போவார்களாம். அது மருவி, கட்டுமரப் பயணத்தில் 'ஏலேலோ ஐலேசா!' பாடும் பழக்கம் வந்ததாம் — அமைச்சர் காளிமுத்து கூறியதாய்ச்சொன்னார் ஒருவர் அ.தி.மு.க. பொதுக் கூட்டத்தில்.

● அண்ணா அறக்கட்டளை சார்பில் அண்ணா விருது வழங்கும் விழா மயிலை மாங்கொல்லையில். 'எம். ஜி. ஆருக்கு ஜோடியாய் நடிக்க முடியாமல் போனது தனக்குப் பெரும் குறை' என்று நாத் தழுதழுக்கச் சொன்னார் ஸ்ரீதேவி ''ஸ்ரீதேவியின் நடிப்பைப் பார்த்து நான் கண்ணீர் விட்டுக் கதறியிருக்கிறேன். அத்தகைய உருக்கமாக நடிக்கிற திறமைகொண்ட நடிகை ஸ்ரீதேவிக்கு இன்னும் தேசிய விருது கிடைக்காதது எத்தனை வருத்தமளிக்கிறது தெரியுமா?'' என்று உருகினார் எம்.ஜி.ஆர்.

● அமைச்சர் நெடுஞ்செழியன் ஒரு விழாவில் சொன்னார்: ''எம். ஜி. ஆருடன் டாக்டர் பட்டம் பெற்ற விஞ்ஞானி சந்திர சேகர், இப்போது நோபல் பரிசு பெற்றிருக்கிறார். அதே போல நம் முதல்வரும் நோபல் பரிசு பெறும் நாள் தொலைவில் இல்லை!''

● டாக்டர் விருதுபெற்ற எம்.ஜி. ஆருக்குப் பாராட்டு விழா. ஒரு நாள் முழுக்க நிறைய நிகழ்ச்சிகள். ஆனால் தலைவர் முன்னுரை முடித்து கவர்னர் குரானா புறப்பட்டதும், அவ்வை நடராஜன் ''இப்போது தேசிய கீதம்'' என்று சொல்ல, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. கவர்னர் சென்றதும், நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இது எப்படி இருக்கு?

● புஷ்கின் கிளப் சார்பில் டால்ஸ்டாயின் 155வது பிறந்ததின விழா. கண் சிவந்தால் மண் சிவக்கும் டைரக்டர் ஸ்ரீதர் ராஜன் ஆவேசமாய்ப் பேசியதன் விளைவு ஒரே கசமுசா. ''மாஸ்கோ பட விழாவுக்கு நம் படம் போக வேண்டுமானால் இங்கே கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுக்கவேண்டியதை தள்ளியே ஆகவேண்டிய நிலை'' என்று அவர் குறிப்பிட்டதுதான் கசமுசாவுக்குக் காரணம்.

-சின்னக் கொலம்பஸ்

✖ நெடுஞ்செழியன்



✖ குரானா



✖ அவ்வை நடராஜன்



கூட்டுறவில் சேருங்கள்


**உங்கள் வீட்டிற்குத் தேவையான
தரமான பொருட்கள்
நியாய விலையில்
சரியான எடையில்
சீராகப் பெறவேண்டுமா?**

கூட்டுறவுப் பண்டகசாலைகளும்
சிறப்பங்காடிகளும் உங்களுக்கு
உதவக் காத்திருக்கின்றன.

இன்றே உறுப்பினராகச் சேருங்கள்!



**தமிழ்நாடு
கூட்டுறவு
ஒன்றியம்
சென்னை**


வருகிறது பஞ்சாயத்து தேர்தல்
பஞ்சாயத்து தேர்தல் ஒத்திவைப்பு
வா சார் வா!.. இந்திரா தாயத்து கட்டிக்கோ.. பசி வராது.. கஷ்டம் வராது.. பணம் கொட்டும்.. ரெண்டு லட்சம் பேர் கட்டிக்கோ!.. இல்லேன்னு ரத்தம் கக்கி செத் போவே!.. வா சார் வா!..
தமிழ் நாட்டில் இரண்டு லட்சம் உறுப்பினர்களைச் சேர்க்க இ.காங்கிரஸ் தீவிர முயற்சி மேற்கொள்ளப் போகிறது!


ஜெயவர்த்தன காமன்வெல்த் மகாநாட்டிற்கு வரும்போது இந்திராவுடன் பேச்சு வார்த்தை நடத்துவார் என்று எதிர்-பார்க்கப்படுகிறது!

கல்கி

1983 நவம்பர் 13
ருத்ரோத்காரி ஐப்பசி 27
மலர் : 42 இதழ் : 15



கிரெனடா

சின்னஞ் சிறிய கிரனெடா தீவு திடீரென்று உலகப் பிரச்னையைத் தோற்றுவித்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் என்றும் கரீபியன் தீவுகள் எனவும் அழைக்கப்படும் ஒரு கொத்துத் தீவுகளில் ஒன்றான கிரெனடா, தென் அமெரிக்க கண்டத்தில் வெனிஸுலாவுக்கு வடக்கே உள்ளது. அமெரிக்கத் துருப்புக்கள் இத்தீவுக்குள் நுழைந்திருப்பதானது உலக யுத்தத்தையே தூண்டி விடலாம் என்பதால் அகிலமே கவலையோடு நோக்குகிறது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைத் ''துரதிர்ஷ்ட வசமானது'' என அதன் நேச நாடுகளும் ''கண்டனத்துக்குரியது'' என ஏனைய நாடுகளும் வர்ணிக்கின்றன. நடந்தது என்ன?

கிரெனடாவில் பிஷப் என்பவர் பிரதமராயிருந்தார். அவர் சோஷலிஸ்ட் தான் என்றாலும் சமீப காலமாக அவர் சோஷலிஸத்தில் நம்பிக்கை இழந்து வந்தார். அமெரிக்கா பக்கமாகத் திசை திரும்பும் அவரை ஒழித்துக்கட்டி, தலையாட்டிப் பொம்மையாக ஹட்ஸன் என்பவரை நியமிக்க ருஷ்யாவும்-கியூபாவும் விரும்பியதாகக் கூறப்படுகிறது. இது எவ்வாறாயினும் ஒரு சதித் திட்டத்தின் விளைவாகப் பதவிக்கு வந்தார் ஹட்ஸன்; மக்களின் ஆதரவை வெகுவாகப் பெற்றிருந்த பிஷப்பும் அவரது சகாக்களும் படுகொலை செய்யப்பட்டனர். கூடவே தம்மைப் பதவியில் ஸ்திரப்படுத்திக் கொள்ள மாஸ்கோ — கியூபா உதவியை நாடினார் ஹட்ஸன்.


இதனால் இதர மேற்கிந்தியத் தீவுகளில் ஆள்வோர் பெரும், கலக்கமடைந்தனர். ''கிழக்குக் கரீபியன் நாடுகளின் கூட்டமைப்பு'' அமெரிக்க உதவியை நாடியது. அந்நாடுகளின் ராணுவத்துடன் அமெரிக்க ராணுவமும் கிரெனடாவுக்குள் புகுந்தது. கிரெனடாவில் அமெரிக்கர்களும் பலர் இருந்ததால் அவர்களைப் பாதுகாக்கவும் செல்வதாகக் கூறிக்கொள்ள முடிந்தது. நெடுங் காலமாகவே கட்டடப் பணியாளர்கள் என்று கூறிக் கொண்டு கிரனெடாவுக்குள் பல கியூபன் ராணுவத்தினர் ஊடுருவியிருந்தனர். கியூபன் ராணுவ அதிகாரிகள் பலரும் ''ஆலோசகர்கள்'' என்ற பெயரில் கிரெனடாவில் இருந்தனர். இப்போது இவர்கள், உள்நாட்டுப் படையுடன் சேர்ந்து அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க்கின்றனர். இவர்களை வெளியேறுமாறு அமெரிக்கா ஆணையிட அதை ஏற்க மறுக்கின்றனர்.

'பிற தேசங்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடலாமா?' என்றால், 'முதலில் தலையிட்டது ருஷ்யா — கியூபாதான்; நாங்கள் அழைப்பின் பேரில் சென்றோம்' என்கிறது அமெரிக்கா. ருஷ்யா ஆப்கானிஸ்தானில் புகுந்தபோதும் அழைப்பின் பேரில் சென்றதாகத்தான் கூறியது. ஆனால் இப்போது அது ஆக்கிரமிப்பாகவே ஆகிவிட்டது. அது போலன்றித் தற்போது அமெரிக்கா எவ்வளவு சீக்கிரம் கிரெனடாவை விட்டு வெளியேறுகிறதோ அவ்வளவுக்கு அதற்கும் நல்லது; உலக சமாதானத்துக்கும் நல்லது.

அமெரிக்கச் செல்வாக்கு மிகுந்துள்ள வட்டாரங்களில் ருஷ்யா தலையிட்டு, கம்யூனிஸ ஆட்சிகளை ஸ்தாபித்து, தலையாட்டிப் பொம்மைகளாகத் தலைவர்களை நியமிப்பதை அமெரிக்கா விரும்பாததால் இந்தப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது. இதற்கு மறுபுறமாக, தனது செல்வாக்கை உயர்த்திக்கொள்ளும் நோக்கில் சர்வாதிகாரிகளுக்குக்கூட ஜனநாயக அமெரிக்கா துணை நிற்பதைக் காண்கிறோம். ஆக, வல்லரசுகள் ஈடுபடும் வல்லமைப் போட்டியில், பலவீனமான தலைமையை உடைய சிறு நாடுகள் பல பலியாகின்றன. இவ்வாறு பொறி பறக்கும் ஒவ்வொரு தடவையும் அது பெருந்தீயாக மூளக் கூடாதே என்று உலகம் கவலைப்பட்டுக் கையைப் பிசைய நேர்கிறது.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்


அபிமானவல்லி



கி.ராஜேந்திரன்

அத்தியாயம் 2

பல்கலைச் செல்வி



திருப்புறம்பயத்தில் ஒரு கற்றளி எழுப்புவதென மாமன்னர் ஆதித்தன் தீர்மானித்தபோது அப்பணியை மேற்பார்வையிட விக்கியண்ணனை அனுப்பினார். தமக்குப் போரில் மாபெரும் வெற்றியையும் சோழ ராஜ்யத்தையும் ஈந்த திருப்புறம்பயம் ஈசனுக்குத் தாமே அருகிலிருந்து தொண்டாற்ற வேண்டும் என்ற ஆசைதான் ஆதித்தனுக்கு. ஆனால் அரசாங்க அலுவல்கள் அவரைத் தஞ்சைக்கு மட்டுமின்றிப் பிற இடங்களுக்கும் அடிக்கடி ஈர்த்தன. புதிதாக உருவாகியிருந்த சோழ ராஜ்யத்தை உறுதியான கரத்துடன் நிர்வகிக்க வேண்டியிருந்தது. ஆகவே விக்கியண்ணன் அவர் பிரதிநிதியாகச் சென்றான்.

அங்கேதான் முதன் முதலாக அபிமான வல்லியைச் சந்தித்தான் விக்கியண்ணன். தகப்பனும் பெண்ணுமாக ஒரு பெரிய பாறை முன் நின்று கொண்டிருந்தார்கள். அதில் ஒரு தூணை எவ்விதம் செதுக்கலாம் என்று தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர். கோயில் பணி தொடங்கியதுமே நாலு திசைகளிலிருந்தும் சிற்பிகள் திருப்புறம்பயத்துக்கு வந்து சேர்ந்தனர். கொங்கு நாட்டிலிருந்து வந்த சிலருள் இருவர்தான் தந்தையும் மகளுமான இவர்கள். குதிரை ஏறி வந்த விக்கியண்ணனைக் கவனிக்காமலேயே இருவரும் உரையாடலைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். இது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. தொண்டையைக் கனைத்தான். பலனில்லை. அவர்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. தனக்காக இல்லாவிட்டாலும் தன் பதவியை மதிக்க வேண்டாமா என்று நினைத்தான் விக்கியண்ணன். ஆனால் அதே சமயம் கடமையில் அவர்களுடைய மன ஈடுபாடு அவனை நிதானிக்கச் செய்தது. பேசுவதை நிறுத்தி அந்தப் பெண் ஒரு காவிக் கட்டியை எடுத்துக் கொண்டு அந்தப் பாறை மீதாக வலக் கரத்தை ஓட விட்டாள். நான்கைந்து கோடுகளில் தூண் வடிவம் தோன்றிவிட்டது. மேலும் சில கை அசைவுகளில் அதில் செய்யப்பட வேண்டிய சித்திர வேலைப்பாடுகள் தெரிந்தன. கீழ்ப் பகுதியில் அவளது வலக் கரம் ஒரு மந்திர மாயம் போல் இயங்கவும் கணபதி புலனானார். அவள் ஆற்றலை ஆச்சரியத்துடன் உணர்ந்து இமை கொட்டாமல் குதிரை மீது அமர்ந்திருந்தான் விக்கியண்ணன்.

''எதிரெதிர்ப் பக்கங்களில் கணபதியையும் முருகனையும் செதுக்கலாம். மற்ற இரு திசைகளில் ரதி மன்மதன் உருவாகட்டுமே'' என்றாள்.

''என்ன, ரதி, மன்மதனைப் பிரித்து ஒருவருக்கொருவர் கோபத்துடன் முதுகைக் காட்டிக் கொண்டிருக்கலாம் என்கிறாயே?'' உரக்கக் கேட்டவாறே விக்கியண்ணன் குதிரையை விட்டிறங்கினான்.

அந்தப் பெண் சரேலென்று திரும்பிப் பார்த்தாள். 'யார் என்னுடன் விவாதத்துக்கு வருவது?' என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை. விக்கியண்ணனே சற்றும் எதிர்பாராத அளவில் ஓர் அழகுத் தாக்குதலால் அதிர்ச்சிக்குள்ளானான். அந்த எழிலின் வீரியத்தைத் தாங்கும் சக்தியைப் படிப்படியாக வளர்த்துக் கொள்ளச் சற்று நேரம் பிடித்தது அவனுக்கு. அதன் பின்னர், ''சிற்பியாரே! ரதியின் வடிவத்தைச் செதுக்க உமக்குக் கற்பனை வளம் தேவையில்லை; உமது மகளை எதிரே இருத்திக் கொண்டு அவளைப் பார்த்தே சிலை வடிக்கலாம்!'' என்றான்.

மன்னரின் நன்மதிப்பை மட்டுமின்றி நட்பையும் பெற்ற உயர் அதிகாரி என்ற துணிவில் அவள் மேனியை அவன் கண்கள் அங்கமங்கமாகப் பரிசோதித்து 'ரதியே தான்' என்று உறுதி செய்து கொண்டன. செழுமையான வளர்ச்சி காணப்பட்டாலும் அவளுக்குப் பதினாறு வயதுக்கு மேலிருக்க முடியாது என்று அவளது முதிர்ச்சியடையாத முகமும், குறும்புப் புன்னகையும் அப்போது குவிந்த பட்டுக் கன்னங்களும் உணர்த்தின. மை தீட்டிய விழிகள் அவனைத் தைரியமாக மட்டுமின்றிக் கோபம் எட்டிப் பார்க்கவும் நோக்கின. தங்கள் வேலைகளையெல்லாம் மேற்பார்வையிட மாமன்னரால் அனுப்பப் பட்டவனாயிற்றே என்ற அச்சம் சிறிதும் அவளிடம் காணப்படாதது சிறுபிள்ளைத்தனம் இன்னும் மாறவில்லை என்பதைக் காட்டியது. அவளிடம் பேச முற்படு முன் ஒரு நெடுமூச்சில் நிமிர்ந்தெழுந்த நெஞ்சகங்களும் உயர்ந்த கழுத்தும் வாலிபச் செருக்கின் சிகரத்தைச் சுட்டின.

கைவளைகள் குலுங்க அவள் போலி மரியாதை காட்டிக் கரம் கூப்பி அபிநயித்தாள். ''உங்களுக்கு ஏமாற்றமளிக்க நேர்ந்ததற்கு வருந்துகிறேன் ஐயா! ரதியின் வடிவத்தைச் செதுக்கப் போவது என் தந்தையல்ல, நான்தான்! எனவே என் வடிவில் சிற்பம் அமைய வாய்ப்பில்லை!''

''ஏன் இல்லை? உன் வடிவத்தைப் பிரதிபலிக்க மெருகேற்றப்பட்ட வெள்ளித் தகடு ஒன்றை உன் எதிரே வைக்கிறேன். அதைப் பார்த்தவாறே நீ செயல்படலாம். திருப்தியாக அமைந்தால் அந்த வெள்ளியை உனக்கே பரிசாகவும் அளிக்கிறேன்!''

இதனால் மேலும் கோபம் கொண்டவளாக அவள் சிவந்த உதடுகளைக் குவித்து அசைத்து அழகு காட்டியதானது அவள் மனத்தால் இன்னும் விளையாட்டுப் பருவத்தினளே என்பதை நிச்சயப்படுத்தியது. தீப்பொறி பறக்க அவனைப் பார்த்துவிட்டுத் திரும்பியவள் மேலும் பேச விரும்பாது உளியையும் சுத்தியலையும் எடுத்துப் பாறையைச் செதுக்க ஆரம்பித்தாள். அவள் ஆத்திரம் தான் காரணமோ அல்லது விதி வசத்தால் நிகழ்ந்ததோ எவ்வாறானாலும் உளி முனையிலிருந்து சிதறிப் புறப்பட்ட ஒரு கல் துகள் நேராக விக்கியண்ணனின் இடக் கண்ணில் பாய்ந்து விட்டது.

'ஆ!'வென்றலறிக் கண்களைப் பொத்திக் கொண்டாலும் இமையை மூடவும் முடியாமல் மூடாதிருக்கவும் முடியாமல் தவித்துத் துடித்தான். அவன் கூக்குரல் கேட்டு அவன் ஆணைக்குட்பட்டிருந்த வீரர்களும் அக்கம் பக்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சிற்பிகளும் ஓடோடி வந்து சூழ்ந்து கொண்டனர். எல்லோருக்குமே அவனுடைய செல்வாக்குத் தெரியுமாதலால் அவனை நெருங்கவும் பயந்து அருகில் வராதிருக்கவும் அஞ்சி நடுங்கினார்கள். ''மருத்துவனை அழையுங்கள்! தண்ணீர் கொண்டு வாருங்கள்! கண்ணிலே ஊதுங்கள்!'' என்று தலைக்குத் தலை பிறரை உத்தரவிட்டார்களே தவிர, தாங்கள் வாளாவிருந்தார்கள்.

இச்சமயம் ''விலகுங்கள்'' என்று அதிகாரக் குரல் எழுப்பினாள் நங்கை அபிமானவல்லி. அவளிடமிருந்து யாருமே ஓர் ஆணையை எதிர்பார்க்கவில்லையாதலால் அது காரணமாகவே துணுக்குற்று அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். விக்கியண்ணனும் தனக்கு யாரால் உபாதை ஏற்பட்டதோ அவளிடமே தன்னை ஒப்படைத்துக் கொள்ளத் தீர்மானித்தவனாகக் காணப்பட்டான். அவளுடைய அதிகாரத் தொனியே அவளுக்கிருந்த தன்னம்பிக்கையையும் விக்கியண்ணனுக்குத் தன்னால் உதவ முடியும் என்ற குறிப்பையும் அனைவரும் அறியச் செய்தது.

விக்கியண்ணனை அணைத்தவாறு அழைத்துப் போய் ஒரு பீடத்தில் அமர்த்திப் பக்கத்தில் தானும் உட்கார்ந்து கொண்டாள். அவன் உடலைச் சாய்த்துத் தன் மடிமீது கிடத்திக் கொண்டாள். கன்னத்தில் கட்டைவிரலையும், துடிக்கும் இமையில் ஆள்காட்டி விரலையும் பதித்துக் கண்ணை அகல விரித்தாள். கண்ணில் குத்தியிருந்த கல்லைச் சிறிய சாமணத்தின் உதவியுடன் பற்றி நொடிப் போதில் பிடுங்கி எறிந்தாள்.

வேதனை அளவுக்கு மிஞ்சியே இருந்தாலும் அதேபோதில் வாளிப்பான அவள் மடியின் மிருதுத் தன்மையையும் நடுக்கம் சிறிதும் இல்லாத அவள் கரங்களின் வளமையையும்

ஒருவர்: ''ஏன் சார், நீங்க உங்கள் தொகுதியில் எந்த முன்னேற்றத்திற்கும் பாடுபடவில்லை?''

எம். எல். ஏ.: ''ஏன் வம்பு! 'அடுத்த தேர்தலில் ஓட்டு வாங்கத்தான் இப்படிச் செய்கிறார்' என்று எதிர்க்கட்சி குற்றம் சாட்டும்.''

கே. எஸ். கணபதிசுப்பிரமணியம்.



வெண்மையையும் அவன் அனுபவிக்கத்தான் செய்தான். இதற்குள் அவள் தகப்பன் சிவநேசன் சற்றுத் தொலைவிலிருந்த குடிலுக்குச் சென்று சில பச்சிலைகளைக் கொணர்ந்திருந்தான். அவற்றின் சாற்றைக் கண்ணில் பிழிந்ததும் எரிச்சல் நொடிப் போதுக்கு அதிகரித்தது. அடுத்த கணத்தில் மறைந்து குளிர்ச்சி நிலவியது. ''சற்று நேரம் கண் மூடியிருங்கள்'' என்றாள்.

''அது ரொம்பக் கடினம்'' என்றான். மற்றவர்கள் வேதனையால் அவன் அப்படிப் பேசுவதாகவே எண்ணினார்கள். ஆனால் அவளுக்குப் புரிந்தது. முகம் மெல்லச் சிவந்தது. ''எழுந்திருக்கலாம்'' என்றாள்.

''என்ன அவசரம்? எரிச்சல் இன்னும் அடங்கவில்லை'' என்றான்.

''அப்படியானால் கல் வெளியே வரவில்லை என்று அர்த்தம். ஆழப் பதிந்திருப்பதால் ரண சிகிச்சை தேவைப்படுகிறது என்று பொருள். கூரிய கத்தியொன்றை நெருப்பில் காய்ச்சி எடுத்து வருகிறீர்களா அப்பா?''

''வேண்டாம். அதற்கு அவசியமில்லை'' என்று அவசரமாகச் சொன்னான். ''எரிச்சல் படிப்படியாகக் குறைந்துதான் வருகிறது. இன்னும் சற்று நேரத்தில் முழுமையாகக் குணமாகிவிடும்.''

அவள் அவனை ஒதுக்கிவிட்டு எழ முயன்றான். முடியவில்லை. மற்றவர்கள் இதை நாடகம் என்று உணரத் தலைப்படு முன் அவனாகவே எழுந்து விலகினான்.

''ஐயா! அபிமானவல்லியை மன்னித்து விடுங்கள். அறியாப் பெண்; தவறிழைத்து விட்டாள்'' என்றார் தந்தை சிவநேசன்.

''ஆமாம், உங்கள் பார்வையைத் திரும்ப அளித்தது என் தவறுதான்'' என்று அபிமானவல்லி விக்கியண்ணனுக்கு மட்டும் கேட்க முணுமுணுத்தாள்.

''துடுக்காகப் பேசியே பழகி விட்டாள். தாயில்லாப் பெண். ஒரே மகளானதால் செல்லமாக வளர்த்து விட்டேன்.'' சிவநேசன் சமாதானம் சொல்லிக் கொண்டே போனார்.

''சிற்பியாரே! உம் மகள் ஒரு குற்றமும் புரியவில்லை. நீங்கள் அவளைத் தவறான முறையில் வளர்க்கவும் இல்லை. கல் துகள் என் கண்ணில் பாய்ந்தது ஒரு விபத்து. அபிமானவல்லி துடுக்காகப் பேசுவதில் என்ன அதிசயம்? மிகுந்த ஆற்றலுடையவர்களுக்குக் கலைச் செருக்கு ஓரளவு இருக்கவே செய்யும். அதை வளர விடாமல் வசப்படுத்த வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் கலைச் செருக்கு காரணமாகக் கலைஞரையே வெறுப்பது விரலில் புண் என்பதால் கையையே வெட்டிவிடுவது போலாகும்!''

''ஐயா! எத்தனை ஆழமான கருத்து!'' என்று அதிசயித்தார் சிவநேசன்.

''இது என் கருத்து அல்ல சிற்பியாரே! என் ஆண்டை கோதண்டராம ஆதித்தன் கற்றுத்தந்த பாடம். இதையெல்லாம் சொல்லித் தராமல் ஒரு கற்றளி எழுப்பும் பணியை மேற்பார்வையிட என்னை அனுப்பி வைப்பாரா?''

அன்றைய தினத்துக்குப் பிறகு விக்கியண்ணனும் அபிமானவல்லியும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். அவள் பல்கலைச் செல்வி என்பதைச் சீக்கிரமே புரிந்து கொண்டான். கல்லிலே சிற்பம் வடித்தாள்; பதப்படுத்தப்பட்ட துணியைச் சட்டங்களில் பொருத்தி வண்ண ஓவியங்கள் தீட்டினாள்; ஆடல் பாடல்களிலும் வல்லவளாய் இருந்தாள். அத்தனை கலைத் திறன்களையும் அவள் வெளிப்படுத்த அவன் ரசித்தான். ஓய்வு நாட்களில் தனது உயர் ஜாதி அராபியப் புரவி மீது அவளையும் அமர்த்திக்கொண்டு கற்றளி நடந்த இடத்திலிருந்து வெகு தூரம் அழைத்துப் போவான். மனித நடமாட்டம் அதிகம் இல்லாத ஆற்றங்கரைப் பகுதிகளில் அமர்ந்து உடன் கொண்டு வந்திருந்த உணவை மீன்களுக்கு அளித்துத் தாங்களும் உண்பார்கள். சிரித்துச் சிரித்துப் பேசுவார்கள்.

திருப்புறம்பயம் போர் நடந்த இடத்தை அவளுக்குக் காட்டினான் விக்கியண்ணன். அந்தப் பயங்கரப் போரை வர்ணித்து அவள் முகத்தில் தோன்றும் பாவங்களை ரசிப்பான். அந்தப் போரில் ஆதித்தன் மாவீரம் காட்டியதால் சோழ ராஜ்யம் எப்படி விரிவடைந்தது என்று விவரிப்பான்.

''நீங்கள் அந்தப் போரில் பங்கேற்றீர்களா என்ன?''

''இல்லை! இல்லை! சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தப் போரின்போது எனக்குப் பதினாறு வயது. நான் படையில் சேரத் துடியாய் இருந்தேன். ஆனால் என் தந்தை தடுத்துவிட்டுத் தாமே சென்றார்; திரும்பி வரவேயில்லை!''

''பாவம்'' என்று அவன் கரத்தை வருடினாள் அபிமானவல்லி, ஆறுதலாக.

''அவர் மட்டுமா? அவரைப் போல் எத்தனையோ ஆயிரம் பேர் மாண்டார்கள். யாருக்கென்று அனுதாபப்படுவது?''

''எதற்காக அந்த யுத்தம் நடந்தது? ஏன் வீரர்கள் ஒருவரை ஒருவர் கொன்றுகொண்டு சாகவேண்டும்? கலைகளையும் எங்களைப் போன்ற கலைஞர்களையும் மன்னர்கள் ஆதரித்து வந்தால் போதாதா?''

''போதாது கண்ணே! மானம் என்று ஒன்று இருக்கிறதல்லவா? சுமார் நாற்பத்தி நாலு ஆண்டுகளுக்கு முன்னால் விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றிச் சுதந்திர சோழ தேசத்தை நிறுவினார். இருந்தாலும் உள்ளங்கை அகலமே உள்ள தமது ராஜ்யத்தை விரிவாக்க வேண்டும்; அறுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, கரிகால் வளவன் காலம் போல் சோழ தேசம் மறுபடி மகோந்நத பேரரசாக விளங்க வேண்டும் என்று கனவு கண்டு வந்தார். அதற்காகப் பல யுத்திகளும் செய்தார். ஆனால் அவர் மகன் ஆதித்தன் தான் திருப்புறம்பயம் போரில் ஈடுபட்டுத் தந்தையின் கனவை ஓரளவு நினைவாக்கினார். இப்போருக்குப் பிறகுதான் ஒரு ராஜ்யம் என்று சொல்லிக் கொள்ளும் அளவில் சோழ தேசம் இருக்கிறது.''

''ஆக, விஜயாலயன் கனவு ஓரளவுதான் நிறைவேறியிருக்கிறது என்றுசொல்லுங்கள்!''

''அதில் சந்தேகமென்ன? அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த சோழப் பேரரசு

மறுபடி உருவாக வேண்டுமென்றால் அது சுலப சாத்தியமா? இன்னும் எத்தனையோ போர்கள் நிகழ வேண்டியிருக்கும்; எத்தனையோ உயிர்ப் பலிகள்... தியாகங்கள்...''

இதைக் கேட்டு அவள் மேனி சிலிர்ப்பதைக் கண்டு நிறுத்திக் கொள்வான் விக்கியண்ணன். பரியில் ஏறி இருவரும் சுற்றினி நடக்கும் இடத்துக்குத் திரும்பி வந்து சேர்வார்கள்.

இவர்கள் காதல் ஆதித்தனுக்குத் தெரிய வராமல் இல்லை. செவிகளுக்கு எட்டியும் நேரில் பார்த்து உணர்ந்தும் திருமணத்துக்கு மன்னர் அனுமதி வழங்கவில்லை. ''அவசரமென்ன? பிறகு பார்க்கலாம்'' என்று தட்டிக்கழித்து வந்தார். இது குறித்துச் சில வதந்திகள் கூடப் பரவின. 'ஆதித்தனுக்கு விக்கியண்ணன் மீது பொறாமை.' என்று இவன் காது படவே கூடச் சிலர் பேசினார்கள். விக்கியண்ணன் நம்பவில்லை. இப்போது நான்கைந்து மாதங்கள் அபிமானவல்லியை விட்டுப் பிரிந்து சேர நாடு சென்று வர நேர்ந்த போதும் விக்கியண்ணன் அவளை ஆதித்தனுக்கே அடைக்கலப் பொருளாக்கினான். தன் ஆண்டையிடம் அவ்வளவு நம்பிக்கை.

அபிமானவல்லி இப்போது ஒரு சாமானிய சிற்பியின் மகள் அல்ல. பல்கலைச் செல்வியாகிய அவள் இன்று ராஜ நர்த்தகி. அவளுக்கென்று தனி மாளிகை, வருவாய், பணியாளர்கள், காவலர்கள் எல்லாம் உண்டு. திருப்புறம்பயம் கோயில் கட்டிக் குடமுழுக்கு நடந்து முடிந்த சில காலத்துக்குள்ளேயே அவள் செல்வமும் செல்வாக்கும் வேகமாக வளர்ந்து விட்டன. மன்னர் மனம் வைத்தால் என்னதான் நடக்காது!

எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் விதம் விதமான கற்பனைகளுடன் தஞ்சை திரும்பியிருந்தான் விக்கியண்ணன். சேர நாட்டுப் பயணமும் அதன் குறிக்கோளும் வெற்றிகரமாக நிறைவெய்தியிருக்கதால் அதற்குப் பரிசாக அபிமானவல்லியை மனைவியாகப் பெறலாம்; மன்னர் இனியும் தடை கூற மாட்டார் என்று நம்பினான். அவரே தலையசைத்து விட்டால் பிறகு அபிமானவல்லியின் தந்தை சிவநேசனா குறுக்கே நிற்கப் போகிறார்?

இந்த எண்ணங்களோடு உற்சாகம் கொப்பளிக்க வந்த விக்கியண்ணன், ஒருவித உரிமையோடும் அபிமானவல்லியை ஆச்சரியத்தில் ஆழ்த்தி மகிழ்விக்கும் நோக்கோடும், பிறருடைய இடையூறு இன்றி அவளைத் தனிமையில் சந்திக்கும் ஆர்வத்தோடும் அவள் மாளிகையின் வாசல் பக்கம் செல்லாது மதில் தாண்டி, மரமேறி, மேன்மாடத்தில் குதித்தான். திரைச் சீலையை விலக்கி உள்ளே நுழைந்தான்.

''வல்லி! வல்லி!'' என்று மிருதுவாக அழைத்தான்:

கட்டிலில் உருவம் அசையவில்லை. 'அபிமானவல்லிதானா அது?' சந்தேகம் எழ, நிலை வாசலிலிருந்து விலகி நின்று நிலா ஒளி மஞ்சத்தின் மீது படரச் செய்தான். தூக்கி வாரிப் போட்டது. குப்பென்று வியர்த்து விட்டது. 'அபிமானவல்லியின் கட்டிலில் ஓர் ஆண்மகனா! அதிலும் இவன்...' அந்த முகத்தை நன்றாக அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. தஞ்சை மாநகரின் மிகப் பெரிய தனவணிகர்களுள் ஒருவன். சாத்தன் என்பது அவன் பெயர். 'இவன் இங்கு எதற்கு வந்தான்? அபிமானவல்லியின் மஞ்சத்தில் இவன் குளிருக்கு அடக்கமாகப் போர்த்திக் கொண்டு படுத்துறங்குவது எப்படி?'


''அபிமானவல்லி!'' என்று சந்தேகப் பேயின் குரல் விக்கியண்ணன் கண்டத்திலிருந்து பீறிட்டு எழுந்தது. கோபத்தால் உடம்பெல்லாம் நடுங்க சாத்தனைக் கண் விழிக்கச் செய்யும் உத்தேசத்துடன் அவன் உடலை மூடியிருந்த போர்வையை விருட்டென விலக்கினான் விக்கியண்ணன். சாத்தன் நெஞ்சிலே பாய்ந்திருந்த குத்தீட்டியின் மேல் பகுதியும் கைப்பிடியும் நிலவொளியில் பளபளத்தன!

திகைத்து நின்றான் விக்கியண்ணன். அதற்குள் அவன் பயங்கரமாக அலறித் தன்னை அழைத்தது கேட்டு அபிமானவல்லி ஒரு தீப்பந்தத்தை ஏந்தியபடி சதங்கைகள் ஒலிக்கப் பரபரப்புடன் ஓடிவந்தாள். மஞ்சத்தில் கிடப்பவனையும் அருகில் நிற்பவனையும் ஒருசேரப் பார்த்துவிட்டு, ''வீல்'' என்று பயத்துடன் கத்தினாள்.

ஒன்றன் பின் ஒன்றாய் எழுந்த இரண்டு அலறல்களைக் கேட்டு நான்கு திசைகளிலிருந்தும் காவலர்கள் ஓடிவந்தார்கள். 'தப்பி விரைவதா? நின்று எதிர்கொள்வதா?' என்று விக்கியண்ணன் தீர்மானிப்பதற்குள் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

''இது என்ன, இப்படி ஒரு காரியம் செய்து விட்டீர்கள்!'' என்று கண்ணீர் பெருக, நடுங்கும் குரலில் கேட்டாள் அபிமானவல்லி.

(தொடரும்)





அன்புள்ள வாசகருக்கு,
இந்தத் தீபாவளிக்கு ஒரு கொத்துக் குதிரைகளை வெள்ளோட்டம் விட்டிருக்கிறார்கள். சென்னை மைதானம் பரபரப்பில் திமிலோகப்படுகிறது.
ஜுர வேகம் பிடித்த மக்கள், தங்கள் அபிமானக் குதிரைகளின் பெயர்களை வாய்க்கு வாய் முணு முணுக்கிறார்கள். இது முதலில் வரும், அது முதலில் வரும் என்று ஹேஷ்யங்கள் கொடுத்து, அந்த ஹேஷ்யங்களுக்காகத் தங்கள் தலைகளை அடகுவைக்கத் தயாராய் இருக்கிறார்கள்.
வெள்ளோட்டக் குதிரைகளைக் கண்டோம். கொழுத்தவை சில, இளைத்தவை சில; மாறுபட்ட நிறங்களில் ரகங்கள். ஒவ்வொரு குதிரையாய்க் கணித்துப் பார்க்க உத்தேசம். பார்ப்போமா?
அதோ நட்ட நடுவில் வாலைத் தூக்கிக் கொண்டு வருகிறதே, அதை எடுத்துக் கொள்வோம்.

நாலு பேருக்கு நன்றி

தந்தை (தயாரிப்பாளர்) : **'லயன்' எஸ். கே. சுவாமிநாதன்**
தாய் (இயக்குநர்) : **எம். ஆர். ராஜாமணி**


ஒரு பொழுதுபோக்குக்காக அகப்பட்ட ஏமாளிகளை வேடிக்கையாய் ஏமாற்றிப் பார்க்கிற கதாநாயகன். ஏப்ரல் முதல் தேதியன்று ஒரு கல்யாணச் சத்திரத்தை வாடகைக்குப் பிடித்து, அல்லிபுரம் சுந்தரேசன் மகள் அருந்ததிக்கும் எனக்கும் கல்யாணம் என்று ஊரெல்லாம் பத்திரிகை அடித்து விநியோகிக்க, நிஜமாகவே இருக்கிற அல்லிபுரத்தின் சுந்தரேசன் மகள் அருந்ததியின் கல்யாணம் அந்தக் காரணத்தால் நின்று போகிறது. அத்துடன் சுந்தரேசன் (டெல்லி கணேஷ்) இருதயமும் நின்று போகிறது. அருந்ததி (பூர்ணிமா ஜெயராம்) கல்யாணப் பத்திரிகை விநியோகித்த பாபுவை (மோகன்) பழிவாங்க சென்னை வந்து, சத்திரத்து மானேஜர் (விஷ்ணு) வீட்டில் அடைக்கலம் புகுந்து அப்புறம்தான் தெரியுமே... கல்யாணம் நடக்கிறது.
பூர்ணிமா ஜெயராம் பழி வாங்குகிறார். கடைசியில் மோகன், விளையாட்டாய்க்கூட

மற்றவரை ஏமாற்றுவது தப்பு (கதையின் நீதி) என்று உணர்கிறோம்.
படுக்கைகள் இணைகின்றன! சுபம்!
கையாளப்பட்டிருக்கிற நாடக மேடைக் கதை திரைக்குப் புதிது.
அது புதிது என்று தெரிவதற்கு ஒரு அரை மணி நேரம் அபத்தமாய் எங்கெங்கேயோ சுற்ற வேண்டியிருக்கிறது.
கதாநாயகியை ரொம்பத்தான் தாமதமாய் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.
(அறிமுகப்படுத்தியிருக்கிற விதம் ஒரு புதுமைதான்)
ஒரு புன்முறுவல், ஒரு அழுகை, ஒரு வெட்கம் – இதுபோதும் என்று
பூர்ணிமா ஜெயராம் திருப்தி அடைந்திருக்கிறார். மோகனும் அதே அதே!
(மைனஸ் – வெட்கம். பிளஸ் + சண்டைக் காட்சி.) கதாநாயகன் ஆச்சே!
சத்திரத்து மானேஜர் கிஷ்மு, மோகனின் தந்தையாக சேது விநாயகம். இயல்பான நடிப்பு. ராணி பத்மினி, படத்தில் மின்னும் மின்மினி.
மற்றபடி கதையில் அவர் எதற்கு? ஒரு ஜிலு ஜிலுப்பிற்காகவா?
இப்போதெல்லாம் படங்களில் ஜொலிக்கும் அனுராதாவும் தேவையில்லை போல!
தவக்களை (முந்தானை முடிச்சு புகழ் என்று டைட்டில்) வந்து கையையும் காலையும் பரப்பினாலே ஜனங்கள் ரசிப்பார்கள் என்ற நம்பிக்கை வந்துவிட்டது.
இதிலும் வந்திருக்கிறார்.
எம். எஸ். வி. இசையை நன்றாகக் கொடுப்பது என்று சபதமே எடுத்துவிட்டாற் போலிருக்கிறது. இரண்டு பாடல்கள் எடுப்பாய்த் தொடுக்கப்பட்டிருக்கின்றன.
மோகன் தற்கொலை செய்து கொள்வதாய்க் காட்டுகிற இடம் – சஸ்பென்ஸா?
இருந்தாலும் உடைத்து விடலாமே! – கனவு என முடிக்கிற விதம் அப்பாடா என ஒரு ஆறுதல். டைரக்டருக்கு ஒரு ஷொட்டு!
நிற்க, மீதி குதிரைகளைப் பற்றி வருகிற வாரங்களில் ஆராய்வோமே. சரிதானே?

வந்தனங்களுடன்,
-ஜெயமன்மதன்

பி. கு: ஜெயமன்மதன் டிப்ஸ்; புஷ்டியான குதிரை. மூக்கு நீளமா, இல்லையா என்பது ஃபோட்டோ ஃபினிஷில் தெரிந்துவிடும்.

பட்டம் விட்டால் வனவாசம்; குதிரை மிரண்டால் சிறைவாசம்!



செய்தி வெடிகள்

● பணத்தைக் கொண்டு நாயை வாங்கிவிடலாம். ஆனால் அன்பால்தான் அதன் வாலை ஆட்டவைக்க முடியும். –ஒரு பொன்மொழி

★ நாம் அன்பு காட்டாதபோது, நம்மிடம் தங்கள் 'வாலை ஆட்டுகிறவர்கள்' மனிதர்கள்!

● "'பிட்ச்' தயாரிக்கும் முறை மாற வேண்டும்" என்று கான்பூர் டெஸ்ட்டில் தோற்ற கபில்தேவ் கூறினார். –செய்தி

★ "ஆடத் தெரியாத கிரிக்கெட் ஆட்டக்காரர் 'பிட்ச்' கோணல் என்றாராம்" என்று புதுப் பழமொழியை அளித்ததற்காக அவருக்கு நன்றி.

● மருத்துவ, எஞ்சினீரிங் மாணவர்கள் தேர்வில் வரலாறு காணாத லஞ்ச ஊழல் ஏற்பட்டு விட்டது. –மு. கருணாநிதி

★ லஞ்ச ஊழலுக்கு 'முன் வரலாறு' உண்டு என்பதை ஒப்புக்கொண்டமைக்கு நன்றி.

● எம். ஜி. ஆர். அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம். –ஒரு செய்தித்தலைப்பு

★ நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறும் என்ற நம்பிக்கையே இல்லாமல் கொண்டுவரப்படும் தீர்மானம்!

● அந்தக் கால எகிப்தியப் பெண்கள் தங்கள் தலையை மொட்டை அடித்துக் கொள்வதை அழகாகக் கருதினார்கள். –ஒரு தகவல்


★ இந்தக் கால எல்லா நாட்டுப் பெண்களும் தங்கள் கணவன்மார்கள் தலையை 'மொட்டை' அடிப்பதை'யே அழகாகக் கருதுகிறார்கள்!

● பட்டம் பறக்க விட்டால் சிறை தண்டனை அளிக்கும் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. –சென்னைச் செய்தி

★ இந்தக் காகிதப் பட்டங்களைப் போல சிலர் டாக்டர் பட்டங்களைப் பறக்க விட அதைப் பிடிக்கச் சிலர் ஓடுகிறார்களே!

-மகரம்





சில



பல

மீ.ப.சோமு



இந்த மாதம் வெளிவந்த தருமபுர ஆதீனத்து 'ஞான சம்பந்தம்' இதழின் அட்டைப் படம் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. கண்களை நம்ப முடியாமல் மூடி மூடி விழித்தேன். திருவாவடுதுறை, தருமபுரம் இரண்டு ஆதீனத் தலைவர்களும் ஒன்றாகக் காட்சி தருகிறார்கள்! இதைப் பார்த்த பிறகுதான் கடந்த வாரம் அப்படி மழை கொட்டியதன் காரணம் எனக்குப் புரிந்தது.

இரண்டு ஆதீனங்களுக்கிடையில் இருந்து வருகிற உறவையும், அண்மைக் காலத்து நிகழ்ச்சிகளையும் பற்றி அறிந்துள்ள அனைவருமே என்னைப் போல வியப்பும், அதே சமயம் மகிழ்ச்சியும் அடைவார்கள்.

இன்று நாடு இருக்கும் நிலையிலே ஆதீனங்கள் தங்களுக்குள் "டூ" விட்டுக்கொள்வதும், நாட்டிலுள்ள சமயச் சண்டைகள் போதாதென்று தங்கள் சண்டைகளை நீதிமன்றத்துக்கே எடுத்துச் செல்வதும் கண்டு, மடாலயங்களின் மீது அன்பும் மதிப்பும் உடைய என்போன்ற பலரின் உள்ளம் புண்பட்டது. இந்தப் படத்தைப் பார்த்ததும் சற்று நிம்மதி உண்டாயிற்று. 'சற்று' என்று ஏன் சொல்கிறேன் என்றால், இந்த ஒற்றுமை இப்படியே நீடிக்கும்படியாக இடையில் உள்ள மகானுபாவர்கள் விட்டு வைக்க வேண்டுமே என்ற கவலைதான்! இதற்கு முந்திய திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவர்கள் பட்டத்துக்கு வந்த புதிதில் இது போலவே இருவரும் ஒற்றுமைக்கு வித்திட்டார்கள். ஆனால் விதை முளைக்கவில்லை!

சரி, பழைய கதைகள் வேண்டாம். தமிழகத்தில் உள்ள தொன்மையான இந்த இரண்டு ஆதீனங்களும் ஒருங்கிணைந்து, தமிழுக்கும் சமயத்துக்கும் தொண்டு செய்வதில் போட்டி போட வேண்டுமே தவிர, மற்ற சில்லறைப் போட்டிகளை மறந்துவிட வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன். இது நமக்கு மட்டுமல்ல, இன்றைய நிலையில் மடங்களுக்குமே நல்லது!

மிகுந்த மகிழ்ச்சி தருகிற இந்தச் செய்தியைப் பார்த்த கண்ணோடு இன்னொரு செய்தியையும் பார்த்தேன்.—மதுரை ஆதீன விவகாரம்!

நீதிமன்றத்துக்குப் போய்விட்ட சமாசாரத்தைப் பற்றி நான் ஏதும் மதிப்புரை செய்ய முனையவில்லை. இதற்கு யார் எப்படிப் பொறுப்பு என்ற ஆராய்ச்சியிலும் இப்போது புகவில்லை. ஆனால் தவச்சாலைகளான மடங்களையும், துறவிகளையும் புனித நிலையங்களான நமது ஆதீனங்களையும் பற்றிய என் பொதுக் கருத்துக்களை நேயர்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மடங்களையும், ஆதீனங்களையும் நிறுவிய நம் முன்னோர்கள் முட்டாள்கள் இல்லை. அரசியல் தெரியாதவர்களில்லை! நாட்டையும் தருமத்தையும் இரண்டையுமே ஆழத் தெரிந்தவர்களே அவர்கள். ஆகையால் யார் யார் எது எதைச் செய்ய வேண்டும் என்று வரையறைகள் செய்தார்கள்.

ஆதீனங்களின் அமைப்பு முறையில் நான் கொஞ்சம் பழைமையிலே பற்றுள்ளவன்.

காலத்துக்கு ஏற்ற உபாயமான மாறுதல்கள் தவிர, மடங்களுக்குள்ளே புரட்சிகளையோ புரட்டுக்களையோ விரும்பாதவன். கடல் கடந்த நாடுகளிலே மடாலயத் தலைவர்கள் தங்கள் மரபுகளையும் நெறிமுறைகளையும், சந்திப்புக்களையும் கூட எப்படிப் பாதுகாத்து வருகிறார்கள் என்பதை நேரிலே பார்த்த பிறகு, எனது பழைய கொள்கை மேலும் உறுதியாயிற்று. சட்ட மன்றங்களிலும் அரசியல் கட்சிகளிலும், சமூக நலக் கூடங்களிலும் தாராளமாகக் கலந்து கொள்வதற்குப் பொதுமக்களிடையே ஆயிரம் ஆயிரம் ஆட்கள் உண்டு. ஆனால் தவம் செய்வதற்கும், வழிபாடுகள் இயற்றுவதற்கும், சமுதாய நலத்துக்காகத் தங்கள் உடலையே வருத்திப் பலபல விரதங்கள் காப்பதற்கும், 'எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சி'லே ஆட்களைக் கோர முடியாது! யாரோ ஒரு ஞானி எங்கோ ஒரு மூலையில் தவம் செய்தால், அவர் பொருட்டு எல்லோருக்கும் மழைபொழிகிறது! யாரோ ஒரு ஆதீனகர்த்தர் எங்கோ ஒரு அறைக்குள்ளே நெறி பிசகாமல், ஒழுக்கந்தவறாமல் நியம முறைகளை இரவும் பகலும் கடைப்பிடித்தார் என்றால் நாட்டின் சட்ட மன்றங்கள் சரியாக நடக்கும்! இந்த நம்பிக்கை வேறு யாருக்கு இருக்கிறதோ இல்லையோ, சம்பந்தப்பட்ட துறவிகளுக்கு நிச்சயம் இருந்தாக வேண்டும்! அந்த நம்பிக்கையை அவர்கள் இழக்கும்போதுதான் ஆயிரத்தோடு ஆயிரத்து ஒன்றாகச் சேர வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது! அப்படிச் சேர்ந்து விட்டால் அவர்களையும் ஆயிரத்தோடு சேர்த்துத்தான் சமுதாயம் பார்க்கும். அவ்வாறே அவர்களை நடத்தும்! மரியாதைகளையும் தனிப்பட்ட பெருமைகளையும் எதிர்பார்க்க அவர்களுக்கு உரிமை கிடையாது. எலும்பைப் பெண்ணாக்கவல்ல ஒரு திருஞான சம்பந்தரும், காய்ச்சிய இரும்புக் குழம்பைப் 'பாதாம் கீரைப்' போலப் பருகக் கூடிய ஒரு சங்கரரும் எங்கு போனாலும் எப்படிச் சுற்றினாலும் மனித குலம் பய பக்தியோடு அவர்களை வணங்கும். ஆனால் ஒரு ஆதீனம் அல்லது வழிபாட்டு நியமத்தின் தலைவராகப் பொறுப்பேற்று விட்டால் அந்த நிலைமை வேறு. குருஞான சம்பந்தரும், நமசிவாய மூர்த்தியும், ஆதீனங்களை நிறுவிய மகான்களும் திருமூலரைப் போன்ற மாபெரும் ஞானிகளும் எந்த இலட்சியங்களைக் குருமார்களுக்கு வகுத்தார்களோ அந்த இலட்சியங்களைத் துறந்து நின்றால் ஆதி மகான்

வாசகர் கருத்து

இரும்பு குதிரைகள்



● பாலகுமாரன் சூடியுள்ள மகுடத்தில் மட்டுமல்ல, இந்தத் தொடரை வெளியிட்டுள்ள தங்கள் மகுடத்திலும் மற்றுமோர் மாணிக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

வேலூர்-6 இ. சந்தானம்

● ஆழ்ந்த தத்துவங்களையும், அற்புதமான குதிரை(புது)க் கவிதைகளையும், புதுமையான காயத்ரி, புதிரான விஸ்வநாதன் மூலம் வெளியிட்டிருக்கிறார் பாலகுமாரன்.

சென்னை-2 எம். பழனிச் செல்வம்

● மெர்க்குரிப் பூக்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு 'சதம்' போட்டிருக்கிறார் பாலகுமாரன்.

திருச்சி-20 மதுபாலிகா

● நாற்பத்திரண்டு வாரமும் பாலகுமாரனின் இரும்பு குதிரைகள் எங்கள் மனத் திரையில் வேகமாக ஓடியதென்றால் அதற்குப் பக்கபலமாக இருந்த ம. செ.யின் கதைக்கேற்ற படமும் ஒரு காரணம்.

வால்குடி ஆர். சிவராஜ்

● ''இரும்பு குதிரைகள்'' – ஒரு தத்துவப் பேழை. ஒரு கண்ணீர்ச் சித்திரம்.

சீர்காழி ஆபிப்பன்

● பாலகுமாரன் தனது இரும்பு குதிரைகளில் கவிதை என்னும் லோடு ஏற்றிச் சிரக 42 மைல்களைக் கடந்து வந்திருக்கிறார்.

வளவனூர் சி. ஆர். நாகராஜன்

● தங்கள் பத்திரிகையில் வெளிவந்த இரும்பு குதிரைகள் சரித்திரம் படைக்கும் என்று பார்த்தேன். பாலகுமாரன் முடிவை புல்லாணம் ஆக்கிவிட்டார்.

பாண்டிச்சேரி-1 என்.ஏ.ஜே. அன்னுமலை

● சிந்திக்க வைக்கும் ஒரு சிறந்த நாவலைப் படைத்த திரு பாலகுமாரனுக்குப் பாராட்டுக்கள் பல.

சென்னை-20 உமா ஸ்வாமிநாதன்


உழவர் பெருமக்களே!
விவசாய சேவைக்
கூட்டுறவுச் சங்கத்தில்
உறுப்பினராகச் சேர்ந்து விட்டீர்களா?
உழவுத் தொழிலுக்குக் குறைந்த வட்டியில் பயிர்க் கடன் பெறலாம்
துணைத் தொழில் புரிந்து கூடுதல் வருமானம் பெறக் கடனுதவியுண்டு
அவசரத் தேவைக்குக் குறைந்த வட்டியில் நகைக்கு கடன் கிடைக்கும்
வீட்டுத் தேவைக்கு நியாய விலையில் தரமான பொருட்கள் வாங்கலாம்
சிறிய விவசாயிகளுக்கும் ஆதி திராவிடப் பிரிவினருக்கும் சலுகைகள் உண்டு
குத்தகை தாரரும் பண்ணைத் தொழிலாளரும் கடன்பெற வசதியுண்டு
இன்னும் எத்தனையோ வசதிகள்!
அத்தனையும் பெற்று வளம்பெற
இன்றே
உறுப்பினராகச் சேருவீர்!
தமிழ்நாடு
கூட்டுறவு
ஒன்றியம்
சென்னை

பாரீஸில் முருகன் ஆராய்ச்சி

ஏ. சுப்பிரமணியன் 12 பட்டங்கள் பெற்றுள்ளார். ஆங்கிலம் பிரெஞ்சு தமிழ் அறிந்தவர். பாண்டிச்சேரியில் 25 வருடங்கள் ஆசிரியராக வேலை பார்த்துவிட்டு ஒரு சென்ட்ரல் ஸ்கூலில் ஹெட்மாஸ்டராக இருந்து பதவி ஓய்வு பெற்றவர். இவருக்கு பிரெஞ்சு பிரஜா உரிமையும் உண்டு. அதனால் இங்கு ரிடையர் ஆனதும் பிரான்ஸ் சென்று குடியேறினார். பாரிஸிலுள்ள பல்கலைக்கழகத்தில் மேற் படிப்பைத் தொடர எண்ணினார். ஆனால் அவருடைய புரொபசர், அவரை முருகக் கடவுள் பற்றி ஆராய்ந்து கட்டுரை சமர்ப்பிக்கச் சொன்னார். இந்தியா வந்தார். வழக்கம்போல், நமது மாநில அரசு அதிகாரிகள் அவருக்குப் பராமுகம் காட்டினர். தொல்பொருள் இலாகா விடமிருந்தும் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஆனாலும் மனம் தளராமல், தமிழ்நாட்டிலுள்ள பல கோவில்களுக்கும் சென்று, பல முருக சிற்பங்களை ஆராய்ந்து, எட்டு வருடங்கள் பாடுபட்டு பிரெஞ்சில் பாரீஸ் பல்கலைக் கழகத்திற்கு, 1500 பக்கங்களில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார். பல்கலைக்கழகத்தினர் அவரை நேரில் அழைத்துப் பல கேள்விகளை அது சம்பந்தமாகக் கேட்டுச் சோதித்தனர். கடைசியில், அவருடைய ஆய்வு ஒப்புக் கொள்ளப்பட்டு டாக்டர் பட்டமும் அளிக்கப்பட்டது. உலகிலேயே முருகர் மீது ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்ற ஒரே மனிதர் இவர்தான்...!



—ராஜேஸ்வரி.

களின் வாழ்த்தையுமே இழந்துவிட வேண்டியது தான்!

'நிலையில் இழியாது' ஒழுகவல்ல துறவிகளே இப்போதுள்ள சூழலில் நமது நாட்டுக்கு அவசரத் தேவை! அரசியல்வாதிகள் வண்டிக்கணக்கில் இருக்கிறார்கள். படித்தவரும், பண்டிதரும் அரசியலிலிருந்து ஒதுங்கி அல்லது ஒதுக்கப்பட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். இந்த நிலையில் இந்த நாட்டைக் காப்பாற்றக் கூடிய தெய்வத் திருவருளுக்காக முறையிட வேண்டியவர்கள் துறவிகளும், தவசீலர்களுமே! முறையிட வேண்டிய இடம் தெரு முனை இல்லை, வெள்ளிச் சாலையே!

நாடெங்கிலும் சமய நம்பிக்கையும், கடவுட் கோட்பாடும் சீர்குலைந்து விட்டதே என்று கண்ணீர் வடிக்கிறோம். ஆனால் இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம் யார்? தெய்வ நிந்தனை செய்வோர்கள் மட்டுமில்லை, தெய்வ வந்தனை செய்வோர்களுமே காரணம்! நம்பிக்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களே துறையை மறந்து செயற்பட்டால் நாடு என்ன ஆவது?

தருமபுர ஆதீனத்தில் இன்று ஆட்சி செய்கிற முனிபுங்கவர் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இந்த நுட்பங்களையெல்லாம் நன்கு உணர்ந்து, இந்தக் கட்டுப்பாடுகளை மதிப்பவராகவும், வழிபாடுசெய் நெறி பிசகாமல் நாளும் இயற்றுபவராகவும் விளங்கி வருவதை நான் அறிவேன். எல்லாருடைய வணக்கத்துக்கும் உரிய காஞ்சிப் பெரியவரின் தவ ஆற்றலை நாடு முழுதும் நன்கு அறியும். வேறு சில தலைவர்களும் இவ்வாறு நெறி காத்துத் தவ வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். இத்தகைய தவ ஞானிகள் மேலும் மேலும் அதிகரித்தால், தெய்வ நம்பிக்கையும், சமய மறுமலர்ச்சியும் தாமாகவே உதயமாகும். இன்றைய நிலையில் நமது நாட்டுக்குத் தேவை இந்த உதயம் தான்!

கடவுள் மனிதனாகப் பிறப்பது போலவே, மனிதன் கடவுளாகப் பிறப்புக் கொள்வதும் உண்டு. அத்தகைய தெய்வ ஆற்றலுடன் மனிதச் சட்டையிலே நடமாடிய தெய்வ மனிதர்களே மெய்கண்டாரும், திருமூலரும், சமய குரவர்களும், ஆதிசங்கரரும், மற்றும் பல மகான்களும்! தமிழகத்திலுள்ள அத்தனை மடாலயங்களையும், ஆதீனங்களையும் நிறுவிய ஆதி முதல்வர்கள் அனைவரும் மனித வடிவிலே தோன்றிய கடவுட் சித்தர்கள்! அவர்கள் நிறுவிய ஞான நிலையங்கள் அனைத்தும் அவர்கள் வகுத்துத் தந்த இலட்சியங்களை வளர்க்கும் களங்களாக, மாசின்றி, மாறுபாடின்றி விளங்கும்படி அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அந்த நிலையத் தலைவர்களின் தலையாய கடமையாகும். அந்த மகத்தான கடமையைச் செய்யும்போது அவர்களுக்குரிய பெருமையையும், மதிப்பையும், சிரந்தாழ்ந்த வணக்கத்தையும் குறைவின்றி நாற்றுக்கு நூறு நல்க வேண்டிய கடமை அரசாங்கத்தையும் பொதுமக்களையும் சார்ந்தது!

கேட்பரீஸ்
சாக்லேட்டுகள்



5 ஸ்டார் கையில் இருக்கையிலே...
உங்கள் காரியம் கைகூடிடுமே

நடக்கையிலே, பேசிச் சிரிக்கையிலே, மகிழ்ச்சியிலே திளைக்கையிலே, சிறிது பசிக்கையிலே சாப்பிடுங்கள் 5 ஸ்டார், வழங்கிடுங்கள் 5 ஸ்டார்.,

சுவையிக்க சாக்கலேட் பார்— வாயிலே நீரூறும்.

சுவை நலம் தரும் 5 ஸ்டார்.

வார்த்தைகளால் சொல்ல முடியாததை
நேர்த்தியாகச் சொல்வது.

OBM/2064/TM

15

"ஹலோ .... கௌரி....."

"உம்".....

"ஹல்லோ.... டார்லிங்...."

"ம்ம்..... ஹலோ....."

"என்ன ஆச்சு உனக்கு? ஹலோ ஏனோ தானோனு வருது!"

"ஒண்ணுமில்லே பாலா...."

சிந்தனை மாறாமல் பேசியவளை ஏறிட்ட பாலாஜி ஒரு தரம் புருவங்களை ஏற்றி இறக்கினார்.

மாலையில் பூக்கும் மலர்கள்

சிவசங்கரி

"நோ — நீ வழக்கம் போல இல்லே.... அதிசயமா நான் நர்ஸிங் ஹோமிலேந்து எட்டரைக்குள்ள வந்துட்டா 'ஹா! இன்னிக்கு மழை கொட்டப் போகுது! சூரியன் காலைல மேற்குல உதிக்கப் போறான்—'னு உன் வயசையும் மறந்து குதிப்பே... இப்ப என்னடான்னா...."

கண்களைச் சிமிட்டிக் கொண்டு அவளை வம்பிழுத்துப் பேசியதற்கும் கறுகறுப்பாய்ப் பதில் வராமல் இருக்க, பாலாஜி கிட்டத்தில் வந்து தோளைத் தட்டினார்.

"என்னம்மா...."

> **அருகம்புல் மகிமை**
>
> ஜெர்மன் நாட்டில் ரொட்டிக் கடைக்காரர்கள் அருகம்புல்லைச் சேர்த்துத் தயாரித்த ரொட்டிகளை அதிக விலைக்கும், அச்சத்துச் சேர்க்கப்படாமல் தயாரித்த சாதாரணரொட்டியைக் குறைந்த விலைக்கும் விற்கின்றனர். காரணம் அருகம்புல்லை ஆராய்ந்து அதில் இருநூறுக்கு மேற்பட்ட உயிர்ச் சத்துக்கள் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர்.
>
> —மீனு முத்து

"ஒண்ணுமில்லே... ஏதோ யோசனை..."

"அவ்வளவுதானே! நான் என்னமோ ஏதோன்னு பயந்திட்டேன். உன் யோசனைகளைக் கொஞ்சம் மூட்டை கட்டி வைக்கறியா. சாப்டுட்டு இரண்டு பேரும் ஜம்முனு 'வறுமையின் நிறம் சிகப்பு' படம் போயிட்டு வரலாம். எப்படி ஐடியா?"

"சினிமா வாணாம் பாலா..."

"அப்புறம்?"

"உங்க கிட்டக் கொஞ்சம் பேசணும்."—

"போச்சுடா:.. இந்த மாதிரி நெற்றிச் சுருக்கம், பார்வையோட 'உங்க கிட்டப் பேசணும்னு' நீ சொன்னா, ஸம்திங் ஸீரியஸ். என்ன விஷயம் கௌரி? மூணாவது மாடி கட்டி ஜெனரல் வார்டை விஸ்தரிக்கிறது தானே?"

"ம்ஹூம் சொல்றேன்... உங்களுக்குப் பசிக்குதா? இல்லேன்னா, வாணிலே நாற்காலி போடச் சொல்லி உட்கார்ந்து கிட்டுப் பேசலாமே..."

பாலாஜி இல்லை என்று சொல்ல, ரங்கனை அழைத்துப் பக்கவாட்டுப் புல்வெளியில் நாற்காலிகளைப் போடச் சொன்னாள்.

ஒரு தட்டில் வறுத்த கடலை, சுட்ட மிளகு அப்பளங்களையும் இரண்டு கண்ணாடி தம்ளர்களில் ஐஸ் போட்ட தம்ஸ் அப் பானங்களையும் எடுத்துக் கொண்டு வந்து, ஒன்றைக் கணவரிடம் நீட்டினாள்.

மாலையில் தோட்டக்காரன் தெளித்திருந்த தண்ணீர் புல் நுனியில் தங்கிக் காலடியில் ஜிலுஜிலுத்தது.

அசிரத்தையாய் வெட்டிப் போடப்பட்ட நகமாய் நிலாத் துண்டம் ஒரு பக்கமாய்க் கிடந்தது.

சில்வண்டுகள் தொந்தரவாய் இல்லாமல் சும் பிடித்தன.

"இந்த வார விகடனைப் பார்த்திங்களா பாலா?"

"இல்லியே! இன்னிக்குத்தானே வந்திருக்கும்? காலைல ஏழு மணிக்கு நர்ஸிங்ஹோம் போகறதுக்கு முன்னால படிக்க நேரம் ஏது? என்ன விஷயம்?"

"ஒளி படைத்த கண்ணினாய் வா...வா.. வா...ன்னுஒரு கட்டுரைவந்திருக்கு பாலா."





"ம்...."

"கண் பார்வை இழந்தவங்களைப் பத்தின கட்டுரை... படிச்சதிலேந்து மனசிலே ஒரு பிராண்டல் — வேதனை... என்ன செய்வோம்கிற பரபரப்பு..."

"......"

"பார்வை இழந்தவங்களோட எண்ணிக்கை நம்ம நாட்டுல எவ்வளவு தெரியுமா? தொண்ணூறு லட்சத்துக்கும் மேலே! இதுல எல்லார்க்கும் பார்வை திரும்பக் கிடைக்கிறது சாத்தியம் இல்லேன்னாலும், கிட்டத்தட்ட இருபது சதவிகிதம், அதாவது பதினெட்டு, பத்தொன்பது லட்சம் பேர்களுக்கு ரொம்ப சுலபமா, சின்ன அறுவைச் சிகிச்சை மூலமா இழந்த பார்வையை மீட்டுக் கொடுத்திடலாமாம். இஸ் ன் தட் க்ரேட்?"—

"கார்னியல் ட்ரான்ஸ்ப்ளான்டேஷனைச் சொல்றியா செளரி?"

"ம்ம்.... ட்ரகோமா, அம்மை, கண்வலி, வைடமின் ஏ குறைவு — இந்த மாதிரி சமாசாரங்கள் கார்னியாவை தாக்கறதால பார்வை இழந்திடறவங்களுக்குப்புது கார்னியா பொருத்தறதால புது வாழ்வு கண்டிப்பாக் கிடைக்கும்னு எழுதியிருக்காங்க பாலா...."

பாலாஜி இடது கையால் தலை முடியைக் கோதிக் கொண்டார்.

"இதெல்லாம் ஏற்கனவே தெரிஞ்ச விஷயம்தானே செளரி? புதுசா என்ன சொல்ல வரே?"

"உங்களுக்கு எல்லாம் தெரிஞ்ச சங்கதியா இருக்கலாம். ஆனா, கிட்டத்தட்ட ஒரு கோடி குருடர்கள் நம்ம நாட்டுல இருக்காங்கன்றதும், இதுல இருபது லட்சம் பேருக்குப் பார்வை கொடுத்துப் புனர்வாழ்வு உண்டாக்கறது நம்ம கையிலே இருக்கின்றதும் எனக்கு இன்னிக்குத்தான் தெரியும். இதுவரைக்கும் குருட்டுப் பள்ளிக்கு நாம நிறைய உதவிகள் செஞ்சிருக்கோம். பார்வை இழந்த எல்லாருக்காகவும் நான் எத்தனை வருத்தப்பட்டிருக்கேன். ஆனா... ஆனா... பாலா, தாற்காலிகமா ஒரு உதவி செய்யறது உசத்தியா, இல்லே நிரந்தரமா ஒரு வழி காட்டறது உசத்தியா... சொல்லுங்க."

"மேலிடத்திலிருந்து உத்தரவு கிடைச்சாத்தான் சம்பள உயர்வு கொடுப்பேன்னு மானேஜர் சொல்லிட்டாரும்மா. நீங்கதான் உங்க கணவரிடம் பேசி எல்லாம் ஏற்பாடு பண்ணணும்மா... ப்ளீஸ்..."



"நிச்சயமா நிரந்தரம்தான். பசிச்சவனுக்கு ஒரு வேளை சோறு போடறதை விட, மீன் பிடிக்கக் கத்துத் தர்றது மேல்-னு பழமொழியே இருக்கே... அது சரி... நீ நிரந்தரத் தீர்வுனு எதைச் சொல்றே?"

"கண் தானம்; வாட் எல்ஸ்? இதோட அவசியத்தை இன்னிக்கு அந்தக் கட்டுரையைப் படிச்சப்புறம்தான் நான் உணர்ந்தேன். ஒருத்தர் செத்ததும் புதைக்கப்பட்டோ, எரிக்கப்பட்டோ வீணா போற கண்களைத் தானமாக் கொடுக்கறதனால் இருபது லட்சம் குருடர்களுக்குப் பார்வை கொடுக்க முடியும்னு இந்தச் சுலபமான காரியத்தை மனப்பூர்வமாச் செய்ய நம்ம சமூகம் ஏன் முன்னுக்கு வரலை பாலா?"

"கண்களை எடுத்து உடம்பைப் பங்கப்படுத்திட்டா அடுத்த ஜன்மத்துல அந்தக் குறையோட பிறப்போம்ன்ற நம்பிக்கைதான்....."

"இல்லே பாலா... இது மட்டும் இல்லே. தெரியாத்தனமும் நிறைய இருக்கு... ஏன், இப்ப என்னையே எடுத்துக்கங்க... இதுவரைக்கும் பணத்தாலேயும், இதர விதங்களிலேயும் இல்லாதவங்களுக்கு உதவி பண்ணி இருக்கேனே ஒழிய, ஆக்கப் பூர்வமா, நிரந்தரமா பிரச்னையைத் தீர்க்க இப்படி ஒரு வழி இருக்குங்கிறதை உணரவே இல்லியே! ஒரு டாக்டரோட மனைவியா, பலதரப்பட்ட விஷயங்களைத் தெரிஞ்சிருக்கக் கூடியவளா இருக்கிற எனக்கே இந்தப் பிரக்ஞை இல்லேன்னு, சாதாரண ஜனங்களுக்கு இந்த விழிப்புணர்ச்சி எப்படி உண்டாகும்?"

ரொம்பவும் தீவிரத்தோடு பேசுபவளைப் பார்த்துப் பாலாஜி மென்மையாய்ப் புன்னகைத்தார்.

"ஆல்ரைட். உனக்கு இன்னிக்கு ஞானோதயம் வந்திருக்கு. அப்புறம்?"

"விளையாடாதீங்க பாலா... நான் ரொம்ப சீரியஸாப் பேசிட்டிருக்கேன். கண் தானம்கிறது பயப்பட வேண்டிய விஷயமே இல்லையாம். இறந்தவரோட முகம் விகாரமாயிடுமோன்ற தயக்கமே வேணாமாம்... ஒருத்தர் செத்துப்போய் ஆறு மணி நேரத்துக்குள்ள தகவல் தெரிவிச்சா டாக்டர் வந்து கண்களை எடுத்துட்டு அந்தக் குழியை மறைக்கப் பஞ்சை வச்சச் சின்னதா தையல் போட்டுடறதால, தூங்கற மாதிரிதான் இருக்குமாம். பயங்கரமோ, பயமோ நிச்சயமா இருக்காதாம்...."

"தெரியும் டார்லிங்... இப்ப நீ என்ன சொல்ல வரே, முதல்ல அதைச் சொல்லும்மா..."

"மத்தியானம் பூரா மனசு ரொம்பத்தான் நறா நறானு பறந்து போச்சு பாலா... நல்லா யோசனை பண்ணிச் சில முடிவுகளை எடுத்திருக்கேன். இத்தனை நாள் விவரம் கெட்டதனமா இருந்த மாதிரி இனிமே நான் இருக்கப் போறதில்லே... நம்ம நர்ஸிங் ஹோம், மத்த தெரிஞ்ச இடங்கள்ல யாராவது இறந்துபோனா சம்பந்தப்பட்ட நபர்கள் கிட்ட கண் தானத்தோட அவசியத்தைப் பத்திப் புண்படுத்தாம எடுத்துச் சொல்லி, இறந்தவரோட கண்களை வாங்க முயற்சி செய்யப் போறேன். பள்ளிக்கூடங்கள், கல்


பற்குழிகளைக் கண்டான் என் மகன் ஒரு நாள்!
போர்ஹென்ஸ் :ப்ளோரைடு
ருசியானதும் நுரைதருவதுமான டூத்பேஸ்ட்
உங்கள் பற்கள் மற்றும் ஈறுகள் இரண்டையுமே
பாதுகாக்கிறது.
FOR THE GUMS
Forhan's
with active FLUORIDE to check tooth decay
33|F|72 TAM

லூரிகள் பிரின்ஸிபால்களோட தொடர்பு கொண்டு, கண் தானத்தோட உயர்வைப் பசங்களுக்கு மனசில பதியற மாதிரி விளக்குங்கன்னு கேட்டுக்கப் போறேன். ஹெல்த் மினிஸ்டரை எப்படியாவது சந்திச்சு அனுதையாச் செத்துப் போறவங்க கண்களை எடுக்கலாம்னு சட்டத்தை மாத்துங்கனு கெஞ்சப் போறேன். ரோட்டரி, லயன்ஸ், லேடீஸ் க்ளப்லே மெம்பரா இருக்கிற நண்பர்கள் கிட்ட எல்லாம் கண் தானத்தைப் பத்தின விழிப்புணர்வை ஜனங்க நடுவுல வளர்க்க உதவி பண்ணுங்கன்னு சொல்லப் போறேன். பத்திரிகை ஆசிரியர்களைச் சந்திச்சு அப்பப்ப இந்த மாதிரி ஒரு கட்டுரையோ, கதையோ தொடர்ந்து பிரசுரம் பண்ணுங்கனு கேட்டுக்கப் போறேன்... அப்புறம்....''

பாலாஜி கைகளைச் சன்னமாகத் தட்டினார்.

''பெரிய பெரிய ஐடியாக்களாத்தான் வச்சிருக்கே...''

''இன்னும்நான்முடிக்கலே பாலா...முக்கியமானதையும் சொல்லிடறேன். உங்களுக்கு முன்னால நான் இறந்து போனா,மறக்காம என் கண்களைத் தானம் செய்துடணும். இரண்டு கண்களும் என்னோட சேர்ந்து எரிஞ்சு சாம்பலாப் போகவேணாம்... ஒரு குழந்தைக்கோ, வாலிபனுக்கோ, எதிர்காலத்தைப் பிரகாசமாக்க என் கண்கள் காரணமா இருக்கணும்.''

ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்டுப் போனதில் கண்கள் லேசாகக் கலங்கப் பேசியவளின் கையைப் பற்றி வாயில் வைத்து அன்று பாலாஜி முத்தமிட்டார்.

இது நடந்து இரண்டு மாசங்கள் போல ஆகியிருக்கும்.

ஒரு ஞாயிறு காலை குளிக்காமல் சோம்பேறித்தனத்துடன் வாராந்திர எக்ஸ்பிரஸ் பத்திரிகையைப் படித்தபடி படுத்துக் கொண்டிருந்தவள் தடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

''பாலா....''

''ம்?''—

''இங்கே பாருங்க''—

நீட்டிய பக்கத்தை வாங்கிப் படித்தார்.

இறந்தவர்களின் தோலைத் தானமாகக் கொடுப்பதன் மூலம், ஆழமான தீக்காயங்களால் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பவர்களைக் காப்பாற்ற முடியும் என்பதை விரிவாக விளக்கும் கட்டுரை.

''கண், ஹிருதயம், கிட்னி, இதுங்களைத்தான் தானமாகக் கொடுக்க முடியும்னு நினைச்சிட்டு இருந்தேன். ஆனா, தோல்! இதைக்கூடவா தானமாகக் கொடுத்து, உயிருக்கு மன்றாடிக்கிட்டு இருக்கிறவங்களைக் காப்பாத்த முடியும்? இந்த மாதிரி முக்கியமான விவரங்களையெல்லாம் இத்தனை நாள் தெரிஞ்சுக்கலையேன்னு எனக்கு ரொம்ப வெட்கமா இருக்கு பாலா.''

பாலாஜி பதில் ஏதும் கூறாமல், பேப்பரை மடித்து ஒரு பக்கமாக வைத்து விட்டுச் சாய்ந்து உட்கார, கௌரி அவரிடம் நெருங்கி உட்கார்ந்தாள்.

கண்களில் யோசனை, நெற்றியில் குட்டியாய்க் கோடுகள்—

''பாலா...நான் ஒன்னுசொல்லட்டுமா?''

''ம்?''–

''நான் இறந்தப்புறம் கண்களைத் தானமா கொடுத்திடுங்கனுதானே அன்னிக்கு சொன்னேன்? கண்களை மட்டுமில்லே பாலா... கிட்னி, ஹிருதயம், தோல், இன்னும் என்னென்ன கொடுக்க முடியுமோ அத்தனையும் தயங்காமக் கொடுக்க ஏற்பாடு பண்ணிடணும். மறக்காமச் செய்வீங்களா?''

பாலாஜி அவளை இழுத்து நெஞ்சு மேல் விட்டுக் கொண்டார்.

''வரவர இந்த மாதிரி நீ அடிக்கடி பேசறது எனக்குப் பிடிக்கலே கௌரி....''

''நீனு சொன்னு நாக்கு வெந்திடுமா? ஒரு டாக்டர்! நீங்களே இப்படித் தயங்கிறு?... சொல்லுங்க. என் உடம்புலேந்து எதெல்லாம் உபயோகிக்க முடியுமோ அத்தனையும் கொடுத்திட்டுத்தான் எரிக்க எடுத்துட்டுப் போவேன்னு சொல்லுங்க?''–

''கௌரி....''

''ப்ளீஸ் பாலா சொல்லுங்க.''

''சரி கொடுக்கறேன் திருப்தியா?''–

''ப்ராமிஸ்:''–

''ப்ராமிஸ்.''

என்ன மனசு இது; என்ன எண்ணங்கள் இவை என்று உதறலுடன் அவளை அன்று இழுத்து முரட்டுத்தனமாக அணைத்தது இப்போது உயிரற்ற கௌரியோடு தனிமையில் அமர்ந்திருக்கையில் நினைவுவர, வாய்விட்டுத் தாங்க மாட்டாமல் கதறியவர், சில நிமிஷங்களில் சமாளித்துக் கொண்டு குளிரத் தொடங்கிவிட்டவளின் கண்கள், வாய், கை விரல்கள், பாதங்கள் என்று அத்தனையும் மிக மிக மென்மையாய் முத்தமிட்டு, வெளியில் வந்து,சாந்தியை அழைத்துச் சம்பந்தப் பட்ட டாக்டர்களிடம் விவரத்தைத் தெரிவித்து உடனடியாகஆவன செய்யச்சொல்ல...

தாமதமாகி விட்டபடியால் ஹிருதயமும் ராஷல் வந்து பாதிக்கப்பட்டு விட்ட காரணத்தால் தோலும் எடுக்கப்பட மாட்டாமல் போக, கண்கள், சிறுநீரகங்களைத் தானமாகக் கொடுத்துவிட்ட கௌரியின் உடல், அடுத்த ஒரு மணி நேரத்தில் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, என்ன, ஏது என்று புரியாத அழுகையுடன் விக்ரம் சுற்றிச் சுற்றி வர, கூடத்தின் நடுவில் கிடத்தப்பட்டது.

(தொடரும்)

ஒரு டாக்டர் வீட்டில் நான் கண்ட வாசகங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. அவை:

மெல்லப் பேசு.
கருத்துடன் பேசு
பிறரை ஈர்க்கும்படி பேசு
அக்கம்பக்கம் பார்த்துப் பேசு
பேசாமலிருக்கவும் கற்றுக்கொள்.

—பி. வர்ஷா

அப்பா

ஜி.பி.பிரபாத்



குமார் காலையில் எழுந்திருக்கும்போதே பலத்த எதிர்பார்ப்புகளுடன் எழுந்தான். இன்று அவன் வாழ்வில் முக்கியமான நாள். ஞாயிற்றுக் கிழமை! ஸ்கூல் இல்லை. அதுவே ஆறுதலாக இருந்தது.

வகுப்பில் முதலாக இருந்த அவன், ஆசிரியர்களுக்குச் செல்லப்பிள்ளைதான். இருந்தாலும் சில சமயம் செல்லப்பிள்ளைக்கும் கெட்ட காலம் வருவதுண்டு. அப்பொழுதெல்லாம் இடது கையில் இரண்டு அடியும், வலது கையில் இரண்டு அடியும் வாங்கிக் கொண்டு, அல்லது பள்ளி வராந்தாவில் முட்டிக்கால் போட்டு மனம் புழுங்கிக்கொண்டிருப்பான். அதிலும் இந்தக் கணக்கு வாத்தியார் நாராயணன் இருக்காரே, பொல்லாதவர். எப்பொழுதாவது மனத்தை அலைய விட்டு மூன்றையும் ஐந்தையும் பெருக்கி எட்டு என்று போட்டால், ''மடக் கழுதை'' என்று சிறி மோதிர விரலால் 'ணங்' என்று ஒரு குட்டு வைப்பார்.

ஆனால் சிறிது நேரம் கழித்து மனம் இளகி அருகில் வந்து நிற்பார். குமார் கவனக் குறைவால்தான் அவ்வாறு தவறுகளைச் செய்கிறான் என்பது அவருக்குத் தெரியாமல்இல்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவே அவ்வப்போது குட்டுவார்.

பிறகு, ''இந்தா, எம்பையனுக்காக கம்மர் கட்டு வாங்கினேன். உனக்கும் ஒன்னு வாங்கினேன். 3 × 5 எவ்வளவு:'' என்பார்.

''15'' என்பான்.

நாராயணனும், அவன் அப்பாவும் நண்பர்கள். சாயங்காலம் வாக்கிங் போகும் போது நாராயணனைச் சந்திக்க நேர்ந்தால்: ''பையனை ஒரு குட்டுப் போட்டேன். 3 × 5 எட்டுங்கிறான். ஏலே! கம்மர்கட்டு எப்படி இருந்தது?''

அவரைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை உதிர்ப்பான். ''புத்திசாலிப் பையன்'' என்று சொல்லிக் கொண்டே நகர்வார்.

அது சரி, இன்று என்ன ஸ்பெஷல்?

அவன் அவனுடைய அப்பாவின் அலுவலகத்தைப் பார்க்கப் போகிறான்.

அவன் அப்பாவைப் பற்றி நினைத்துக்-கொள்ளும்போதெல்லாம் அவன் மனத்தில் பெருமை வெள்ளம் உருண்டோடியது.

இங்கிருந்து நாலு தெரு தள்ளி இருக்கும் பெரிய பங்களாவில் அப்பா கார் டிரைவர்.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்து குளித்து விட்டுச் சுருள் சுருளானகிராப்பை வாரிவிட்டு, நெற்றிக்குத் திருநீறு இட்டுக் கொண்டு, வெள்ளை உடை அணிந்து கொண்டு, ஆணியிலிருந்து தொப்பியை எடுத்துத் தூசியைத் தட்டிவிட்டு, அதை அணிந்து கொண்டு அவர் தெருவில் இறங்கினால், அந்தத் தெருவில் உள்ளவர்கள் எல்லோரும் வியப்புடனும் பொறுமையுடனும் அவரைப் பார்ப்பார்கள்.

கோபுவுடைய அப்பா 'கிளார்க்'. வழக்கையாகக் காலையிலேயே தூங்கி வழிந்து கொண்டு போவார். அதுபோலத்தான் காஷியரான சங்கரின் அப்பாவும், ஃபிட்டரான முத்துவின் அப்பாவும். அவர்களுக்கெல்லாம் அந்த மாதிரி வெள்ளை யூனிபாரம் இருக்குதா. இல்லை தொப்பி (ஆஹா! அந்தத் வெள்ளைத் தொப்பி, அதை அவன் எவ்வளவு நாட்கள் திருட்டுத்தனமாக அணிந்து கொண்டு பெருமைப்பட்டிருக்கிறான்!) யாருக்

காவது உண்டா? கோபுவுக்கும் சங்கருக்கும், முத்துவுக்கும் தங்களுடைய அப்பாக்களுக்குத் தொப்பி இல்லையே என்ற குறை இருந்தது.

அதுவும் சில சமயங்களில் படு ஸ்பீடாக அப்பா முதலாளியின் காரை (பெரிய 'பென்ஸ்' கார்) வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வருவார். அப்பொழுது எல்லா ஜன்னல்களும் கதவுகளும் திறக்கும். பொறுமையால் எரிந்துவிடுவது போலப் பார்ப்பார்கள்.



குமாருக்கோ பெருமை பிடிபடாது. (டேய்! உங்கப்பா எங்கப்பா மாதிரி ஸ்பீடா 200 மைல் வேகத்தில் கார் ஓட்டுவாராடா?) உள்ளே ஏறி உட்கார்ந்து ஹார்ன் எல்லாம் அடிப்பான். கோபுவும் மற்றவர்களும் வெளியில் நின்றுகொண்டு வாயைப் பிளப்பார்கள். சில சமயம் அப்பாவுக்கு நேரம் இருந்தால் பள்ளியிலேயே இறக்கி விட்டுப் போவார்.

''எங்க கார் மாதிரிதான்! முதலாளிக்கு எங்கப்பா இல்லேன்னு காரை வச்சுக்கிட்டு என்ன பண்றதுன்னே தெரியாது.''

அந்தப் பேட்டையில் எல்லோருக்கும் அப்பாவைக் கண்டால் கொஞ்சம் பயம்தான். அவருடைய முறுக்கி விட்ட மீசையையும், ஆஜானுபாகுவான உடல்கட்டும் கண்டவர்கள் சற்று ஒதுங்கித்தான் போவார்கள்! ஏதாவது நோஞ்சானும் கடன் வசூல் செய்ய முடியவில்லை என்றால் அப்பாவிடம் முறையிடுவான். கடன்காரன் தொடை நடுங்கிக் கடனைத் திருப்பித் தருமாறு செய்துவிடுவார் அப்பா. அந்தப் பேட்டையில் அப்பாவின் புகழால் திருட்டே கிடையாது. அப்படியே ஒன்றிரண்டு திருடர்கள் பிடிபட்டால் தொலைந்தார்கள்!

''வரியாடா குமார்! போகலாம்.''

சீப்பால் கடைசி முறையாகத் தலையை வாரிவிட்டுக் கொண்டு குமார் ஒரு துள்ளலுடன் புறப்பட்டான்.

'பென்ஸ்' காரில் ஏறிக்கொண்டான்.

ஸ்பீடா மீட்டரில் அப்பா 80 மைல் வேகத்தில் ஓட்டுவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''டேய்! அங்கே போய்க் கும்மாளம் அடிக்கக் கூடாது. நான் சொல்கிற இடத்தில் உட்கார்ந்து பார்த்திட்டிருக்கணும். என்ன?''

தலையாட்டினான்.

அந்தப் பங்களாவை இதுவரை வெளியிலிருந்துதான் பார்த்திருக்கிறான். இப்போது அது பிரமிக்க வைத்தது. எந்த அப்பாவுக்காவது இப்படி ஒரு ஆபீஸ் உண்டா? கோபுவின் அப்பாவுடைய ஆபீஸ் கட்டடத்தைப் பார்த்திருக்கிறான். பாழடைந்த கவர்ன்மெண்டு ஆபீஸ்.

தோட்டத்தில் புல்வெளி எவ்வளவு அழகாக இருந்தது! பெரிய பெரிய மரங்கள். பறவைகள் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன. கூர்க்கா கேட்டின் அருகில் கன் கூண்டில் நின்று கொண்டிருந்தான்.

''எறங்குடா.''

இறங்கினான்.

பங்களா கதவு திறந்தது.

காதருகில் நரையுடன், சில்க் ஜிப்பா அணிந்து கொண்டு ஒருவர் தோன்றினார். இவர்தான் முதலாளியாக இருக்க வேண்டும். தன் அப்பாவைப் போல் கம்பீரமில்லாமல் இருந்தாலும், ஓரளவுக்கு ''பெர்சனாலிடி'' யுடன் இருந்தார்.

''டேய், மாரி!'' என்று விளித்தார்.

குமார் துணுக்குற்றான். யாருமே தன் அப்பாவை அப்படி அழைத்ததில்லையே?

''எம் பையனுங்க...'' என்றார் அப்பா.

''மீம்ம்...'' என்று குமாரை முறைப்பது போலப் பார்த்தார முதலாளி. ஏன் தன்னை எந்தக் கிளாஸ் படிக்கிறாய், என்ன பெயர் என்றெல்லாம் கேட்கவில்லை? ஏன் அம்மா விடம் நிற்பது போல் நிற்காமல், லேசாகக் குனிந்து கொண்டு நிற்கிறார் அப்பா?

முதலாளி தோட்டத்தைச் சுற்றி நடக்க ஆரம்பித்தார். அப்பா அவர் பின் செல்ல, குமார் அப்பாவைத் தொடர்ந்தான்.

''ஏன் 'வாலை'ச் சரியாக 'மெள' பண்ணை வில்லை?''

''இல்லிங்க. நேத்து 'கேட்டு' பெயிண்ட் அடிக்கறதுக்கு இருந்ததுங்க. அதனுல் அந்த வேலையைக் கவனிக்கலாம்னு....'' தலையைச் சொறிந்தார் அப்பா.

கேட்டைப் பார்த்து, ''அந்த வேலையும் முடியலியே'' என்றார் முதலாளி சற்றுக் கடு மையுடன்.

''பெயிண்டு பத்தாமப் போச்சுங்க''— இது அப்பா.

''முதலிலேயே வாங்கி வைக்க வேண்டியது தானே? வண்டிக்குப் பெட்ரோல் அடிச் சியா? பத்து மணிக்குக் கோயிலுக்குப் போகணுமே?''

''இன்னும் அடிக்கலிங்க. இப்பப் போய் அடிச்சிரலாமுங்க.''

''ஏன்டா நேத்தே அடிக்கலே? அடிக்கச் சொல்லியிருந்தேனே?''

''அது வந்துங்க, காசு வாங்கிட்டுப் போக மறந்துட்டேனு.....'' அப்பா முடிப்பதற் குள் 'பளார்' என்று ஒரு அறை விட்டார் முதலாளி.

அப்பா கடைக் கண்ணுல் தன்னைப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டு நின்றார்.

''பொறுக்கி நாயே! சம்பளம் மட்டும் அப்பப்ப உயர்த்தணும். வேலை மட்டும் செய்ய மாட்டீங்க.''

அதிர்ச்சியிலிருந்து குமார் மீண்டபோது, அவன் தொண்டையைத் துக்கமும் ஆத்திர மும் அடைத்தன. கண்களில் நீர் தளும்பி யது. இந்த நேரந்தான் முதலாளியை அப்பாவால் திருப்பி அடிக்க முடியாதா என்ன? ஏன் சும்மா நின்று கொண்டிருக் கிறார்?

''பையனை வீட்டில விட்டுட்டு, போய் பெட்ரோல் பிடிச்சிட்டு வா.''

அப்பா தலையாட்டிவிட்டு, ''வாடா, குமார், போகலாம்'' என்றான்.

ரொம்ப நேரம் தயங்கின பிறகு, ''அப்பா!.....'' என்று இழுத்தான்.

''என்னடா?''

''அப்பா.....''

''என்னடா?'' என்றார் அப்பா எரிச்ச லுடன்.

''நீ ஏம்பா திருப்பி அடிக்கலே அவரை?''

அப்பாவின் முகத்தில் சிறிது கடுப்பேறிப் பின் மறைந்தது.

''நாராயணன் வாத்தியார் உன்னை அடிக் கறதில்லே, மடக் கழுதைன்னு திட்டற தில்லே? அதுபோலத்தான்'' என்றார்.

ஏதோ புரிந்தது போல இருந்தது.

சிறிது யோசனைக்குப் பிறகு, குமார், ''அப்படி நாராயணன் அடிச்சாராலும் அவ ருடைய சேரில் கோந்து தடவி வைப்போம்'' என்றான். அப்பா கோபப்படுவாரோ என்று பயந்தான்.

மாறாக அப்பா ஒரு புன்சிரிப்பு வரைந்தார். திரும்பியவுடன் காரின் டயரில் ஆணி ஏத்தி, டயர் பழுதடைந்து விட்டது. புதிய டயர் மாற்ற வேண்டும் என்று முதலாளிக்குச் செலவு வைக்கப் போவது பற்றி நாக்கு நுனி வரை வந்துவிட, அதை அடக்கிக்கொண்டு அப்பா மௌனமானார்.

காரில் வீடு திரும்பும்போது, கோபுவிடம் அவனுடைய அப்பா ஆபீஸில் அடி வாங்கு வாரா என்று கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் குமார். அவர் அடி வாங்குவதில்லை என்றால், எங்கப்பாவும் வாங்குவதில்லை என்று சொல்ல வேண்டும்.

ஜி. பி. பிரபாத்
II பி. ஈ. (மெக்கானிக்கல்)
பி. எஸ். ஜி. தொழில் நுணுக்கக் கல்லூரி
கோவை-4.



சிறுவன் ஜவாஹர்லால்

- பள்ளிக்கூடம் அனுப்பப்பட வில்லை; வீட்டிலேயே கல்வி போதனை, தனிமை.
- பாடம் சொல்லித் தர வந்த புரூக்ஸ் வீட்டிலேயே விஞ்ஞான ஆய்வுக்கூடம் அமைத்தார்; ஆங்கில இலக்கியத்தில் ஆர்வம் வளர்த்தார். அவர் மர்மமான முறையில் ஆற்றில் மூழ்கி இறந்தது ஜவாஹர்லாலிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.
- மோதிலால் கோபக்காரர். பாதி சாப்பாட்டில் மேஜை முன்னிருந்து எழுந்து வந்து தவறு செய்த பணி யாளனை அடித்து நொறுக்குவார். ஜவா ஹர்லாலையும் தம் இரு பேனுக்களுள் ஒன்றை எடுத்ததற்காக நையப் புடைத் தார்.
- இறக்கையோ வேறு உபகரணமோ ஏதுமின்றி வானில் சுதந்திரமாகப் பறப் பது போலவும் அந்நியனை எதிர்த்து யுத்தத்தில் வாள் வீசிப் போராடுவ தாகவும் ஜவாஹர்லால் அடிக்கடி கற்பனை செய்வான்.
- 'ஜவாஹர் தூக்கத்தில்கூட ஆங்கிலத் தில்தான் பேசுவான்: கனவுகூட ஆங் கிலத்தில் காண்பான்!' என்கிறார் ஆஸாத்.

—லக்ஷ்மி,
தாவார்'ஸ் கல்லூரி, சென்னை-2

க்யூ காத்திருந்தது!

தலை தூக்கும் தலைவிதியைத் தவிடு பொடியாக்கும் திருவேங்கடத்தானைத் தரிசிக்க...

க்யூ காத்திருந்தது!

ஜாதி பேதங்கள் மடிந்து, மறந்துபோன நேரமிது. அந்த மாய மறதியை வியாபிக்கச் செய்த மாலவன், சும்மா இல்லை. இயற்கையின் சாட்டையடிபட்ட மானிடர்க்கு மனமிரங்கும் மாதவனைக் காண...

க்யூ காத்திருந்தது!

என்ன அவசரம், என்ன பரவசப் பரபரப்பு எல்லோருக்கும் — எல்லோருக்குமேதான்—

ஏன், வத்சலாவுக்கும்தான்!

அமர்ந்த சில விநாடிகள் கழித்து: பார்வையைப் பின்னால் செலுத்த, வத்சலாவுக்கு ஆனந்த பேராச்சரியம். நிரம்பியாகி விட்டது இரண்டாவது ஷெட்டும்.

ஈடில்லா ஈர்ப்பு சக்தி இந்தப் பரந்தாமனுக்கு! வத்சலா தன் ஹாண்ட் பாக்கைத் திறந்து பார்த்துக் கொண்டாள். உண்டியலில் போட வேண்டியதைக் கணக்குப் பார்த்துக் கொண்டாள்.

'பி.எஸ்ஸியை பஸ்ட் கிளாஸில் நான் பாஸ்பண்ணவை, வருகிறேன், பறந்தோடி' என்று பகவானிடம் அந்தரங்க ஆசையோடு கேட்டுக் கொண்டதை நிறைவேற்ற வந்து விட்டாள்.

பாலாஜி, அவள் வேண்டுதலை நிறைவேற்றியிருக்கிறானே, வராமல் என்ன செய்வாள்?

சுற்று முற்றும் பார்த்தவள், முதல் ஷெட்டில் பார்வை பாய,

''ஹேய் ராம்!'' என்று குரல் கொடுத்தாள். ராம் என்பது ராமகிருஷ்ணனின் அன்புச் சுருக்கெழுத்து.

ராமனை மட்டுமே காண முடிந்தது. நிற்கும் நிமிரும் சில திருப்பதித் தலைகள் மீதியை... கிருஷ்ணனை மறைத்துக் கொண்டிருந்தது.

இங்கிருந்தே கையசைத்தாள் பரவசத்தோடு. இராமகிருஷ்ணன் — அவளுக்கு 'அவராக' ஆகப் போகிறவன். ''நீ பிளஸ்.



கைவிடமாட்டான்!

பத்மஜா

ளியை முடி. அவனுடைய தங்கை கல்யாணம் முடிந்ததும் உங்க ரெண்டு பேரையும் ஜோடி சேர்க்கிறேன்'' என்று பச்சைக் கொடி காட்டிவிட்டார் அவன் தந்தை.

இன்னும் இரண்டு வாரங்களில் இராமகிருஷ்ணன் தங்கைக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டாள். எல்லாம் கூடிவருகிற அற்புத நேரமிது.

தூரத்திலிருந்தே பார்வை வீசியபோதும், இராமனைத் தூண்டில் போட்டுப் பிடிக்க முடியவில்லை.

இராமகிருஷ்ணன் தன் வயதான தாயுடன் வந்திருந்தான். அவனும் பார்வையை எங்கேயோ பார்த்தபடி இருந்தான்.

இதோ பார்த்துவிட்டான்!

''ஹேய் வத்சல்!'' என்று கூவினான். 'இப்படி, இங்கே வாயேன். வந்துவிடு'' என்று சைகை காட்டினான்.

> **லட்ச ரூபாய ஆஸ்தி**
>
> எங்கள் வீட்டில் ஒரு பெரிய பழைய தகரப் பெட்டி இருந்தது. அதில் பாரதியாருடைய கையெழுத்துப் பிரதிகளும் பத்திரிகைகளிலிருந்து வெட்டி ஒட்டப்பட்ட வியாசங்களும் இருந்தன. அவற்றைத்தான் என் தந்தை எங்களுக்கு லட்ச ரூபாய் ஆஸ்தி என்று சொல்வார். பெரியோர் வாக்குப் பொய்த்துப் போகாது. ஆனால் இன்றளவில் எங்களுக்கு அவரது புத்தக விற்பனை மூலமாகக் கிடைத்த லாபமெல்லாம் கீர்த்தி மட்டும்தான். நாங்கள் அதையே லட்ச ரூபாயை விடப் பெரியதொரு ஆஸ்தியாகக் கொண்டாடுகிறோம்.
>
> பாரதியார் புத்திரி தங்கம்மாள்
>
> நன்றி: சக்தி
>
> **தகவல்: ஆர். எஸ். சுப்பிரமணியன்**

வத்சலா தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து, ஷெட்டின் வாசலுக்கு வந்தாள். அடுத்த ஷெட்டிற்குள் நுழையலாமென்றால் தடுத்து நிறுத்தினான் தேவஸ்தான சிப்பந்தி.

''உங்கள் ஒருவரை விட்டால் பின்னால் பத்துப் பேர் பாய்வார்கள். இப்போதே நிரம்பி வழிகிறது'' என்றான். முணுமுணுத்தான்.

அதற்குள் இராமகிருஷ்ணன், வாசல் பக்கமாய் வந்தான். சிப்பந்தியிடம் தெலுங்கில் ஏதோ சொன்னான். தேவஸ்தான ஆசாமிக்கு என்ன தோன்றியதோ, அந்த இளஞ் ஜோடியை மாறி மாறிப் பார்த்து, பாலாஜி சேர்க்க விரும்பும் ஜோடியை நாம் போய்ப் பிரிப்பானேன் என்று தோன்றியதோ என்னவோ... வத்சலா பக்கத்தில் யாரும் இல்லை என்று தெரிந்ததும், கதவைத் திறந்து வத்சலாவை உள்ளே விட்டு, அவசர அவசரமாய் மூடினான்.

வத்சலாவுக்குப் பேரானந்தம். இராமகிருஷ்ணனை அப்படியே அணைத்துக்கொள்ள வேண்டும் போல் இருந்தது.

''எனக்கு கங்கிராஜுலேஷன்ஸ் சொல்லுங்கள் பார்ப்போம்.''

''எனக்கு நீ அனுதாபங்கள் சொல்லணும் வத்சலா.''

''என்ன சொல்றீங்க ராம்?''

''யெஸ். உண்மையைத்தான் சொல்றேன். இன்னும் இரண்டு வாரங்களிலே தங்கை விஜி கல்யாண ஏற்பாடெல்லாம் நல்லா நடக்கணுமென்று இங்கே பிரார்த்தனை செய்துக்க வந்தோம். இரண்டு வருஷமாத் தள்ளிப் போய்க்கிட்டே வந்த ஏற்பாடெல்லாம் ஒரு வழியா செட்டில் ஆச்சென்னு சந்தோஷத்திலே இங்கே வந்தோம். இன்னி காலை பேப்பர்லே பேரிடி எங்களுக்கு... விஜி கல்யாணத்துக்காகப் பணம் போட்டு வைச்சிருந்த நிதி நிறுவனம் திவால் ஆயிடுத்தாம். பேப்பர்லே போட்டிருக்கான்...''

''அய்யய்யோ!''

''அப்பா சாகறச்சே, 'பிராவிடண்ட் பணத்தை வச்சி விஜியோட கல்யாணத்தை முடிச்சுடு'டான்னாரு. போட்டு வச்ச பாங்கே திவாலாயிடுச்சே. போயிடுச்சே. நெஞ்சிலே அடிச்சாலும் பரவாயில்லே. வயித்திலே அடிச்சுட்டாளுங்களே....''

''அம்மா கிட்டே சொல்லிட்டீங்களா?''

''அம்மாவுக்குத் தெரியாது இன்னும். பேப்பரைப் படிச்சதும் பேப்பரை சுக்குநூறாக் கிழிச்சுப் போட்டுட்டேன். அம்மா தாங்க மாட்டா. தாங்கிக்கவே மாட்டா... இந்த நெருப்புச் செய்தியை வயித்திலே கட்டிக்கிட்டு இரண்டு மணி நேரமா படாது படறேன் நான். பிரசவ வேதனை போல...''

சுவரோரமாய்க் கூட்டத்தை விலக்கிச் சென்றனர் இருவரும்.

அம்மாவை நெருங்கியதும் ''என்ன வத்சலா... எப்ப வந்தே... வீட்டிலே சௌக்கியமா....'' என்றாள் அந்தத் தாய்.

பார்ப்பதற்கே பவ்வியமாய்... எப்படியம்மா தாங்கிக்கப் போகிறீர்கள்... பகவானே பாலாஜி... கைவிட்டுடாதேப்பா.''

மௌனமாய்ச் சிரமப்பட்டுச் சிரித்துவிட்டு மெல்ல அமர்ந்தாள் வத்சலா.

''நானும் உங்க அப்பாவும் உங்க ரெண்டு பேரையும் சேர்க்க நினைக்கிறச்சே ஆண்டவனே அட்லான்ன உங்களே, இங்கே திருப்பதியிலே சேர்த்துட்டாரு பார்த்தியா''

மகனைப் பார்த்துப் பவ்வியமாய்ச் சிரித்தாள். இராமகிருஷ்ணனுக்கு எதுவும் நினைவு இரத்தத்தைத் தொடவில்லை.

அப்போது—

மளமளவென்று முன்னே இருந்தவர்கள் எழுந்து நிற்க.

''என்னங்க'' என்றாள் வத்சலா.

''கதவு திறந்திட்டாங்க....''

கதவு திறந்தாயிற்று — தரிசனத்துக்கு!

''என் கல்யாணத்துக்கு அப்பா சேர்த்து வச்ச பணத்தை அப்படியே உங்க கிட்டே

கொடுத்திடச் சொல்றேன். அந்த பாங்க் பணம் போனால் போறது. இதை வச்சி ஜாம் ஜாம்னு நடத்திரலாம். என்ன சொல் றீங்க...?''

''என்ன உனக்குப் பைத்தியமா பிடிக்கப் போச்சு?''

''இல்ல ராம்... சீரியஸாச் சொல்றேன். உங்களுக்காக நான் என்று அப்பா தீர்மா னிச்சுட்டாரு. ' அப்புறமென்ன... நம்ம கல்யாணத்தைச் சிம்பிளா முடிச்சுக்கு வோம். விழி கல்யாணம் முக்கியம். அதைவிட நீங்க இதுக்குச் சம்மதிக்க வேண்டியது மிக மிக முக்கியம்.''

''கல்யாணத்துக்கு முன்னாடியே மாம னார் விட்டுக் கடனா?''

க்யூ நகர்ந்து கொண்டிருந்தது. அம்மா முன்னால் செல்ல, வத்சலாவும், ராமகிருஷ் ணனும் சன்னமான குரலில் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

வழி நெடுகச் சுவரும் ஆஸ்பெஸ்டாஸ் பிர தேசங்களும், பக்தர்களுக்குப் பட்டா எழுதிக் கொடுத்தாற் போல அவரவர் தங்கள் தங்கள் வரவை அதில் பதிவு செய் திருந்தனர்.

மேடான மரப் படிகளைக் கடந்து சாய்வாய் இறங்கி, சிமெண்ட் பெஞ்ச் பகுதிகளைக் கடக்க...

''என்னது கடன் கிடன்னு சொல்லிக்கிட்டு இதுகூடச் செய்யாட்டா என்ன வேண்டிக் கிடக்கு மனுஷ ஜென்மம். ஒரு பெண்ணோட கழுத்தில மாங்கல்யம் ஏறறதுக்கு உதவறது, வேங்கடாசலபதிக்கு ஆயிரம் குடம் பால் அபிஷேகம் செய்த புண்ணியமாக்கும்! மறுக்காதீங்க ராம்!''

கொஞ்சம் யோசித்தான் ராமகிருஷ்ணன்.

க்யூ எழுந்தது. நகர்ந்தது.

''இந்த மாதிரி ஜனங்களுக்கு அவ்வளவு கொடுக்கிறேன், வட்டி இவ்வளவு கொடுக் கிறேன்னு சொல்ற பாங்கர்களைச் சும்மா விடக் கூடாது.'' வத்சலா பொருமினாள்.

''எவனோ கேஸ் போட்டானாம். பாங்க் திவால்னு. தட்டுக் கலபமா ஒரு வரியிலே சொல்லிட்டுப் போயிட்டாரு. கோர்ட்ல ஜட்ஜ்மெண்ட் கொடுக்காம இருந்தாக்கூட அடிச்சுப் பிடிச்ச ஏதாவது காச கிடைக் கும். இப்ப கோர்ட்ல போனதாலே ரூபாய்க் கும் பத்துப் பைசாக் கூடத் தேறுது போல... சே!''

''கவர்னர் கிட்டக் கண்ணீர் விட்டாக் கூடக் காசு காசு தேறுது....''

''சி. பி. ஐ. என்குயரிதான் சரிப்பட்டு வரும்.''

இப்போது க்யூ மறுபடியும் இடது புற மாய்த் திரும்பியது. வி. ஐ. பி. நுழைவுச் சீட்டோடு சிலர் அவசரஅவசரமாய் நுழைந்து கொண்டிருந்தனர். விசேஷ வாசல் வழி யாக. சிலர் சாதாரண சலாம் போட்டுக் கொண்டும் நுழைந்து கொண்டிருந்தனர். வாயிற் காவலாளியிடம் பொரிக வேண்டு தல்கள் பல உண்டு.

நுழையும்போது வத்சலாவின் பாதங் களில் ஜில்லென்று நீர் பட உடலெங்கும் வித்தியாசமான உணர்வுகள் திரும்பின.

''ராம்... நிச்சயம் பகவான் இந்தக் கல்யாணத்தை நடத்தி வச்சிடுவாரு பாரு'' என்றாள்.

இப்போது இருவருமே கோவிலுக்குள். திருவேங்கட வாயிலைத் தாண்டி உள்ளே இருந்தனர். – கோவிந்தா, கோவிந்தா... கோவிந்தா!

''திரும்பவும் பணத்தைப் பத்தி நினைக் காம பகவானை நினைச்சுக்குங்கோ...''

த்வஜஸ்தம்பம் நெருங்கியது....

அரங்கநாதர் வடிவத்தில், ஆதிசேஷன் படுக்கையில் சின்ன அளவு தங்க வடிவத்தின் முன்னால் சாஷ்டாங்கமாய் விழுபவர்கள், கன்னத்தில் போட்டுக் கொள்பவர்கள்...

நடமாடும் ஹோட்டல்கள்

ஏஷியாடிக் நிகழ்ச்சிகளின்போது பந் தயமைதானங்களில் சிற்றுண்டிவழங்கு வதற்காக உருவான நடமாடும் சிற் றுண்டி ஊர்திகளில் இரண்டை இந்திய சுற்றுலா வாரியம் சென்னையின் உபயோ கத்திற்கு அனுப்பியுள்ளது. மகாபலி புரத்தின் கடற்கரைக் கோயிலில் புறப் படும் இவ் ஊர்தி காலை நேரத்தில் ஹைகோர்ட் வாசலிலும், மாலையில் யூனிவர்ஸிடி கட்டிடத்திற்கு எதிரிலும் விற்பனை நடத்துகிறது. இவ்வூர்தியின் உள்ளேயே சகல வசதிகளுடன் கூடிய சமையல்கூடம் செயல்படுகிறது. பண் டங்கள் விலை குறைவாகவும் ருசியாக வும் இருக்கின்றன.

—பத்மாமணி

வரதராஜனை வலம் வந்து... எண்ணிக்கை வாயிலை நெருங்கினபோதுதான்—

''என்ன வத்சலா! எப்ப வந்தே...''— சித்தப்பா!

வத்சலா திரும்பினாள். ''என்ன சித்தப்பா வாங்களேன் இங்கே.''

ஒரு சின்ன வேண்டுகோள் விடுத்து, வத்சலா பக்கமாய்ச் சேர்ந்தார் க்யூவைப் பணிவாய் உடைத்துக் கொண்டு.

''உன்னையும், உங்க அப்பாவையும் நினைச் சுக்கிட்டே இருந்தேன். கண்ணில பட்டே.''

''என்ன எங்களைப் பத்தி நினைப்பு...''

''விஷயம் தெரியாதா உனக்கு. உமா பாங்கர்ஸ் திவால் ஆயிடுச்சாம்.''

''அதுக்கென்ன எங்களுக்கு...'' ஒரு மாதிரியாகக் கேட்டாள் சிரமப்பட்டு.

''உங்களுக்கென்னவா... உங்க அப்பா உன் கல்யாணத்துக்காக சேமிச்ச பணத்தை

அதுலதான் மூணு நாள் முன்னடி போட்டுத் தொலேச்சார்....''

''என்ன சித்தப்பா சொல்றீங்க....?''— ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது வத்சலாவுக்கு. தரை மட்டமென்ன, அஸ்தி வாரத்துக்கே போய்விட்டது அவளது ஆசைக் கனவுகள். இதைக் கேட்டுத் திரும்பிய இராமகிருஷ்ணனுக்கு, பிரமை பிடித்தாற் போல் ஆகிவிட்டது.

''ஆண்டவா உனக்கெதற்கு இத்தனே பணம்? என் தங்கையைப்போல் எத்தனேயோ பெண்கள் தாலிக்குக் கூட தங்கம் இல்லாமல் தவிக்க உனக்கெதற்கு இத்தனே தங்கம், பணம், காசு எல்லாம்? உனக்கெதற்கு சொல்லு. தேவைப்படும் நாங்கள் பரிதவிக்க, நீ மட்டும் தங்கக் கோட்டை கட்டிக் கொள்வதா? வெள்ளி விமானங்கள், வைர, வைடூரியங்கள் உனக்கெதற்கு? பக்தர்களின் தரித்திரம், சோதனே, வேதனே உனக்கு எதைப் பற்றியும் கவலே இல்லேயா? நீமட்டும் எங்கள் நிலேயில் இருந்தால்—இருந்து பார்த்தால் தெரியும். மௌனமாய்ப் பார்ப்பதே உன் வேலேயா?''

கருட வாகனத்தின் மீது இருந்த பெரிய கண்ணுடி மீதாய்த் தெரிந்த இராமகிருஷ்ணனின் பிம்பம் இப்படியெல்லாம் புலம்பியது.

அவனும் வத்சலாவும் இப்போது துவார பாலகர்களேக் கடந்து, கஜலட்சுமி வாயிலேக் கடக்க...

''வத்சலா... என் தங்கை கல்யாணமும் நடக்காது... நம்ம கல்யாணமும் நடக்கவே நடக்காது... நடக்காது...''

அளவுக்கு மிஞ்சினுல்...

ஆர்தர் ராங்க் என்பவர் ஒரு ஆங்கிலேயச் சீமான். அவர் மதுவே அருந்த மாட்டார். அவருக்கு ஒரு சமயம் நெஞ்சு வலி ஏற்பட்டது.

டாக்டர்கள் பிராந்தி கொடுத்தவுடன் வலி குறைந்து விட்டது.

அவரை விசாரிக்க வந்த நண்பர் ஒருவர் ''மதுவை வெறுத்தீரே, உங்களே அந்த மதுதானே காப்பாற்றியது'' என்ருர்.

அதற்கு ஆர்தர் கோபப்படாமல், ''உங்களேப் போல் குடிக்கும் பழக்கம் உள்ளவருக இருந்திருந்தால் அது எனக்கு மருந்தாகப் பயன்பட்டிருக்காது. விஷமாக ஆகியிருக்கும். நான் குடிக்காமலிருந்ததால்தான் அது மருந்தாகப் பயன்பட்டது'' என்று அமைதியாகக் கூறினுர்.

—எம். ராகவன்

''நடக்குமுங்க....!''

சடாரென்று திரும்பினுன் ராமகிருஷ்ணன். வத்சலாவும்தான்.

யார் அது?

மார்வாரி வியாபாரி அமைதியாய்ப்பின்னே நின்றிருந்தார்.

''நான்தான் சொல்றேன். நடக்கும்னு சொல்றேன். நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டிருந்ததை வழி நெடுகக் கேட்டுக்கிட்டுத்தான் வரேன். உங்க தங்கை கல்யாணமும் உங்க ரெண்டு பேரோட கல்யாணமும் நான் நடத்தி வைக்கிறேன்.''

ராமகிருஷ்ணன் திருதிருவென்று முழித்தான். கீழ் நகர்ந்து கொண்டிருந்தது. மார்வாரி வியாபாரி பேசப் பேசத் திரும்பிப் பார்த்தபடியே மெல்ல நடந்து கொண்டிருந்தான் ராம்.

''ஆமாங்க. உண்மையாச் சொல்றேன்.;'' வத்சலாவைக் காட்டி, ''இந்த வயசிலே எனக்கொரு பொண்ணு இருக்கு. எனக்குக் கொள்ளே கொள்ளேயாப் பணத்தை அள்ளிக் கொடுத்தான் வெங்கடாசலபதி. அந்தப் பொண்ணோட கழுத்தில தாலி ஏற,இன்னொரு பொண்ணோட கழுத்தில தாலி ஏற வையின்னு சூசகமா. புரிஞ்சுக்கிட்டேன்.ஒரு பெரியவர்மூலம் எனக்குத்தெரிவிச்சுட்டாரு.சரின்னு பிரார்த்திச்சுக்கத்தான் இங்கே வந்தேன். அனுமதி கிடைச்ச மாதிரி கண் முன்னலேயே உங்களேக் கொண்டாந்து நிறுத்திட்டாரு. கவலேப்படாதீங்க. என்னேட பிரார்த்தனேயை நிறைவேத்தணும். வெங்கடாசலபதி சகாயம் உங்களுக்குக் கிடைச்சுடுத்து...லட்சம் கொண்டாந்திருக்கேன்.அத உங்க கிட்டயே கொடுத்திடறேன். வச்சிக்கிட்டுக் கல்யாணத்தை நடத்துங்க. நானே வந்து நடத்திடறேன். பாருங்க... பாருங்க... அங்க பாருங்க.... அங்கப்பாருங்க...மூன்னலே பாருங்க...''

இப்போது ராமகிருஷ்ணனும் வத்சலாவும் மூலஸ்தான மூர்த்தியைப் பிரமை பிடித்தாற்போல் பார்க்க, சங்கு சக்ரமும், கணக்கற்ற வைரங்களும் வைடூரியங்களும், தங்கமும் வெள்ளியும், துளசியும் பூவும், மகரந்த மாலேயுமாய் நெஞ்சை அள்ளும் நிகரில்லா அழகில், நினேவு விட்டு நீங்கா தோற்றத்துடன், தூய ரூபனுய், சுந்தர சொர்க்கப் பார்வையுடனும், சூரிய தேஜஸ் பளீரென்று அந்தப் பிரதேசம் எங்கும் வீச, ''நான் நடத்தி வைக்கிறேன், நான் நடத்தி வைக்கிறேன் கவலேப்படாதே, கவலேப்படாதே'' என்று கருணே காட்டும் கலியுகக் கண்கண்ட தெய்வத்தைக் கண்ணுரக் கண்டனர். அழுது, கண்ணீர் வடித்து, மூலஸ்தான மூர்த்தியை ஆவேசத்தோடு ஓடிச் சென்று அவனிரு பொற் பாதங்களேக் கட்டித் தழுவிக் கதறிக் கதறி நன்றி சொல்ல வேண்டும் என வத்சலா நினேக்க,

அதற்குள்—

தடுத்தது. அந்த மூலஸ்தான மந்திரம்...

''ஜருகண்டி... ஜருகண்டி....!''

வளரும் குழந்தைகளுக்குத்



காரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான அதிக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் ஃபாரெக்ஸ்.

1. ஃபாரெக்ஸ் புரதச் சத்து நிரம்பியதாகும் —உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு இது அத்தியாவசியமாகும்.

2. ஃபாரெக்ஸ் வேறெந்த பிராண்டு செய்யப்பட்ட திட உணவைக் காட்டிலும் அதிக இரும்புச் சத்துள்ளதாகும். இது குழந்தைக்குத் தொற்றுநோய் எதிர்ப்புச் சக்தியையும் ஆரோக்கியமான இரத்தத்தையும் அளிக்கிறது.

3. ஃபாரெக்ஸில் கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ் சரியான விகிதத்தில் சேர்ந்திருக்கின்றன. ஆரோக்கியமான எலும்புகளையும் திடமான பற்களையும் பெற இவை உதவுகின்றன.

4. தவிர ஃபாரெக்ஸ், குழந்தையின் மென்மையான செரிக்கும் சக்திக்கேற்றவாறு விசேஷமாக முன்கூட்டியே பக்குவம் செய்யப்பட்டதாகும்.



டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

வழங்குவோர் க்ளாக்ஸோ

CASGLF-42 183 TM

சூடா எ

கலைவாணர்

ஜி. என். பி. நடித்த 'ருக்மாங்கதா' படம் திரையிடப்படுகிறது.... படத்துக்குக் கூட்டமே இல்லை... கலைவாணர் காமெடி சேர்த்துத் தரச் சம்மதிக்கிறார். படத் தயாரிப்பாளரிடம் ஒரு பெரும் தொகையும் பெறுகிறார்.

காமெடி சேர்க்கப்பட்ட பின் படத்துக்கு வரவேற்பு?

முன்பு இருந்ததை விட மோசம்!

இது தெரிந்ததும் தாம் பெற்ற தொகையைப் படத் தயாரிப்பாளருக்கே திருப்பி அளித்து விடுகிறார் கலைவாணர்!

சொன்னவர்:
கலைமாமணி
கு. தேவநாராயணன்
கேட்டவர்:
ஆர். பி. சாரதி

ஜெயில்சிங் ஸ்பெஷல்

சமீபத்தில் ஜனாதிபதி ஜெயில் சிங் பம்பாய்க்கு விஜயம் செய்தபோது, அவரது ஹெலிகாப்டரை எங்கே இறங்க வைப்பது என்ற பிரச்னை எழுந்தது. பம்பாயில் நான்கு ஹெலிபேட்கள் உண்டு. இவற்றில் ஒன்றுகூட ஜனாதிபதியை வரவேற்கத் தகுதியற்றதாகக் கருதப்பட்டு, ஐ.ஐ.டி.யில் புதிதாக ஒன்றைக் கட்டினர். ஆனால் நிகழ்ச்சி நிரலில் மாறுதல் காரணமாக மகாலட்சுமி என்ற இடத்தில் வேறு இரண்டு ஹெலிபேட்கள் விரைவாகக் கட்டி முடிக்கப்பட்டன.

நான்கு லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த ஹெலிபேட்களை மறுபடி உபயோகிக்கவும் வாய்ப்பில்லை. ஜனாதிபதியும் பயன்படுத்தவில்லை. அவர் ராஜ்பவனில் பழைய



ஹெலிபாடில் வந்திறங்கினார். புதிய விமான தளத்தில் வந்து இறங்கியவர்கள் ஜனாதிபதியின் பேரக் குழந்தைகள்!

ஆதாரம்: தி வீக்
தகவல்: டி. விஜயலட்சுமி

அறிவுள்ளவன்!

மூன்று பேருக்கு, 'அறிவுள்ளவன் யார்?' என்பதில் சந்தேகம் வந்தது. மூவரும் திருவள்ளுவரிடம் சென்று, "அறிவுள்ளவன் யார்?" என்று கேட்டனர். அதற்குத் திருவள்ளுவர்,

"நேற்று அழுத எவன் ஒருவன் நாளை அழாமல் இருக்கக் கற்றுக் கொள்கிறானோ, அவனே அறி



வுள்ளவன்" என்றார்.

குன்றக்குடி அடிகளார் சொற்பொழிவில் இருந்து
வி. கோபிநாத்

அமிதாபின் வைராக்கியம்

ஹிந்திப் பட உலகின் சூப்பர் ஸ்டாரான அமிதாப்பச்சன் சில மாதங்களுக்கு முன்வரை மதுவுக்கும், சிகரெட்டுக்கும் அடிமையாகி இருந்தார். இப்போது இரண்டையுமே நிறுத்திவிட்டார்!

ஆதாரம்: ஸண்டே அப்ஸர்வர்
தகவல்: ராஜேஸ்வரி





...ன இருந்த?

கைதியின் குரல்

சுதந்திரப் போராட்டக் காலம். சேலத்தில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தில் விஜயராகவாச்சாரியார் பெயர் இணைக்கப்பட்டு அவருக்கும் மற்றும் ஒன்பது பேர்களுக்கும் பத்து ஆண்டு தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டது. நிரபராதியென்று நிரூபித்து விடுதலை பெற வேண்டும் எனப் பிடிவாதமாக உழைத்தார். இவருக்கு ஆதரான நாட்டன்



துரை தம் வழக்கத்துக்கு விரோதமாக, சொந்தமாக வாதாடாமல் ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டினார். நீதிபதி அவரை ''நீங்கள் எதைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டதற்கு அவர் ''கைதி சிறையில் இருந்து எழுதி அனுப்பியதைப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதை விட நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை'' என்று பதில் கொடுத்தார். நீதிமன்றம் விஜயராகவாச்சாரியார் குற்றமற்றவர் என்று தீர்ப்பளித்து விடுதலை செய்தது. ஆனால் அவரோ, தான் மட்டும் விடுதலை ஆகாமல் தன் சகாக்களுக்காகக் கடைசி வரை போராடி அவர்களுக்கும்



விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

—விஜயா சிவகாசிநாதன்



சமத்துவம்

தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு சமயம் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் இல்லத்துக்கு வருகை தந்தபோது தம்முடன் ஒரு வேலைக்காரப் பையனையும் அழைத்து வந்திருந்தார். அவனுக்குப் பாரதியார் 'சமத்துவம்' என்று பெயரிட்டிருந்தார். அன்று அவர்கள் வீட்டில் அந்த வேலைக்காரப் பையன் ஒரு மூலையில் போய் உட்கார்ந்திருந்தான். உடனே பாரதியார், ''அடே சமத்துவம் நாற்காலியில் போய் உட்கார்'' என்றார். அவன் நாற்காலியில் உட்காரத் துணியவில்லை. நடுங்கினான். பாரதியார் எழுந்து அவனைத் தூக்கி நாற்காலியில் அமர்த்தினார்.

—மீனுமுத்து



வாரியார் வாக்கு

சதா சளசள என்று பேசிக் கொண்டிருக்காதே. அது பிழை. பேச்சுக் குறைவாகவும் செய்கை அதிகமாகவும் இருக்க வேண்டும். சதா ஒலித்துக் கொண்டே இருக்கும் தண்டை, சிலம்பு முதலிய அணிகலன்கள் காலில் கிடக்கின்றன. மௌனமாக உள்ள அணிகலன்கள் கழுத்திலும் தலையிலும் அணியப்படுகின்றன.

கூறியது வாரியார்

தகவல்: கோவை ஜெயா

புரியாத கையெழுத்து

இளைஞர் ஒருவர் ரயில்வேக் கம்பெனி ஒன்றுக்கு வேலைக்கு விண்ணப்பம் செய்தார். அந்தக் கம்பெனியோ விண்ணப்பம் செய்தவரின் கையெழுத்து சிறிதும் புரியவில்லை என்று காரணம் கூறி நிராகரித்து விட்டது. விண்ணப்பதாரர் யார் தெரியுமா? கம்யூனிஸத் தந்தை கார்ல் மார்க்ஸ்!

— சூ. சந்திரசேகரன்

பஸ் ஸ்டாப்புக்கு ராம் வந்தபோது கூட்டம் பிதுங்கி வழிந்தது. நசநச வென்று ஒரு தூறல் ஆரம்பிக்க, மிச்சம் மீதி ஆட்களும் உள்ளே வந்து ஒண்டிக் கொள்ள, மூச்சு முட்டியது.

லேசாக ஆரம்பித்த தூறல், பலத்துக் கொண்டே வர, சாலை பளபளத்தது.

'ச்சே, என்ன இது? முதல் நாளே க்ளைமேட் மோசமா இருக்கு!' — அலுத்துக் கொண்டே அவன் இடது பக்கம் திரும்ப—

அருகில் வந்து நின்றது அந்த பியட் கார்.

வெளியே நீண்ட தலையைப் பார்த்தபோது அதிசயப்பட்டான்.

எம். டி..!

''கமான்... ஏறிக்குங்க ராம்!''

சட்டென ஏறிக்கொண்டான். கார் புறப்பட்டது.

''வீடு எங்கே? ட்ராப் பண்ணிடறேன்.''

''வேணும் சார். உங்களுக்கு எதுக்குக் கஷ்டம்?''

''பரவாயில்லே. இதுல என்ன இருக்கு?''— சகஜமாகப் பேசிக் கொண்டே அவர் வந்தபோது இவன் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனான்.

தெரு முனையில் இறங்கிக் கொண்டான்.

''வீட்டுக்கு வாங்க சார்!''

''அவசர வேலை இருக்கு ராம். இன்னொரு நாள் அவசியம் வரேன்!''

''ஓ.கே. ஸார்!''

''இந்த சார் மோரெல்லாம் வேண்டாம். குப்தானு என் பேரைச் சொல்லியே நீங்க கூப்பிடலாம்.''

''ஓகே.... மிஸ்டர் குப்தா!''

இதுவும் அதுவும்..

தேவிபாலா



வீட்டுக்குள் விசிலடித்துக் கொண்டே நுழைந்தான்.

''ஒரே குஷியா இருக்காப்பல இருக்கு. என்ன சங்கதி? ஆபீஸ்ல முதல் நாள் அனுபவம் ரொம்பப் பிரமாதமோ?'' – லட்சுமி ஆர்வத்துடன் கேட்டாள்.

''அதை ஏன் கேக்கறே? எம். டி. கார்லயாக்கும் நான் வந்தேன். இன்னிக்கு ஜாயின் பண்ணினதால அவர் முகம் கூட எனக்குச் சரியாக ஞாபகம் இல்லே. திடீர்னு காரைத் திறந்து ஏறிக்கன்னு சொன்னப்போ அதிர்ந்துட்டேன். மனுஷன் ரொம்ப சகஜமாப் பேசிட்டு வந்தார். இனிமே நான் ராஜா தான்!''

மறு நாள் அதே குஷியோடு ஆபீசுக்குப் புறப்பட்டான். உள்ளே நுழைந்து தன் இடத்தில் உட்கார்ந்தபோது கொஞ்சம் கர்வமாகக் கூட இருந்தது. புதுசா மாற்றலாகி வந்த எனக்கு எம். டி. கிட்ட எந்த அளவுக்கு மரியாதை என்று யார் கிட்டயாவது காட்டிக்கணும் – நினைத்துக்கொண்டான்.

அதற்குள் அங்கே ஒரு பரபரப்பு எழ, எம். டி. உள்ளே நுழைந்தார்.

நேரகமாகத் தலையை ஆட்டிவிட்டு வேகமாக உள்ளே போனார் குப்தா.

அடுத்த அரை மணி நேரத்தில் அழைப்பதாக பியூன் வந்து சொல்ல, எழுந்து நின்று கம்பீரமாகப் பார்வையை ஒரு முறை சுழல விட்டுப் பின்தொடர்ந்தான் ராம்.

குனிந்த தலையோடு எதையோ மும்முரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.



லேசாகக் கனைத்துவிட்டு, இவன் எதிரே உட்கார்ந்து கொண்டான்.

இவன் மேல் பார்வையை நாட்டிய எம்.டி. ''உங்களுக்கு எத்தனை வருஷம் சர்வீஸ்?'' என்றார்.

''எட்டு!''

''அப்படித் தெரியலையே இந்த ஸ்டேட்மெண்டைப் பார்த்தா? இது நேத்திக்கு நீங்க பிரிப்பேர் செஞ்சதுதானே?''

அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல், கொஞ்சலான குரலில், ''போங்க குப்தா, விளையாடறீங்க நீங்க!'' என்றான்.

''ஷட் அப்!''

அதிர்ந்தான்.

''மரியாதை கூடத் தெரியாத நீங்கள்ளாம் எதுக்கு ஆபீசுக்கு வர்றீங்க?''

''மிஸ்டர் குப்தா....''

''ஸே.... ஸார், ஐ'ம் யுவர் பாஸ்.''

''........''

''புதுசா வந்ததாலே இந்த முறை எக்ஸ்யூஸ் பண்ணறேன். வேலையில இது மாதிரி தப்புப் பண்ணினா நான் பொறுத்துக்க மாட்டேன். ஜாக்கிரதை. நீங்க போகலாம்!''

முகம் சிவக்க வெளியே வந்தான் ராம். அவமானத்தில் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

இவர் நேத்திக்குப் போட்டதெல்லாம் வேஷம். ஏன் அப்படித் தேன் ஒழுகப் பேசணும்? இப்பத் தூக்கிப் போட்டு 'டமால்'னு உடைக்கணும்! நான் கேக்கலையே! அகம்பாவம்...! சே! எவ்வளவு கர்வப்பட்டேன், பெருமைப் பட்டேன்! அத்தனையும் நொறுங்கிப் போச்சே!

அதே மன நிலையில்வேலையிலும்தொடர்ந்து தப்புகள் வர, சக நண்பர்களிடம் எரிந்து விழ, ஒரு வழியாக ஐந்து மணியானபோது, அப்பாடா என்று ஆபீஸை விட்டு வெளியே வந்தான். குப்தாவைத் தவிர்க்க, அவசரமாக ஆட்டோவைப் பிடித்துப் புறப்பட்டான். மனத்துக்குள் ஒரு எரிமலை குமுறிக் கொண்டிருந்தது.

வீட்டுக்குள் நுழைந்தும் ஒன்றும் பேசவில்லை.

''இன்னிக்கு விசேஷம் ஒன்றும் இல்லையா ஆபீஸ்ல?''

''ம்ஹூம்!''

காப்பியை வாங்கிக் குடித்து விட்டு ஒரு புத்தகத்தோடு ஈஸிச் சேரில் சாய்ந்தான்.

''ராஜேஷ், விளையாடினது போதும். படிக்க வா!'' – லக்ஷ்மி அழைத்தாள்.

''இன்னும் கொஞ்சம் விளையாடிட்டு....''

''வாடா உள்ளே... கையைக் காலை அலம்பிட்டு, கணக்கு நோட்டை எடுத்துண்டு வா....ம்!''

வந்தான்.

''இந்தக் கணக்கை உனக்கு எத்தனை தடவை நான் சொல்லித் தந்திருப்பேன்? மறுபடியும் தப்பு!''

''......''

''ஏண்டா அறிவில்லே? இதையே போட வரலேன்னு எப்படா உருப்படப் போறே? எப்படா உருப்படப் போறே?''

அடுத்த ஒரு மணி நேரம். அடி, அர்ச்சனை, ஆலாபனை என்று விறுவிறுப்பாகப் போய்க்

கொண்டிருந்தது. ராஜேஷ் கணக்கைச் சரி யாகப் போடும் வரை அவனைச் சாருகப் பிழிந்து எடுத்து விட்டாள்.

''சரி போதும். மீதியை நாளைக்குப் படிக்கலாம். புத்தகத்தை எடுத்து உள்ளே வச்சுட்டு வா!''

பின்னே உள்ளே போனபோது அவனும் உள்ளே போனுன்.

''ராஜேஷ், இங்க வாம்மா! அம்மா உனக்கு என்ன பண்ணி வச்சிருக்கேன் பாரு!''

''அய்.... போரி விளங்காய்!''

அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டு சுவாரசியமாக அதை அவன் சாப்பிடத் தொடங்க,

பரிவோடு மகனைத் தடவிக் கொடுத்தாள் லக்ஷ்மி.

அதிர்ந்து போனுன் ராம்.

இதென்ன முரண்பாடு?

கொஞ்ச நேரத்துக்கு முன்னலே அடி வாங்கின ரோஷம் இவன் கிட்டேயும் இல்லே. அடிச்ச கோபம் இவகிட்டேயும் இல்லே. எப்படித் திடீர்னு மாறிப் போக முடிந்தது?

''லக்ஷ்மி, எனக்கு இது புரியலே. குழந் தையைப் பிய்ச்சு எடுத்த நீயா இப்பக் கொஞ்சறே? அவனும் ரோஷம் பாராட்டா மல் மடியிலே படுத்துண்டு இருக்கானே!''

''என்னோட ரெண்டு முகங்களையும் அவன் தெளிவாப் புரிஞ்சுண்டு இருக்கான். அதான்.''

''ரெண்டு முகங்களா?''

''ஆமாம். பாடம் சொல்லிக் கொடுக்கும் போது நான் டீச்சர். அங்கே பாசத்துக்கோ, சலுகைக்கோ இடமில்லே. அங்கே அம்மாங் கற உறவு குறுக்கே வந்தா அவன் படிக்க மாட்டான். புத்தகத்தை மூடினப்புறம் நான் அவனோட தாய். அதான் மடியிலே படுத்துக் கொஞ்சறுன். ஸ்நேகமோ, உறவோ எதுவானுலும் கடமைக்குக் குறுக்கே முட்டுக் கட்டையா வரக் கூடாது. வந்தால், சலுகை களை அது கேட்கும். உறவை ஆதாரமாப் பிடிச்சுட்டு ஆழிச்சாட்டியம் பண்ணும். அது காரணமா திறமைதான் மழுங்கிப்போகும்!''

பளிச்சென்று புரிந்தது ராமுக்கு...

'ஆபீஸ்லே நான் அதிகாரி. வெளியே வந் தால் நல்ல ஸ்நேகிதன். எனக்கும் ரெண்டு முகங்கள்தான்!'

குப்தா கண்களில் வந்து நின்று சிரிக்க, 'நான் புரிஞ்சுக்கிட்டேன் குப்தா....' என்று அவனது உதடுகள் முணுமுணுத்தன.

யூதர்கள் திருமணம்

யூதர்களின் திருமணம் காலை துவங்கி மாலை வரை நடக்கிறது. திருமணத் திற்கு முதல் நாள் இரவு மணப் பெண்ணை நன்ருக அலங்கரித்து ஊர்வலமாய் அழைத்து வருகிருர்கள். திருமணத்தன்று காலை சம்பிரதாய உடையான லுங்கி, ப்ளவுஸ் அணிந்து மணப்பெண் கோவிலுக்குச் சென்று பூஜை செய்கிருள். மாலையில் தரை யில் புரளும் நீண்ட வெள்ளை ஆடை அணிந்து, தலையில் கிரீடம் வைத்து, முகத்திரையுடன் வருகிருள். கோவில் வாசலில், மணமகன் வரவேற்று, தங்கக் குவளையில் மது அளிக் கிருன். கல்யாண மணி அடிக்கிறது. மணமகள் மது அருந்துகிருள். மணமகன் ஓர் ஒப்பந்த தகலைப் படிக் கிருன். இருவருமாக இணைந்து கையெழுத்திடுகின்றனர். மணமகளின் முகத்திரை நீக்கப்படுகிறது. அந்தக் கணத்தில் மணப்பெண்ணிற்குப் புது வாழ்க்கை துவங்குகிறது.

கேரளாவில் மட்டும் யூதர்களுக்காக ஒன்பது கோவில்கள் உள்ளன.

ஆதாரம்: ஸண்டே மிட்டே.

தகவல்: பட்டாணி.





ஓர் இளைஞன் பல சந்தர்ப்பங்களில் பெண்களைப் பலவந்தப்படுத்த முயன்று சில தருணங்களில் வெற்றியும் காண் கிருன். அவனுக்கு மூளை சரியில்லை என்று கருதப்பட்டு மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்படுகிருன். சிறிது காலத்தில் மனுேதத்துவ நிபுண ரான டாக்டர் அவன் அபிவிருத்தி அடைந்து விட்டான் என்று கூறி மருத்துவமனையிலிருந்து வெளியேற்ற, உடனும் அவன் மறுபடி பெண்களைப் பலவந்தப்படுத்துவதில் வெற்றி காண் கிருன்.

இப்போது குற்றவாளி அவன் மட் டுமா? டாக்டரும் கூடவா?

டாக்டரும் குற்றவாளிதான் என்று தீர்ப்பளித்து ஜெர்மானிய நீதிமன்றம். 81,600 ரூபாய் அபராதம் விதித்தது டாக்டருக்கு!


ஆதாரம்: ஜெர்மன் டிரிப்யூன்.



விருந்தினரை
வரவேற்க -
இதோ
நரசுஸ்
காபி
அது ஜீவனுள்ள
ஒரே காபி.
''தெர்மலோ'' முறை
தயாரிப்பு காபி.
WELCOME
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2439

யூகோப்ளான்—உங்கள் வளமான வாழ்விற்கோர் திறவுகோல்!

உங்கள் சேமிப்பு பாங்க் உங்களை என்னவென்று நினைக்கிறது?





கற்றுக்குட்டியென்று? கற்றுத்தேர்ந்தவர் என்று?

ஆமாம்—எல்லா பாங்குகளும் ஒரு மாதிரி இருப்பதில்லை. உங்கள் டெபாஸிட்டுகளுக்கும் எல்லா பாங்கும் ஒரே விதத்தில் வட்டி தரலாம். ஆனாலும் வாடிக்கையாளரான உங்களை எப்படி நினைத்து நடத்துகிறார்கள் என்பதில்தான் வேறுபாடு காணலாம்.

யூகோபாங்க் வாடிக்கையாளர்களை யூகோப்ளான் வழியில் நடத்திச் செல்கிறது. தொழில்ரீதியான ஆலோசனை மூலம் உங்கள் டெபாசிட் எப்படி விரைவில் அதிகமாக வருமானம் சேர்க்கமுடியும் என்பதை விளக்கிச் சொல்கிறது. யூகோப்ளான் வெறும் சேமிப்பு திட்டம் மட்டுமல்ல-பலவகையில் வட்டி அளிக்கும் ஒரு அற்புத சூத்திரம்! நீங்கள் உங்களால் முடிந்ததை சேமித்தால்—உங்கள் டெபாஸிட் பலனளிக்க பலவழிகளை நிர்ணயிப்பது யூகோப்ளான்!

சாதாரண மாதாந்திர டெபாஸிட்டான ரூ. 150 வாடிக்கையாளருக்கு எப்படி விரைவில் அதிகமான வருமானத்தை சேர்க்கிறது என்று படித்துப் பாருங்கள். உங்கள் டெபாஸிட்டின் பேரில்.

தொழில் ரீதியான ஆலோசனைகளை தரும் யூகோபாங்க். சேமியுங்கள். யூகோ பாங்க் மட்டுமே அளிக்கும் யூகோப்ளான்மூலம்.

யூகோப்ளான்

ஒரே சேமிப்பு. பலவகை வட்டி...

டெபாசிட் (ரூ)	காலம்	மொத்த வருமானம் (ரூ)
மாதம் 150.00 வீதம் 120 மாதங்கள்	36-ஆம் மாத முடிவில்	3,366.40
	72-ஆம் மாத முடிவில்	5,162.20
	120-ஆம் மாத முடிவில்	17,228.40
மொத்தம்		25,757.00

வட்டி விகிதங்கள் ரிசர்வ் பாங்கின் உத்தரவிற்குட்பட்டது.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

உங்கள் அருகாமையில் உள்ள வசதியான பாங்க்

[illegible] TAM

வட்ட மேஜை

● சென்னை பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் பி.எஸ்.ஸி மூன்றும் பருவத்திற்கு உரிய தேர்வின், இயல்பியல் மூன்றும் தாள் நவம்பர் 21ம் தேதி நடக்க உள்ளது. ஆனால் அதே நாளில் தமிழ் நாடு அரசு தொழிற் பயிற்சி கல்வியான தட்டச்சு மேல்நிலைத் தேர்வையும் நடத்துகிறது. என்னைப் போன்ற இரண்டு தேர்வுகளுக்கும் விண்ணப்பித்துள்ள மாணவர்கள் ஏதாவது ஒரு தேர்வை எழுத முடியாத நிலை. இது பல்கலைக் கழகத்தின் கவனத்திற்கு வருமா?

சென்னை-35 கா. ச. பரமேஸ்வரன்

பல்கலைக் கழகம் கவனிக்குமா?

ஒரு வரி இல்லை

● ஜனதா கா. கா. தே. கா. இணைப்பு மாநாட்டில் காரை ஓட்டிய ஸ்ரீரங்கம் மாதவனைப் பற்றி எழுதிய நீங்கள், அந்த வியன்மிகு பந்தலைப் பொறுப்பேற்று அமைத்துக் கொடுத்த குடந்தை பத்மநாபனைப் பற்றி ஒரு வரிகூட எழுதவில்லையே!

இளங்கார்குடி கோ. பாஸ்கர்

பயன் உண்டா?

● 'அந்த நிலை வரவேண்டாம்!' தலையங்கம் கண்டேன். முதல்வர் படித்துப் பயன் பெறுவாரா?

பட்டீச்சுரம் பி. நெடுஞ்செழியன்

குறை இல்லை

● ஜோக் ஒன்றை விமர்சிக்கப்போய், ''மின்விளக்குப் போட்டுக்கொண்டு எவன் திருடுவான்?'' என்று கேட்டிருக்கிறார் கும்பகோணம், டி. எஸ். சீதாராமன். (வட்டமேஜை, 30—10—83 இதழ்) சென்ற செப்டம்பர் மாதம் என் வீட்டுக்கு எதிர் வீட்டில் அதே மாதிரி நடந்தது. வீட்டுச் சொந்தக்காரர்கள் வெளியூர் போயிருந்தார்கள். வீடு பூட்டியிருந்தது. ஆனால் அன்று இரவு ஒன்பது முதல் பத்து வரை விளக்கு எரிந்தபோது, 'சரி, திரும்பி வந்து விட்டார்கள்' என்று எண்ணி ஏமாந்து போனேனும்! எனவே ஜோக்கில் குறை ஏதும் இல்லை!

சென்னை-44 வி. சந்திரசேகரன்

மாறுதல் வரும்

● வழக்கமான மர்மக் கதைகளுக்குச் சற்று மாறுதலாகவும் வித்தியாசமான முறையில் விறுவிறுப்பாகவும் இருந்தது. 'கபா'வின் ''என்னைக் கொல்லப்...'' மர்மக் கதை.

மே. மாம்பலம் எஸ். மோகன்

படு வேகம்

● வையவனின் தொடர் ஆரம்பமே படு வேகம்! ஜங்ஷனிலே அந்த மேம்பாலத்திலிருந்து கீழே இறங்க எனக்கு மனமே இல்லை.

சென்னை-39 திருமதி நாராயண ராவ்

பீஸ் பீஸா....!

● 'வளர்த்த கடா'வை பீஸ் பீஸா கூறுபோட்டு (விமர்சனம்) வச்சிட்டீங்களே சார்!

சென்னை-4 மயிலை கோபி

கருவி

● இந்த வாரப் போட்டிக் கதையான ''நாளைய நிகழ்ச்சிகள்'' வெகு அருமை. வாழ்க்கை என்பது மற்றவர்களுக்கு உதவும் ஒரு முக்கிய கருவி என்பதை ஆசிரியர் வலியுறுத்திச் சொல்லி யிருக்கிறார்.

சென்னை கலைமணி

டானிக்

● விரக்தி ஏற்பட்டு வாழ்வை முடிக்கத் துடிக்கும் உள்ளங்களுக்கு 'நாளைய நிகழ்ச்சிகள்' கதை ஒரு நல்ல டானிக்.

சிந்தாதிரிப்பேட்டை பா. உதயா

உலா வர ஓர் உலகம்

இதோ என் காதலன்!

வாஸந்தி

2

ஒருவனது ஆயுட்காலம் முடியுமுன் பார்த்தே ஆகவேண்டிய இடம் என்ற கருத்தில் "நேப்பில்ஸைப் பார்த்துவிட்டுச் செத்துப்போ" என்று ஆங்கிலத்தில் வசனம் சொல்வார்கள்.

நேப்பில்ஸைப் பார்ப்பதற்கு முன்பே எனக்கு நா வறண்டு கண்கள் செருகிக் கொண்டு வந்துவிட்டது — காப்பி குடிக்காமல்! நம் ஊர் ஸ்டேஷன்கள் இரைச்சலோ அசிங்கமோ, நினைத்த நேரத்தில் காப்பி வழங்கும் மனிதாபிமானமிக்கவை என்று அந்த க்ஷணம் எனக்குப் பாசம் ஏற்பட்டது.

வண்டியை விட்டு இறங்கியதும் சப்தமில்லாமல் விரைந்து நடக்கும் இத்தாலியர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு கஃபேக்கு விரைந்தோம். சில இத்தாலியர்களுக்குச் சுமாராக ஆங்கிலம் புரிகிறது. சற்று அபிநயித்து "காஃபி வித் மில்க்" என்றால் "ஓ, காப்புச்சினோ?" என்று புன்னகைத்து நிமிஷமாய்ச் சுடச் சுட ஆவியில் சூடாக்கப் பட்ட காப்பியைக் கொடுக்கிறார்கள். நல்ல கொட்டை வறுத்த காப்பி. அதோடு ஒரு பன்னோ, ஸாண்ட்விச்சோ சாப்பிட்டால் காலை ஆகாரம் முடிந்தது. சின்னக் கடைகள் ஆனாலும் காகித நாப்கின்கள் கொடுக்கிறார்கள். குப்பையைப் போடக் குப்பைத் தொட்டி வைத்திருக்கிறார்கள். யாரும் தப்பித் தவறிக்கூட குப்பையைக் கீழே போடுவதில்லை. ஸ்டேஷனில் உண்மையில் அதிகக் கூட்டமே இல்லை. என் கண்ணில் பட்ட ஜனங்கள் எல்லோரும் சுமாரான பண வசதி உள்ளவர்களாகத் தெரிந்தார்கள். இவ்வளவிற்கும் இத்தாலியில் வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகம். அதனால்தான் நிறைய திருட்டுக்கள் நடக்கின்றன என்றார்கள். நம் ஊர்களில் தென்படும் பிச்சைக்காரர்களையோ ஏழைமையையோ நான் அங்கு பார்க்கவில்லை. ரயிலில் நாங்கள் உட்கார்ந்திருந்த பெட்டியைச் சுத்தம் செய்ய வந்த ஆள்கூட கம்பீரமாக, பெரிய உத்தியோகஸ்தர் போல் இருந்தார். வெளுப்புத் தோல் காரணமோ என்னமோ!

நேப்பில்ஸிலிருந்து பதினேழு மைல் தொலைவிலிருக்கும் காப்ரீ என்கிற தீவு மிக அழகானது. அவசியம் பார்க்கப்பட-வேண்டியது என்று யாரோ சொல்லியிருந்ததால் அதைப் பார்க்கும் ஆசையுடன் கிளம்பியிருந்தோம். ஸ்டேஷனருகில் நீல நிற சீருடையணிந்த டூரிஸ்ட் இன்ஃபார்-மேஷன் கைடுகள் இருப்பார்கள். கேட்டால் விவரம் சொல்வார்கள் என்று சொன்னார்கள். கைடுகள் மிக உதவியாகத்தான் இருக்கிறார்கள். அதில் சிலர் டாக்ஸிக்காரர்களுக்கு உள்கை என்று பட்டது. என் புடவையைப் பார்த்தே ஏமாற வந்தவள் என்று தீர்மானித்தாற்போல் 'பஸ்ஸைப் பிடித்து நீங்கள் ஸ்டீமரைப் பிடிக்கத் துறைமுகத்தை அடையவே முடியாது. டாக்ஸியில் போய் விடுங்கள் 80,000 லீராக்கள்தான் (1500 லீரா — ரூ. 10) ஆகும்" என்றார் ஒருவர். நல்ல வேளையாக இன்னொருவர் பஸ்ஸைப் பிடிக்கும் வழி சொன்னார். டப்பாச்சி எனப் படும் சின்ன சிகரெட் விற்கும் பெட்டிக் கடைகளில் பஸ் டிக்கட்டுகள், ஸ்டாம்புகள் எல்லாம் கிடைக்கின்றன. பஸ் டிக்கெட்டுகளை அங்குதான் வாங்க வேண்டுமாம். எங்களுக்குத்தெரியாமல்பஸ்ஸில் ஏறிவிட்டோம். சற்றுத் தூரம் சென்றதும்தான் பஸ்ஸில் யாரும் டிக்கெட் வழங்கவில்லை என்று தெரிந்தது. பஸ்ஸில் அநேகமாக யாருக்கும் ஆங்கிலம் தெரியாவிட்டாலும் எங்களைப் பார்த்துச் சிநேகிதமாகச் சிரித்தார்கள். ஒரு மிக அழகிய இளம் கல்லூரி மாணவி (கொஞ்சம் கூட அலங்காரப் பூச்சில்லாமல்) இருந்தாள். கொச்சையான ஆங்கிலத்தில், 'கவலைப்படாதீர்கள், என்னுடைய டிக்-கெட்டை நான் இறங்குவதற்கு முன் தருகிறேன். யாராவது பரிசோதிக்க வந்தால் டிக்கெட்டைக் காண்பியுங்கள்' என்று கொடுத்துச் சென்றாள். மற்றொரு பெண் 'நீங்கள் இறங்க வேண்டிய இடம் காண்பிக்கிறேன்' என்று காண்பித்தாள். அத்தனை அழகான, சிநேக பாவத்துடன் கூடிய ஜனங்களை நான் அதுவரை பார்த்ததில்லை. எல்லா இளம் வயது இத்தாலிய ஆண்களும் பெண்களுமே மிக அழகாக இருந்தார்கள். ஆங்கிலத்தில் அலபாஸ்டர் என்பார்கள். அப்படிப்பட்ட மாசு மருவில்லாத சருமம். கச்சிதமான உடம்பு. ஆணும் பெண்ணும் ஜோடியாகச் சென்றால் ஒருவரையொருவர் அணைத்தபடியே சென்றார்கள்.



○ புனித போப் ஆறாவது பால்

அப்படி நடப்பதே இங்கு ஒரு பந்ததியாக இருக்கும்போல் தோன்றிற்று.

காப்ரீ தீவுக்குச் செல்லும் ஸ்டீம் போட் பயணம் சுவாரஸ்யமானது. சாதாரணமாக வார இறுதியைக் கழிக்க இத்தாலியர்கள் இங்கு மூட்டை முடிச்சுகளுடன் வருகிறார்கள். நாங்கள் போன கையுடன் ரோமுக்குத் திரும்புகிறோம் என்றதும் விநோதமாகப் பார்த்தார்கள்.

காப்ரீ தீவின் சுவாரஸ்யம் அதன் மலை உச்சியில் இருக்கிறது. மலை உச்சியில் பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் அழகிய சர்ச் இருக்கிறது. கீழிருந்து மேலே சென்று ஒரு அவசரப் பார்வை பார்க்க விரும்பும் அவசரக்காரர்களுக்காக ஏழெட்டுப் பெட்டிகள் கொண்ட (ரயிலைப் போல) விஞ்ச் செல்கிறது. காமிரா வைத்துக் கொண்டிருக்கும் டூரிஸ்டுகள் மிகச் சுறுசுறுப்பாகத் தங்களைச் சுற்றித் தெரியும் இயற்கை எழிலை முழுதும் படம் பிடித்துக் கொள்ளும் வேகத்துடன் இயங்குகையில் நான் தனியாக என்னுள் மூழ்கியவளாகப் பார்த்தேன். மலைச் சரிவில் அழகிய கிராமங்கள். சின்னச் சின்னச் சுத்தமான வீடுகள். அவற்றைச் சுற்றிப் பூச்செடிகள் திராட்சைத் தோட்டங்கள். கீழே நீல நிறக் கடல். கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

என்னைப் போல் பல ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் நின்றிருந்தார்கள். அதில் நிறைய வயதானவர்கள். விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க இவர்கள் காண்பிக்கும் ஆர்வம் ஆச்சரியமளித்தது. பொருளாதார நிலைமைக்கும் இந்த ஆர்வத்துக்கும் நேரிடைத் தொடர்பிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. இந்தியாவில் இந்த ஆர்வம் தீவிரமாகப் படர இன்னும் சில நூற்றாண்டுகள் ஆகலாம் என்று நான் நினைத்துக் கொண்டேன்.



○ மைக்கலான்ஜலோ வடித்த சிற்பம்

மறுபடி ஒரு ஸ்டீம் போட்டைப் பிடித்து நேபிள்ஸை அடைந்தோம். ரோமை விட நேப்பிள்ஸ் சுத்தமாக இருக்கிறது. புராதன பழைய வீடுகளை, அடுக்கு மாடிக் கட்டிடங்களை அதன் வெளி உருவம் மாறாமல் வைப்பதில் ஐரோப்பியர்கள் மிகக் கருத்தாக இருப்பதை நான் புரிந்து கொண்டேன். வீட்டிற்குள் மிக நவீனமாக இருந்தாலும் வெளி ஃப்ரேம் மாற்றப்படாமல் வைத்திருப்பது ஒரு பிரத்யேக அழகையும் பாத்திரத் தன்மையையும் ஏற்படுத்துகிறது. எந்தப் பிரஜையும் அதைக் குலைக்கும் அளவுக்குத் தன் ஃப்ளாட்டின் புற அமைப்பில் மாற்றம் செய்யக் கூடாதாம். சில இடங்களில் ரிப்பேர் வேலைகள் நடக்கின்றன. பழுது செய்யப்படும் இடம் முழுவதையும் இளம் பச்சை நிற நைலான் துணியினால் மறைத்து விடுகிறார்கள். கீழே செல்பவர்

✖ செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கம்



களின்மேல். தூக விழக் கூடாது என்று. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அசிங்க மாகவும் தெரிவதில்லை. நேப்பல்ஸில் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருந்தும் நேரமின்மையால் நாங்கள் ரோமுக்குத் திரும்பி விட்டோம். அன்று இரவு ரோமுக் குச் சற்று வெளியில் இருக்கும் பிரபல திவோலி தோட்டத்திற்குச் செல்ல ஒரு சுற்றுலா பஸ்ஸில் டிக்கெட் வாங்கி யிருந் தோம்.

பஸ் நிறைய அமெரிக்கர்கள், சில ஜப்பா னியர்கள், நாங்கள் இருவர் இந்தியர்கள். பஸ் பயணம் முழுவதும் ஹாஸ்யமாகப் பேசிக் கொண்டு வந்த இத்தாலிய கைடின் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளச் சில வினாடிகள் பிடித்தன. அவரது உற்சாகமும் ஹாஸ்யமும் மிக வசீகரமாக இருந்தன.


அவர் அதிர்ஷ்டம்!

சமீபத்தில் பெங்களூரில் இடிந்து விழுந்த ஏழுமாடிக் கட்டிடத்தின் இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருக் கும்போது பணப் பெட்டி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. உடனே கட்டிட உரிமையாளர் கங்காராமைப் போலீ சார் வரவழைத்தனர். இரும்புப் பெட் டியைத் திறந்து காட்டும்படி வற் புறுத்தினர்.

'இந்த இடிபாடுகளிடையேதான் இதன் சாவி சிக்கிக் கொண்டிருக்கிறது. அதன் உள்ளே கள்ள நோட்டுக்கள் இருப்பதாக நீங்கள் கருதினால் தாராள மாக உடைத்துப் பார்த்துக் கொள்ள லாம்' என்று கங்கா ராம் கூறினார். பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்திருக்க பெட்டி உடைக்கப்பட்டது. ஒரு ரூபா யும், கொஞ்சம் சில்லறைக் காசுகளும் குங்குமப் பொட்டலம் ஒன்றும் அதனுள் இருந்தன!

''இந்த இரும்புப் பெட்டி என்னு டைய தகப்பனுர் உபயோகித்து வந் தது. 1950ல் மைசூரிலிருந்து நான் இங்கு வரும்போது இது அதிர்ஷ்ட மானது என்று கருதி என்னுடன் எடுத்து வந்தேன்'' என்றூர் கங்காரரம்.

—அ. குமார்



வகுப்பறையில் சரித்திரப் பாடம் சொல் வது போல்தான் நான் கைடுகளைப் பார்த் திருக்கிறேன். இவர் மிக நெருக்கமான சிநேகிதர் போல நடந்து கொண்டார்.

திவோலி தோட்டம் பல சதுர மைல் களுக்கு மலைப் பகுதியில் மேலும் கீழுமாகப் படர்ந்திருக்கிறது. தெஸ்தே என்ற மிகப் பெரிய பணக்கார கார்டினல் ஒரு பிரும் மாண்டமான தோட்டத்தை முன்னூறு வருஷங்களுக்கு முன் இங்கு நிர்மாணித் திருக்கிறுன். இங்கு மொத்தம் மூந்நூறு ஃபௌண்டன்கள் இருக்கின்றன. அவற்றின் அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடி யாது. இயற்கையாக விழும் அருவிகளைப் பல அழகிய சிற்பங்களுக்கிடையில் ஃபௌண் டன்களாக அடக்கி யிருக்கிறார்கள். மேலும் கீழுமாக ஏறி இறங்கி, கால்கள் சோர்ந்து போனுலும் இயற்கை எழிலில் நம் அங்கங் களைப்பற்றிய பிரக்ஞையே ஏற்படுவதில்லை.

இந்த மாளிகை இன்னமும் தெஸ்தேயின் சந்ததியாருக்குத்தான் சொந்தமாக இருக் கிறது. இரண்டாவது மகா யுத்தம் முடிந்த பிறகுதான் இதைப் பொதுஜனங்களின் பார் வைக்கு விட ஆரம்பித்தார்களாம். இதன் அழகு அதனால்தான் பாதுகாக்கப்பட்டிருக் கிறது என்று கைடு சொன்னுர். மின் விசை யின் உதவியில்லாமல் பயங்கர அழுத்தத் துடன் அழகிய சிலைகளிலிருந்து பிரவகிக்கும் இந்தப் புனல்கள் வர்ணனைக்கு அப்பாற் பட்ட அழகுடையவை. தோட்டத்திலிருந்து வெளிப்பட்டதும் பல பெரிய கடைகள் இருக்கின்றன. நகைக் கடைகள், பீங்கான், துணிக் கடைகள். சுத்தமான பவழ மாலைகள் இந்தியாவில் கிடைப்பதை விட மலிவாகக் காட்சியளித்தன. நான் ஆர்வத்துடன் பார்க்க முற்பட்டபோது சக எழுத்தாளர் சற்று அதிர்ந்து போனுர். ஒரு எழுத்தாள ருக்கு இப்படிப்பட்ட அநித்திய பொருள் களில் ஆசை இருக்கலாமா என்று முணு முணுத்தார். நான் முதலில் பெண், பிறகு தான் எழுத்தாளர் என்று சொன்னுல் அது அவரது டார்பளைத் துளைத்துக் கொண்டு மண்டைக்குள் நுழையாது என்கிற நிராசை யுடன் நான் திரும்பினேன்.

ஹோட்டலுக்குத் திரும்பும்போது நள் ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது. திரும்பும் வழி யெல்லாம் பயணிகளைப் பாடவைத்துத் தானும் பாடினுர் கைட் ஸ்டிஃபானே.

ரோமில் ஒவ்வொரு தெரு மூலையிலும் ஓர் இனிய ஆச்சரியம் காத்திருக்கிறது. திடீ ரென்று ஒரு பெரிய சிலை நம்மைப் பிரமிக்க வைக்கும். நிர்மாணித்த ஆள் சாதாரண மானவராக இருக்காது. மைக்கல் ஆஞ்சலோ வாகவோ அல்லது பர்னீனியாகவோ இருக் கும். அத்தனை பெரிய மகா கலைஞர்களை இத்தனை சரளமாகத் தெருவில் சந்திக்கி றோமே என்று என்னுள் திகைப்பு ஏற்படும். ரோமில் ஓர் ஆச்சரியம். நவீன பெரிய தார் ரோடுகளும் வேகமாக விரையும் நவீன வாகனங்களும் கடைகளும் இந்தப் புராதனத்துடன் மிக இயல்பாக ஒன்றிப் போயிருக்கின்றன. புராதனம் வித்தியாச மாக மாறுபட்டதாகத் தெரியாத வகை

யில் புதிய நகரம் சிரத்தையுடன் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

மைக்கல் ஏன்ஜலோவின் சிற்பங்களையும் சித்திரங்களையும் பார்க்க வேண்டும் என்கிற ஆவலுடனேயே நான் ரோமுக்குக் கிளம்பியிருந்தேன். போப் ஆண்டவரின் சாம்ராஜ்யமான வாட்டிக்கனில் புனித பீட்டரின் ஆலயத்தில் விசேஷமாக இருக்கும் அவரது அற்புதப் படைப்புக்களைப் பார்க்க நான் விரைந்தபோது ஓர் உண்மையான பக்தனின் தாபம் என்னுள் ஏற்பட்டிருந்தது. ரோம் நகரத்திலிருந்து பதினைந்து நிமிஷத் தொலையில் வாட்டிக்கன் இருக்கிறது. பரபரப்பேயில்லாமல், பதற்றமில்லாமல் செல்லும் சுத்தமான பஸ்ஸில் ஏறி வாட்டிகனில் இறங்கி, எத்தனை அவசரத்திலும் பாத-சாரிகள் தெருவைக் கடக்கப் பொறுமையாக வழிவிடும் இத்தாலிய சிறிய கார்களைத் தாண்டி இரு தெரு முனைகளைத் திரும்பியதும் நம்மை எதிர்கொண்டழைப்பது—

பிரும்மாண்டமான செயின்ட் பீட்டர்ஸ் ஸ்க்வேர்.

அதன் பிரும்மாண்டமும் அழகும் என்னைச் சில விநாடிகளுக்கு ஊமையாக்கின. மைக்கல் ஏன்ஜலோவின் கற்பனையில் ஜனித்த புனித பீட்டர் ஆலயத்தின் விமானம் ஒரு காவிய அழகுடன் நிற்கிறது. அந்த ஆலயத்தைத் தாங்கும் தூண்கள் சிற்பி பர் னீனியின் கற்பனையின் விளைவு. பதினைந்தாம் நூற்றூண்டில் கற்பனை வளம் அதன் சிகரத்தை எட்டியிருக்க வேண்டுமானால் இவர்கள் அவதார புருஷர்களாக இருக்க வேண்டும் என்று அந்த க்ஷணம் என்னுள் ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது. 'நான், எனது' என்கிற உணர்வைத் தரைமட்டமாக்கும் ஓர் அதிசய வலிமை இந்த இடத்துக்கு இருக்கிறது. அத்தகைய ஓர் உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்கிற நிர்மாணமே இதை உருவாக்கியிருக்க வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

ஆலயத்திற்குள் இருக்கும் அமைதியான அழகை ரசிக்கையில், நம்மூர் கோவில்களில் இருக்கும் கூட்டம் இங்கு இல்லவே இல்லை என்று நான் கவனித்தேன். வெகு சிலரே ஸர்விஸுக்கு வந்திருந்தார்கள். பாக்கி எல்லோரும் என்னைப் போல் டூரிஸ்ட்டுகள். சத்தமே இல்லாமல், பேச்சு மூச்சில்லாமல் அதிசயப் பார்வையுடன் வளைய வரும் டூரிஸ்ட்கள். கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களின் மதகுரு இருக்கும் இடத்தில் கூட பொது ஜனங்களிடையே மதம் ஒரு சக்தி வாய்ந்த அம்சமில்லை இங்கு என்பதை நான் பிறகு தெரிந்து கொண்டேன். ஒரு முக்கியமான டூரிஸ்ட் அட்ராக்‌ஷனாக இன்று வாட்டிக்கன் இருப்பது போல் என்னுள் அந்த மௌன ஆலயம் பிரமை ஏற்படுத்தியது.

இந்த ஆலயத்தை ஒட்டியபடி உள்ள ஸிக்ஸ்டீன் சாப்பலில் இருக்கும் அதிசய மைக்கல்ஆன்ஜலோவின் சிற்பங்களைத் தேடி நான் சென்ற வேகம் காதலனைத் தேடிச் செல்லும் காதலியின் வேகம். பல அறைகளைக் கடந்து பார்க்க மாட்டோமோ என்கிற தாபத்துடன் கடைசியில் பூமி மட்டத்துக்குக் கீழ் உள்ள அறைகளில் இருக்கும் அந்த அற்புதத்தைப் பார்த்து நெக்குருகிப் போனேன்.


(தொடரும்)

ஆண்டு	மாட்சுகள் நடந்த தேசம்	ஆடப்பட்ட மொத்த மாட்சுகள்	டிரா	இந்திய வெற்றி	இந்தியத் தோல்வி
1948	இந்தியா	5	4	—	1
1953	மே. இ. தீவுகள்	5	4	—	1
1958	இந்தியா	5	2	—	3
1962	மே. இ. தீவுகள்	5	0	—	5
1966–67	இந்தியா	3	1	—	2
1971	மே. இ. தீவுகள்	5	4	1	—
1974–75	இந்தியா	5	0	2	3
1976	மே. இ. தீவுகள்	4	1	1	2
1978–79	இந்தியா	6	5	1	—
1983(1)	மே. இ. தீவுகள்	5	3	—	2
1983(2)	இந்தியா	6			

இதுபோன்ற ஏராளமான புள்ளி விவரங்களையும் ஆட்டக்காரர்களின் புகைப்படங்களையும் சில ரசமான கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்திருக்கிறது, இந்தக் கிரிக்கெட் சீஸனுக்கான ஹிந்து பத்திரிகையின் நினைவு மலர். விலை ரூ. 6. விலாசம்: ஹிந்து. அண்ணாசாலை. சென்னை-2.



இந்தியா Vs மேற்கிந்தியத்தீவு





சென்னை ஸ்ரீ K. V. வெங்கடேஸ்வர அய்யர் குமாரன் சிரஞ்சீவி **சங்கர நாராயணனுக்கும்** தஞ்சாவூர் சேமங்கலம் மிராஸ்தார் ஸ்ரீ ராஜாராமய்யரின் சகோதரி புத்திரியுமான சௌபாக்யவதி **புவனேஸ்வரிக்கும்** சென்னையில் சமீபத்தில் விவாஹம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

பண்பாட்டுக் காவலர்

இன்று பம்பாய் மாநகரைத் தாயக மாகவே உணரும் தமிழர்கள் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இம்மாநகருக்குப் பிழைப் புக்காக வந்தவர்கள்தான். முதலில் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்பது போல், பண்டிகைகளுக்கும், விழாக்களுக் கும், திருமணம், பிரார்த்தனை போன்றவை களுக்கும் பிறந்த ஊரான தமிழ் நாட்டுக்கு ஓடி ஓடி வந்தவர்கள்.

ஆனால் இன்று மிக அவசியமாக பம் பாய் நகரை விட்டு ஒரு வாரம் வெளியே செல்பவர்கள் கூட திரும்ப எப்ப பம்பாய் வருவோம் என்று ஏங்குமள வுக்குத் தாயகமாகி விட்டது இந்நகரம். இரண்டு, மூன்று தலைமுறைகளாக பம்பாயில் வாழ்ந்து வரும் தமிழர் சம்பாதிக்கும் இயந் திரங்களாக மாறிவிடாதிருக்க நமது பண் பாடு, கலாசாரம் ஆகியவற்றைப் பம்பாய் மண்ணிலேயே வேரூன்றச் செய்தவர்களில் புரொபசர் ஸ்ரீ ராமானுஜம் முதன்மையான வர். இவ்வளவுக்கும் அவர் ஒரு கோடீஸ் வரரோ தொழிலதிபரோ இல்லை.

எல்லோரையும் போலவே தமது தொழில் நிமித்தம் பம்பாய் வந்த பேராசிரியர் ஸ்ரீ ராமானுஜம், லட்சக் கணக்கான தமிழர்களின் கலைப் பசியைப் புரிந்துகொண்டு பல சிறிய சபாக்களை ஒன்று சேர்த்து நண்பர் களின் உதவியோடு நமது பாரத நாட்டிலேயே பெரிய சிறந்த கலை அரங்கான ஷண்முகா னந்தா அரங்கை அமைத்தார். அரங்கத் திற்கு 25 ஆண்டுகள் நிறைவான இந்த ஆண்டில் ஸ்ரீ ராமானுஜம் அவர்களுக்குப் பவழ விழா நடந்தது மிகப் பொருத்தமாக இருந்தது.

அக்டோபர் பதினெட்டாம் தேதி பேரா சிரியர் தம்பதிகளை மேள தாளத்தோடு வரவேற்றுக் கோலாகலமாக நடந்த அமிர் தோத்சவ விழாவில் அரங்கில் அமர்ந் திருந்த பிரமுகர்களைப் பார்த்தாலே கலை களினால்தான் இப்படிப் பல துறைப்பட்ட வர்களை ஒன்று சேர்க்க முடியும் என்று தோன்றியது.

அரசியல்வாதிகள், இசைக் கலைஞர்கள் சபா நிர்வாகிகள், கிரிக்கெட் வீரர்கள், தொழில் அதிபர்கள், வர்த்தகத் துறை யினர், டாக்டர்கள், விஞ்ஞானிகள், தொழிற் சங்கத் தலைவர்கள், ஆகியோரில் தமிழர்கள் மட்டுமின்றி மராட்டியரும் குஜராத்தியரும் இருந்தது ராமானுஜத்தின் செல்வாக்கையும், அவர்பால் எல்லோருக்கும் உள்ள அன்பையும் மதிப்பையும் புலப்படுத்தியது.

பம்பாய் ஆலயங்களில் ராமானுஜம் தம்பதியர் நல்வாழ்வுக்கு விசேஷ பூஜைகள் நடந்தன.

கடந்த நாற்பது ஆண்டுகளாக கலைகளின் வளர்ச்சிக்கு உழைத்துவரும் திரு டி.வி.ஆரின் அமிர்தோத்சவ விழாவில் இசை நிகழ்ச்சி இல்லாது போகுமா? இசைமாரி பொழிந்து விட்டார் சீர்காழி கோவிந்தராஜன். ஸ்ரீ கே. எஸ். நாராயணஸ்வாமி அவர்களின் வீணைக் கச்சேரி, ஸ்ரீ கார்த்திக்குமார் அவர் களின் சித்தார் கச்சேரி, எல்லாம் மிகச் சிறப்பாக நடந்தன.

பம்பாய்வாசிகள் மட்டுமின்றிப் பாரத தேசம் எங்கும் உள்ள கலைஞர்கள் பேராசிரி யர் ராமானுஜத்துக்கும் அவரது மனைவி பூமாவுக்கும் பல்லாண்டு கூறி இறைவனைப் பிரார்த்திக்கிறார்கள்.

-லட்சுமி கண்ணன்

✕ ராமானுஜம் தம்பதிக்கு அமிர்தோத்சவ விழா ஞாபகார்த்தப் பரிசினை ஒய். பி. சவான் வழங்கக் கண்டு மகிழ்பவர் மகாராஷ்டிர முதல்வர் வசந்ததாதா பாட்டீல்.



என்ன சொல்கிறார் ஜே.கே?



பரம்பரை வழக்கங்களில் ஆழ்ந்து மூழ்கியவர்களான நாம் விரும்பும் சுதந்திரமும் இந்தப் பரம்பரை வழக்கங்களில் ஒன்றாக ஆகிவிடுவதால் இது ஒரு மாயைதானல்லவா?

நான் ஒரு மதத் தலைவன் அல்ல என்றும், தனக்கு சீடர்கள் ஒருவரும் இல்லை என்றும் ஆணித்தரமாகச் சொல்வது 89 வயதான ஜே. கே.யின் இயற்கை. அப்படியிருந்தும் சென்றவிடங்களிலெல்லாம் ஆயிரக்கணக்கானவர்கள் பல வருடங்களாகத் தொடர்ந்து இந்தப் பேச்சுக்களுக்கு வருவதையும் நாம் பார்க்கலாம். ஜே. கே. அல்லது கிருஷ்ணாஜியின் பேச்சு முடிந்ததும் கூட்டம் கலையும்பொழுது வந்தவர்கள் பேசிக்கொள்வதை நோக்கினால் வேடிக்கையாக இருக்கும். சிலர் பேச்சுக்கு வருவதே நாகரீகம் என்றும், வருவதினால் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் தாம் இருப்பதாக நினைத்தும் வருகிறார்கள். சிலர் ஜே. கே. புதியதாக எதுவும் பேசவில்லை; தாங்கள் படித்தும், தெரிந்தும், கேள்விப்பட்டுமுள்ள வேதப் புத்தகங்கள் ஏற்கனவே தெரிவித்ததைத் தான் சொல்கிறார் என்றும், இவர் நவீன முறையில், புதிய பாஷையில் பேசுகிறார் என்றும் தற்பெருமையுடன் கூறுவார்கள்.

சிலர் வருடா வருடம் இந்தப் பேச்சுக்களுக்கு வருவதனால் தங்களுக்கு நன்றாகப் புரிந்து விட்டதாக நினைத்து மற்றவர்களுக்கு விளக்கம் கொடுக்கவும் செய்கிறார்கள். சிலர் பேச்சுக்களின்போது நன்றாகப் புரிவதாகவும் ஆனால் பேச்சு முடிந்தவுடன் எதையும் நினைக்கமுடியவில்லை என்றும், மேலும் மற்றவர்களிடம் பகிர இயலாததாகவும் உள்ள நிலையை மனம் விட்டும் சொல்கிறார்கள்.

அவர் என்ன பேசுகிறார், அதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் என்பது கூட்டத்திற்கு வராதவர்கள் கூட்டத்திற்கு வருபவர்களைப் பார்த்துக் கேட்கும் கேள்வி. இது, மாலையில் அலுவலகத்திலிருந்து திரும்பும் தந்தை மகனைப் பார்த்து அன்று ஆசிரியர் என்ன பாடம் நடத்தினார் என்று கேட்பது போன்றது. இங்குதான் நமக்கு விளக்குவதில் தடை தோன்றுகிறது.

கிருஷ்ணாஜி எளிய வார்த்தைகள் மூலமாக அறிவுக்கு அப்பால் உள்ள நிலைக்குக் கவனமாகக் கேட்பவர்களை அழைத்துச் செல்கிறார். இது உங்களுக்குப் புரியாத புதிராக உள்ளதா? முதலாவதாக ஜே. கே. தமக்கும் சபையோருக்கும் உள்ள தொடர்பைத் தெரிவிக்கிறார். தான் ஒரு குரு இல்லை என்றும், தனக்கு எவரும் சீடர் இல்லை என்றும் ஆணித்தரமாகச் சொல்கிறார். முடிவற்ற பயணத்திற்குத் தன்னை ஒரு கைகோத்துச் செல்லும் உற்ற நண்பனாகப் பாவிக்கும்படி கேட்டுக்கொள்கிறார். நமக்கு இப்பொழுது திடீரென்று ஒரு திகைப்பு உண்டாகிறது. ஏனெனில் இந்தப் பயணத்தில் நமக்கு மிகவும் பொறுப்பு உள்ளது. ஜே. கே.யின் பேச்சு இப்பொழுது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகி நமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இதில் செலுத்தும்படியாக ஆகிறது. பிறகு வெறும் வார்த்தைகள் அனாவசியமாக ஆகிறது. ஜே. கே. யின் பேச்சை நெட்டுருப் போடுவதோ அல்லது பாயிண்டுகளைக் குறித்துக் கொள்வதோ தேவையற்றது. மேலும் இப்படிச் செய்வது அர்த்தமில்லாததாகவும் சக்தியை வீணாக்குவதாகவும் ஆகிறது. ஏனெனில் முழுக் கவனம் இல்லாததால் பயணத்தின் அழகையும் நறுமணத்தையும் நாம் இழந்து விடுகிறோம். இப்பொழுது இந்தப் பேச்சுக் கேட்பவரை பயம், துக்கம், சாவு இவைகளின் முடிவிற்கு அழைத்துச் செல்கிறது. பேரானந்தத்தையும் சிலர் உணரலாம்.

ஆனால் இதற்கு மிகவும் சக்தி தேவை. இந்தச் சக்தி பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பதால் அல்ல; தனது எண்ணங்களையும், தனது கவனமின்மையையும் கவனிப்பதால் மட்டுமே கிடைக்கும்.

உத்தேசம் எதுவாக இருந்தாலும் சில கேள்விகள் ஜே. கே.யிடம் சென்றவிடமெல்லாம் அவ்வப்பொழுது கேட்கப்படுகிறது.

அருள்வாக்கு

வடக்கே போகிற நதி ஒன்று இருக்கிறது. கிழக்கே போகிற நதி ஒன்று இருக்கிறது. மேற்கே போகிற நதி ஒன்று இருக்கிறது. இந்த நதிகள் எல்லாம் எந்தப் பக்கம் போனால் என்ன? அது எந்தப் பக்கம் ஓடுவதற்கு வாகாக இருக்கிறதோ அந்தப் பக்கம் ஓடுகிறது. ஆனால் எல்லாம் கடைசியில் எங்கே போய்ச் சேருகின்றன? சமுத்திரத்தில் தான் போய் விழுகின்றன. எந்தப் பக்கம் நதி ஓடினாலும் சரி, சமுத்திரம் நான்கு பக்கமும்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது. வெறும் சமுத்திரமே இப்படிச் சுற்றிக் கொண்டிருக்கிற போது, அந்தக் கிருபா சமுத்திரம், தயா சமுத்திரம், நாம் எந்த வழியில் சென்றாலும் நாம் போய்ச் சேருகிற இடத்தில் இல்லாமலா போகும்? நாம் எந்தப் பக்கம் போனாலும், எப்போது வந்து சேருவான் என்று நமக்காக அவன் காத்துக் கொண்டிருப்பான். ''நீ உன் ருசிக்கு ஏற்ப எந்தப் பக்கம் போக வேண்டுமென்று நினைக்கிறாயோ அந்தப் பக்கம் போ. ஆனால் வழியில் நின்றுவிடாதே. போய்க்கொண்டே இரு.''

எல்லோரும் ஓர் இடத்துக்குத்தான் போகிறார்கள். எந்தப் பக்கமாகப்போனாலும் நீ எப்போது வந்து சேருவாய் என்று காத்துக் கொண்டிருப்பவன் ஒருவன்தான். அந்தக் கிருபா சமுத்திரந்தான் நாலு பக்கமும் சுற்றிக் கொண்டிருக்கிறது. நீ சிரத்தை மாத்திரம் குறையாமல் ஆரம்பித்த காரியத்தை நிறுத்திவிடாமல் முயற்சி மாத்திரம் பண்ணிக் கொண்டே இரு. அநேகம் வழிகள் இருக்கின்றனவே என்றால் அவரவர்கள் அவரவர்களுடைய ருசியைப் பொறுத்து ஒரு வழியில் வரட்டும் என்றுதான் வைத்திருக்கிறார்கள்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராசாரிய சுவாமிகள்



முதலாவதாக ஜே.கே. ஏன் பேசுகிறார்? இதற்குப் பதில்: எப்படி ஒரு மலரின் நறுமணம் அதன் அருகில் சென்றவர்களுக்கு எல்லாம் இன்பத்தை அளிக்குமோ அது போல ஒருவரது இயற்கையாக அமையப் பெற்ற கருணை பேச்சு வாயிலாக வெளிப்படுகிறது. ஆயினும் இக்கருணையைப் பெறுவது என்பது கேட்பவருடைய ஆற்றலைப் பொறுத்தது.

அடுத்ததாக ஜே.கே.யின் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? பதில்: மனிதனை முற்றிலும் சுயேச்சையாக நிபந்தனையற்ற சுதந்திரமுள்ளவனாக ஆக்குவது. ஆனால் நாம் முழுமையாகச் சுதந்திரமாக இருக்க விரும்புகிறோமா? பரம்பரை வழக்கங்களில் ஆழ்ந்து முழுகியவர்களான நாம் விரும்பும் சுதந்திரமும் இந்தப் பரம்பரை வழக்கங்களில் ஒன்றாக ஆகிவிடுவதால் இது ஒரு மாயைதானல்லவா? பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடுவதே உண்மையான சுதந்திரத்தை அளிக்கும். நாம் பரம்பரைப் பழக்கங்களில் பற்றுடன் இருந்து கொண்டு சுதந்திரத்தையும் விரும்புவதால் முரண்பாடு ஏற்படுகிறது.

இவையெல்லாம்தான் தியானம். நாம் சாதாரணமாக தியானம் தியானம் என்றவுடன் உடலை அடக்கி மனத்தை ஒருநிலைப் படுத்தி ஒரு மந்திரத்தின் மேலேயோ அல்லது படத்தின் மேலேயோ செலுத்தும் தெய்வ நம்பிக்கையுள்ள பிரார்த்தனையாக நினைக்கிறோம். இது பிறகு ஒரு முன்னேற்பாடான மனப் பயிற்சியாக ஆகிறது. தியானத்தை முன்னமேயே தீர்மானம் செய்யலாமா? இது தியானமாகுமா? ஆகையால் சரியான தியானம் என்பது இதிலுள்ள பிழைகளைப் பார்ப்பதுதான். இதிலிருந்து நமது அறிவின் அளவை அறிந்து கொள்கிறோம். இப்பொழுது மனம் அமைதி அடைகிறது.

ஜே. கே.யின் பேரில் அன்பு வைத்துத் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களைக் கொண்டு வராமல் இந்தக் கூட்டத்திற்கு வருபவர்களுக்கு இந்தப் பேச்சுக்கள் மிகவும் உபயோகமாக இருக்கும்.

சாதாரணமாகக் கூட்டத்திற்கு வருபவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலவர் வார்த்தைகளின் வலையில் விழுபவர். இரண்டாமவர் அறிவினால் ஒப்புக் கொள்வதையோ மறுப்பதையோ செய்பவர். மூன்றுமவர்கடினமான பயணத்திற்குத் தனது முழு முயற்சியையும் எடுப்பவர்.

ஆகையால் ஒருவர் தன் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவு உண்மையைக் காண்பார்.

ஜே.கே. பேச்சின்பொழுது உண்மையைக் காண்பவர் வார்த்தைகளையும் மற்ற எல்லா வற்றையும் வழியில் விட்டு வெகு தூரம் பயணம் செய்வார். அப்பொழுது தூய உண்மைதான் இருக்கும். பேசுபவர், கேட்பவர் என்ற பிரிவு இருக்காது.

-வி. கே. ஈசுவரன்

கொசுப் பண்ணை



சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மாநகராட்சியிலிருந்து பிரிக்கப்பட்டு, கடந்த சில ஆண்டுகளாகத் தனியே இயங்கி வருகிறது. கொடுங்கையூர், கோயம்பேடு நேசப்பாக்கம் பெருங்குடி ஆகிய இடங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. கழிவு நீரைச் சில இரசாயன மாற்றங்களுக்குட்படுத்தி அதிலுள்ள கிருமிகளைக் கொன்று இயன்றவரை துர்நாற்றத்தைப் போக்குகின்றனர். இவ்வாறு மாற்றப்பட்ட கழிவுநீரைப் பாய்ச்சி ஆடு மாடுகள் உண்பதற்குத்தேவைப்படும் புல் வகைகள் வளர்க்கப்படுகின்றன.

கழிவு நீர்ப் பண்ணை என்ற பெயரில் மெட்ரோ வாட்டர் நிர்வாகமே பயிரிட்டுப் பராமரித்து வரும் இந்தப் புல்வெளி நிலங்களின் விளைபொருள் ஏலம் விடப்படுகிறது. கோயம்பேடு பகுதியில் அமைந்திருக்கும் பண்ணையில் விளையும் புல் லகரக் கணக்கில் ஏலம் போகிறது. இதுபோன்ற புல்வெளிகளைச்சுற்றி சில மைல்கள் வரை மனிதர்கள் வசிப்பதே கடினம். காரணம் கழிவுநீர் தேங்கிக் கிடப்பதால் கொசுத் தொல்லை தாங்க முடியாதபடி இருக்கும். கோயம்பேடு பகுதியில் கிடைத்த செய்திகள் பயங்கரமாக இருந்தன.

இப்பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்ட செங்கற் சூளைகள் இருக்கின்றன. இந்தச் செங்கல் சூளைகளுக்காக ஆங்காங்கே மண் தோண்டப்பட்டு மிகப் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளங்களில் கழிவுநீர் தேங்கிநின்று கொண்டிருப்பதால் கொசுத் தொல்லை சொல்லி மாளாத அளவுக்குக் கடந்த சில ஆண்டுகளாகவே இருந்து வருகிறது.

அரும்பாக்கம் பஸ் நிலையத்தில் இறங்கி சுமார் இரண்டு கிலோ மீட்டர் இடப்புறம் சென்றால் கழிவு நீர்ப் பண்ணையை அடையலாம். இதனால் ஏற்பட்டிருக்கும் கொசுத் தொல்லை அண்ணாநகர்வரைபரவியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜெய்நகரிலுள்ள ஒரு வீட்டிற்குச் சென்ற போது அன்றுதான் கார்ப்பரேஷனிலிருந்து சில ஆட்கள் வந்து கொசு மருந்தை அடித்துச் சென்றிருக்கின்றனர். ஆயினும் ''இந்த மருந்து எங்களை என்ன செய்யும்?'' என்று கேட்பதைப் போல் கொசுப் படை அந்த வீட்டின் இருண்ட பகுதிகளில் அப்பிக் கொண்டிருந்தன.

''நாங்கள் இங்கு குடிவந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டன. அப்போது இந்த அளவுக்குக் கொசுத் தொல்லை இல்லை. கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துக் கொண்டேபோகிறது. மாநகராட்சியிலிருந்து அவ்வப்போது வந்து மருந்து அடித்து ஓரிரு நாட்கள் தாற்காலிக நிவாரணத்தை ஏற்படுத்துகிறார்களே தவிர நிரந்தரமாக இன்றுவரை ஒரு ஏற்பாடும் செய்யவில்லை'' என்று கூறிய அந்த வீட்டுச் சொந்தக்காரர் சமையலறையைக் கடந்து கிணறு இருக்கும் பின் பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

ஒரு குவளை தண்ணீரை எடுத்து கிணற்றின் உட்புறச் சுவர்களில் தெளிக்க... அப்பப்பா! SWARM திரைப் படத்தையே மிஞ்சுவது போல் படை படையாகக் கொசுக்கள் வந்து நம்மைத் தாக்க ஆரம்பிக்கின்றன. உட்புறச் சுவர் முழுக்கக் கொசுக்களாகக் காட்சியளித்தது அந்தக் கிணறு.

''எங்கள் கிணற்று நீர் சுத்தமாகவும் சுவையாகவும் இருக்கும். இங்கு குடிவந்த போது நாங்கள் கிணற்று நீரைச் சமையலுக்குக் கூடப் பயன்படுத்துவோம். இப்போது பாருங்களேன் எங்கள் கிணற்று நீரை....'' என்று கூறிக் கொண்டே ஒரு பக்கெட் தண்ணீரைச் சேந்திக் காட்டினார். கலங்கலாக, கிடப் பொருள் எதுவும் மிதக்காத கழிவு நீரைப் போலவே இருந்தது. கழிவு நீர் தேங்கி நின்று நிலத்துக்கு அடியில்





உள்ள நீர் ஊற்றுக்களுடன் கலந்துவிடுவதால் இப்பகுதியில் உள்ள கிணறுகள் இவ்வாறு பாழாகின்றன.

இளிப் பச்சை நிறத்தில் ஒரு ரசாயனப் பொடியை எடுத்து வந்து காட்டினார் வீட்டுச் சொந்தக்காரர். இந்தப் பொடியைக் களி மண்ணுடன் கலந்து நீர் சேர்த்து உருண்டைகளாக்கிக் கிணற்றில் போட்டுவிட வேண்டுமாம். இந்த மருந்து கிணற்றைப் பழையபடிக்கு நல்ல நீராக மாற்றுவிட்டாலும் நீர் மேலும் பாழாவதைக் கட்டுப்படுத்துமாம். இந்த மருந்துகூட அதிகாரபூர்வமாக வழங்கப்பட்டதில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கவனிக்க வேண்டிய முறையில் கவனித்து இந்த மருந்தை இவர் வாங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இப் பகுதியில் உள்ள மக்கள் ஒருங்கிணைந்து ஒரு சங்கம் அமைத்து மனுக்களையும் புகார்களையும் எழுதிக் குவித்திருக்கின்றனர். ஆனால் வழக்கம்போல் இவை சிவப்பு நாடாத்தனமாக அலட்சியப்படுத்தப்பட்டிருக்கின்றன. சங்கத்தின் செயலாளர் சிட்டி பாபு என்ற இளைஞரைச் சந்தித்தபோது கூறினார்:

''நல்ல தார் சாலை வேண்டும் என்ற எங்கள் பல வருடக் கோரிக்கை சமீபத்தில்தான் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இப்பகுதி மக்களுக்குச் சில அடிப்படை வசதிகளாவது செய்து தரவேண்டும் என்று நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நெடு நாட்களாகவே கேட்டுக் கொண்டிருந்தோம். நடவடிக்கை எடுக்காமல் இருந்த அதிகாரிகளின் மெத்தனப் போக்குக் குறித்து பிரபல நாளிதழின் வாசகர் கடிதம் பகுதிக்கு ஒருவர் கடிதம் எழுதிவிட்டார். அவ்வளவுதான். வந்ததே வினை. எங்கள் ஃபைல் காணாமல் போய்விட்டதாகவும் நடவடிக்கை எடுக்க மேலும் சிறிது காலம் ஆகும் என்றும் கூறி வேண்டுமென்றே தாமதப்படுத்தினார் அந்த அதிகாரி.


''கொசுத் தொல்லை குறித்து மற்றொரு அதிகாரியிடம் புகார் செய்ய நேரிலேயே சங்க உறுப்பினர்களுடன் சென்றோம். 'கழிவு நீர்ப் பண்ணை இருந்தால் கொசுத் தொல்லை இருக்கும் என்று உங்களுக்குத் தெரியாதா? குறைந்த விலையில் மனை கிடைக்கிறதென்று வீடு கட்டிக்கொண்டு ஏனய்யா இப்படி எங்கள் உயிரை எடுக்கிறீர்கள்?' என்று கேட்டார் அவர். சிறிதும் மனிதாபிமானமின்றி நடந்துகொண்ட இந்தப் புண்ணியவான்களின் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை'' என்று கூறி வருத்தப்பட்டுக்கொண்டார் செயலாளர் சிட்டிபாபு.

கொசுத் தொல்லை மிகுதியாக உள்ள இதுபோன்ற பகுதிகளில் மலேரியா காய்ச்சலும் யானைக்கால் வியாதியும் மிக அதிகமாக இருக்கும். 5—4—80 அன்று மாநகராட்சியின் பிரத்தியேக மருத்துவ அதிகாரி டாக்டர் சுவாமிநாதன் மற்றும் திரு நரசிம்மன் திரு வரதராஜன் ஆகியோர் கொண்ட ஒரு குழு இப்பகுதிகளைப் பார்வையிட்டிருக்கிறது. கிணற்று நீர், தேங்கிக் கிடக்கும் கழிவுநீர், புல்வெளிகள் ஆகியவற்றைச் சோதித்து ஆய்வு செய்த இந்த மருத்துவக் குழு, நிலைமையின் விபரீதத்தை உணர்ந்திருக்கிறது. பயங்கரமான பின் விளைவுகளைத் தடுக்க உடனடியாக யானைக்கால், மலேரியா குறித்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவேண்டும் என்று ஆய்வு அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும் இன்றுவரை இந்த சர்வே நடத்தப் படாதது கொடுமை.

மெட்ரோ வாட்டர் சப்ளை பம்பிங் ஸ்டேஷன் ஒன்றில் பணியாற்றும் உதவி இன்ஜினியர் ஒருவரிடம் இது குறித்து விசாரித்தோம். ''கழிவு நீர்ப் பண்ணை இருக்கும் இடங்களில் கொசுத் தொல்லை இருக்கத்தான் செய்யும். நீங்கள் குறிப்பிடும் கோயம்பேடு பகுதியிலாவது கழிவுநீரைச் சுத்தப்படுத்திப் புல்வெளிக்குப் பாய்ச்சுகிறார்கள். ஆனால் வியாசர்பாடிக்கு அருகில் இருக்கும் கொடுங்கையூரில் கழிவு நீரை சுத்தம் செய்யாமல் அப்படியே புல்வெளிகளில் பாய்ச்சுகிறார்கள். அங்கு துர்நாற்றமும் கொசுத் தொல்லையும் எப்படி இருக்கும் எண்ணிப் பாருங்கள். கொடுங்கையூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைத் துவக்க ஐந்து கோடி ரூபாய்க்கு இப்போதுதான் டெண்டர் கோரப்போகிறார்கள். கழிவு நீர்ப்பண்ணை உள்ள இடங்களை 'பனிஷ்மெண்ட் ஏரியா' என்று நாங்கள் வேடிக்கையாக அழைப்போம். காரணம் நிர்வாகத்தின் அதிருப்திக்கு ஆளாகும் சில இன்ஜினியர்களை இப் பகுதிக்கு மாற்றுவார்கள். இந்த இடங்களில் மின் விசிறி உண்டு என்றாலும் நிமிஷ நேரம் உட்காருவதே கடினம். எனவே இப்பகுதியில் வசிக்கும் மக்கள் இரவு நேரங்களில் எவ்வாறு அவஸ்தைப்படுவார்கள் என்பதை என்னால் உணர முடிகிறது'' என்றார்.

இன்ஸாட்டை விண்வெளிக்கு அனுப்புகிற இந்த யுகத்தில் சென்னை மாநகரின் கழிவு நீர்ப் பிரச்னைக்கு நல்லவிதமாக ஒரு தீர்வு கண்டு மக்கள் ஆரோக்கியம் கெடாமல் காக்கக் கூடாதா நமது அரசு?

-ராஜா செந்தில்நாதன்



ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

ஸாவியவன்

3

மேம்பாலம் எஃகினாலானது. ஏறக்குறைய அரை கிலோ மீட்டர் நீளம். எஃகுக் கூரையின் கீழே ஹோவென்று நீண்டிருந்த பாலத்தின் மீது கல்யாண குதூகலம் போன்ற ஜங்ஷன் விளக்குப் பிரவாகத்தில் கீழே ஓடும் பத்துப் பன்னிரண்டு தண்டவாள லைன்களின் சுறுசுறுப்பில், அங்குமிங்கும் நகர்ந்து ஓடும் பிரயாணிகளின் பரபரப்பு காசிக்கு எப்போதும் பிடிக்கும்.

கீழே ஒரு லைனில் ஒற்றை என்ஜின் ஷண்டிங்குக்காக விசிலில் அலறியது. பிரயாணிகள் மங்களூர் மெயிலுக்காகக் காத்திருந்தனர். எதிரே 311 எக்ஸ்பிரஸின் கார்டு ரிடையரிங் ரூமை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

''குட் ஈவினிங் ஸார்!''

அவர் அறிமுகச் சிரிப்போடு காசிக்குக் கையை உயர்த்தினார்.

''டைம் என்ன ஆச்சு சார்?''



''பத்தேமுக்கால் ஆச்சு காசி!''

காசி ரயில்வேயில் பணியாற்றவில்லை. ஆனால் எத்தனையோ ரயில் அதிகாரிகள், ஊழியர்கள் அவன் நண்பர்கள். ஒரு நாளில் பாதி நேரம் அவன் ஜங்ஷனில் கழித்தான். மேம்பாலத்தில் திரிந்தான்.

ஜங்ஷனின் இயக்கத்தில் காசி இணைந்தது அவன் பிறந்ததுமே. இந்த மேம்பாலத்தில் இருபத்தி நாலு வருஷங்களுக்கு முன் ஒரு டிசம்பர் தினத்துக் குளிரில் அழுக்குத் துணியில் தாயினும் கைவிடப்பட்ட அநாதைக் குழந்தையாக அவன் வீறிட்ட நாளிலேயே ஜங்ஷன் அவனைத் தத்து எடுத்துக் கொண்டது. அன்று டேட்டி முடித்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த பயர்மேன் கேசவன் அவனை வீட்டுக்கு எடுத்துப் போனார்.

அப்புறம் மேம்பாலம் அவன் பள்ளிக்கூடமாயிற்று. விளையாட்டு மைதானமாயிற்று. அங்குதான் முதன் முறையாக ஒரு ஜங்ஷன் ரவுடியிடம் முகத்தில் ஒரு குத்து வாங்கினான். அப்போது வயது எட்டு. ஒரு பல் விழுந்து விட்டது. மேம்பாலம் வாழ்க்கையில் எதிர் நீச்சலடிக்கக் கத்துக் கொடுத்தது. வாங்குகிற ஒவ்வொரு அடிக்கும் பதிலடி கொடு என்று நிர்ப்பந்தித்து அவனை முரடனாக்கியது.

எத்தனை சம்பவங்கள்... எத்தனை சண்டைகள்... எத்தனை சமாதானங்கள்...

ஒரு மணி நேரத்துக்கு முன் ஒரு யுத்த களத்தில் நாயகனாய் இருந்து மீண்டும் மேம்பாலத்தில் நடந்து வருகிற காசியைப் பார்த்து ஆங்காங்கே கைகள் உயர்ந்தன. ஓரிருவர் சிரித்தனர். பதிலளித்துக் கொண்டே நடந்தான்.

இவர்கள் நண்பர்களா? பகைவர்களா? இந்த அன்பிற்கும் பரிச்சயத்திற்கும் பின்னணியில் பயம் இருப்பதைக் காசி தெளிவாக உணர்ந்தான். பலருக்குத் தன்னிடம் பயம். காரணமில்லாத பயம். எப்படி இவர்கள் நண்பர்களாக முடியும்?

நாலாவது பிளாட்பாரத்திற்கு வரும் நுழைவின் எதிரே ஒரு சிறு கூட்டம் நின்றிருந்தது. கூட்டம் இருந்தால் அங்கே ஹரி இருப்பான் என்று நினைத்தான். சரியாக ஹரி இருந்தான்.

ஆறரை அடி உயரம். பஞ்சாபி மல்யுத்த வீரன் மாதிரி பெரிய உடம்பு. அந்தப் பெரிய முகத்தில் ஒரு கொடுவாள் மீசை வைத்துக் கையில் ஒரு கதையைக் கொடுக்க வேண்டும் போல் எல்லோருக்கும் தோன்றும். அப்படி ஒரு பீமன் தோற்றம்.

ஆனால் ஹரியின் கையில் கதைக்குப் பதில் ஒரு பம்பரக் கயிறு தொங்கியது.

'' 'அபீட்' எடு பார்க்கலாம்'' என்று யாரோ சவால் விட்டனர். காசி நெருங்கினான்.

''டே காசி அண்ணன்டா'' எவனோ எச்சரிக்கை கொடுத்தான். போர்ட்டர் முத்து. கூட்டம் வழி விட்டது.

அவர்கள் மத்தியில் பாலத்தின் தரையில் சத்தம் வராமல் சொக்கித் தூங்குவது போல் பம்பரம் ஒன்று சுற்றிக் கொண்டிருந்தது.

ஹரி குனிந்து பம்பரக் கயிற்றைச் சுழலும் பம்பரத்தைச் சுற்றி வட்டமாகப் போட்டுச் சுருக்கிட்ட மாதிரி தூக்கி 'அபீட்' எடுத்தான். இப்போது பம்பரம் அவன் உள்ளங் கையில் சுழன்றது.

''ஹெ...ஹெ...ஹேய்....'' பம்பரக் கூர் ஹரியின் சதைப்பிடிப்பான உள்ளங்கையில் சுழன்று கூச்சம் காட்டுவதைத் தாளாமல் அவன் இளிஇளித்தான்.

காசிக்குச் சிரிப்பு வந்தது.

''என்ன ஹரி. பம்பரம் விட நல்ல நேரந்தான்!''

காசியைக் கண்டதும் ஒரு சிறு பிள்ளை மாதிரி வெட்கப்பட்டுக் கொண்டே பம்பரத்தை நிறுத்தினான்.

''அண்ணாத்தே... ஹரிக்கு இதுவரிக்கும் பொம்பரம் வுடவே தெரியாதாம். அரை அவரா நாங்க கத்துக் குடுத்துனு கிறோம்''

காஸியோ – ஜப்பான்!

மேலட்டைப் படத்தில் 'காஸியோ வி. எல். டோன்' தரும் இன்னிசையை மெய்மறந்து(?) ரசித்துக் கொண்டிருப்பவர் குமாரி மங்களா கௌரி. அவர் கரத்தில் இருக்கும் சின்னஞ் சிறிய வி.எல். டோன் பற்றிச் சில தகவல்கள்:

- லைட் மியூஸிக் குழுவினர் பயன்படுத்தும், பலத்த சத்தம் ஏற்படுத்தும் ஆர்கனுக்கு இணையாக உபயோகிக்கக்கூடிய ஒன்று!
- பியானோ, புல்லாங்குழல், வயலின் போன்ற பல இசைக் கருவிகளின் ஒலியை வரவழைக்கலாம்.
- பன்னிரண்டு விதமான தாள கதிகளில் டிரம் ஒலியை எழுப்பும்.
- டேப்புடன் இணைத்து ஒலியைப் பெருக்கிக் கொள்ளலாம்.
- ஏற்கனவே பதிவான இரண்டு நிமிடம் டியூனை ஒலிக்கும். நமக்குப் பிடித்தமான இரண்டு நிமிட இசையைப் பதிவு செய்து கொள்ளலாம்.
- கால்குலேட்டராகவும் பயன்படும்.
- இத்தனைக்கும் இரண்டு பென் டார்ச் செல்களில்தான் இயங்குகிறது.
- விலை என்ன? எங்கே கிடைக்கும்?
- ....உஷ்....! அதையெல்லாம் அச்சிட முடியுமா என்ன?

தகவல், வண்ணப்படம்: ராஜ்



டைனிங் காரேஜில் போகும் சோமு விளக்கினான்.

"பரவாயில்லே அண்ணாத்தே... பாய்ண்ட்ஸ் மேன் மோகனை விட பெட்டர். ஹரி அரை அவர்லே 'அபீட்' எடுத்துட்டானே!" என்று பழக்கடை ஸ்டால் பையன் ரங்கன் சிலாகித்தான். எல்லோரும் சிரித்தனர்.

காசிக்கும் பம்பரம் விட ஆசை வந்தது. அவன் பம்பரம் விட்டுப் பல வருஷங்கள் ஆகப்போகிறது.

"எங்கே கவுத்தை இப்படிக் கொண்டா!"

"எதுக்கு அண்ணே...?" ஹரி கையைப் பின்னால் இழுத்தான். பம்பரத்தையும் கயிற்றையும் வாங்கி மேம்பாலத்துக்குக் கீழே வீசிவிடுவாரோ என்று ஒரு தயக்கம்.

"அட... நான் வுட்டுப் பாக்கறேன்!"

"ஐ... அண்ணன் பம்பரம் வுடுதாம். குடு ஹரி...."

"நீ எதுக்கு அண்ணாத்தே... அஹாங்... வாணாம்" என்று ஏதோ அவன் கௌரவத்துக்கு அது குறைச்சல் என்கிற மாதிரி ஹரி கொடுக்க மறுத்தான்.

"ப்ச... குடுண்ணாக்க" என்று காசி அதட்டியதும் கொடுத்து விட்டான். கயிற்றைச் சுற்றிக் காசி பம்பரத்தைச் சுண்டினான். அது சுழன்று கொண்டே தரையில் இறங்கும் போது விருட்டென்று கயிற்றை வீசிப் பம்பரத்தை உள்ளங்கைக்கு உயர்த்தி அது சுற்றும்போதே "கையை நீட்டு" என்றான். ஹரி கையை நீட்டினான். அவன் உள்ளங்கைக்கு காசி பம்பரத்தை மாற்றிவிட்டான்.

மீண்டும் ஹரி கிளுகிளுத்துச் சிரித்தான். பம்பரம் ஓய்ந்தது.

"சரி... நான் இன்னும் சாப்பிடலேப்பா" என்று காசி பொதுவாக அனைவரிடமும் விடை பெறுகிற மாதிரி சொன்னான்.

"போங்க அண்ணாத்தே... மணி பதினொண்ணு ஆகப் போது...." என்று இரண்டு மூன்று குரல்கள் வந்தன. காசி நகர்ந்தான்.

அவனது நிழல் போன்று ஹரி கூட்டத்தை விட்டு அவனைப் பின்தொடர்ந்தான்.

"நான்கூட வர்ட்டமா... ஜெயாக்கா சாயங்காலம் டேம் மீனு வாங்கினு போச்சி" என்று குரல் கொடுத்தான் சோமு.

"வாவேண்டா" என்று நின்று அவனையும் கூப்பிட்டான் காசி.

"வாணாம். அதான் ஹரியண்ணாத்தை வர்றாரே. அப்புறமா எங்கே சோறு மீறப் போவுது... ஜெயாக்கா சட்டியைச் சொரண்டிக்கினு முனிக்கும்."

கூட்டம் கலகலத்தது. அவர்கள் நடந்தார்கள்.

"எங்கேண்ணே இந்நேரத்துக்கு?"

"இன்ஸ்பெட்டரு கூட்டியாரச் சொன்னாராம்."

"யாரு.... மொய்லியாரா? டேஷனுக்கா போயிருந்தே... என்னா சங்கதி?"

"மணி ரிப்போர்ட் கொடுத்திருக்கான்."

இதை ஹரி எதிர்பார்க்கவில்லை. நடந்து கொண்டிருந்தவன் நின்றான்.

"அப்புறம்?"

"அப்புறம் என்னா... மாமுனா சொன்ன மாதிரி கெடுபிடிபண்லே. புத்தி சொன்னாரு.



"எதுக்குங்க ஒரு மரத்தை வெச்சுட்டுப் பாக்கி மரத்தை எல்லாம் வெட்றீங்க?"

"நேத்து வந்த அமைச்சர் வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கணும்னு சொன்னாரே!" கீழை. அ. கதிர்வேல்

ஜெயாவையே கல்யாணம் பண்ணிக்க. குடும்பன்தனமிரு... அடுத்த தபா ரிப்போர்ட் வந்தா உள்ளே தள்ளிடுவேன்னாரு..."

"ம்ம்ம்" என்று யோசிப்பதை அங்கீகரிப்பதை அறிவித்தவாறே நடந்தான் ஹரி.

"அப்புறம் வில்வம் 'ரிக்ஷா'வி வரப் போறான் ராக்கிரதைன்னாரு. அந்தக் கேசைப் பத்தி அவருக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கு."

தலையைக் குனிந்து ஹரி கேட்டுக்கொண்டு வந்தான்.

"ஹரி... ஆலங்காயத்திலே இருந்து வந்து ஜெயாவைப் பார்த்துட்டுப் போனுங்ளே அவங்கிட்டே இருந்து இன்னிக்கு லெட்டர் வந்துச்சி."

"யாரு... அந்தக் கூலிங் கிளாஸ்காரனா?"

"ஆமாம்."

"என்னா எழுதி இருந்தான்...எப்ப முகூர்த்தம் வச்சிக்கலாமாம்?"

"அவங்க அம்மாவுக்குப் பொண்ணு புடிக்கலியாம்."

ஹரி அவனை நிமிர்ந்து பார்த்தான்.

"அண்ணாத்தே... இது பொய். அவங்க பஸ் ஏறினப்போ நான் கவனிச்சேன். கலகலன்னு சந்தோஷமாப் போனாங்க... வேற என்னமோ விசியம்... போவட்டும். லெட்டரே ஜெயா பாத்துடுச்சா?"

"இல்லே. அவனுக்குத்தான் பொண்ணு பாக்க வந்தாங்கன்னே தெரியாதே... ஏதோ வெளியூர்க்காரங்க. ஏலகிரி மலை பாக்க வந்திருக்காங்க. தெரிஞ்சவங்கன்னு தானே நான் சொல்லி வச்சேன். ஆக இந்த வரனும் தவறிப் போச்சு..." என்று சொல்லிக் காசி ஒரு சிறு நெடுமூச்சு விட்டான்.

காசி கவலைப்பட்டதை. வாய் விட்டுக் கவலைப்பட்டதை ஹரி அன்றுதான் முதன் முறையாகக் கண்டான். காசி பம்பரம் விடுவது எப்படிப் பிடிக்கவில்லையோ அதே போல் அவன் கவலைப்படுவதும் ஹரிக்குப் பிடிக்கவில்லை. இது அவனுக்குப் பொருந்தாது போன்று ஹரி நினைத்தான்.

"அண்ணாத்தே....!"

"ம்ம்ம்...."

ஹரியின் முகம் பெரிசாய் மலர்ந்தது. ஏதோ ஒரு மகிழ்ச்சியினுள் பூரிப்பது போல் ஒரு பிரகாசம்.

பாரதியின் அறிவியல் பார்வை



"வேதமாயினும், உபநிடதமாயினும் அவை மனிதன் படைத்தவை. அவற்றைக் கடந்தும் வாழ்பவன் மனிதன். உபநிடதங்களும், மறைகளும் தனக்குத் துணை நிற்கும் வரை மனிதன் ஏற்கவேண்டும். அவை சுமையாகும் காலகட்டத்தில் மாற்ற வேண்டும்." (பக்கம் 34)

பாரதியாரை தேசபக்தி, தோத்திரப் பாடல்களுக்காகவும், குயில், கண்ணன் பாட்டுக்களுக்காகவும், பாஞ்சாலி சபத காவியத்துக்காகவும் போற்றிப் பரவசப்படும் ரசிக-விமரிசகர்கள் ஏராளம். டாக்டர் வா. செ. குழந்தைசாமி தமது அறிவியல் பார்வையைப் பாரதி மீது செலுத்தி ஒரு புது மாதிரியான படைப்பை அளித்திருக்கிறார். பாரத மாதா, விநாயகர், முருகன், பராசக்தி, முத்து மாரி, யேசு, அல்லா என்று தனித் தனியாகப் பாடிய பாரதியாரை, "உண்மைகள் தெய்வங்கள் என்போம்: மற்றும் ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்" என்று அவர் வாக்கைக் கொண்டே மடக்கும் இடத்தில் நூலாசிரியரின் சாதுரியம் புலனாகிறது. 'கடவுள் உலகை லீலா விநோதமாக சிருஷ்டித்துத் தன் திருவுளப்படி ஆள்கிறான்' என்ற ஆஸ்திகக் கருத்துக்கேற்ப, "கடவுள் செயல்கள் எவை எவை என்று அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் எதுவும் நம்மிடம் இல்லை" என்கிறார்.

வாரம் ஒரு புத்தகம்

பாரதியை ஆத்திகர், பகுத்தறிவாளர், தத்துவ ஞானி, அறிவியல்வாதி, சோஷலிஸ்டு, கம்யூனிஸ்ட் போன்ற சகலரும் கொண்டாடுகின்றனர் எனில் அதற்குக் காரணம் பாரதி அனைத்துக் கொள்கைகளிலும் இருக்கின்ற சிறப்புக்களை மட்டும் தெளிந்தறிந்து, கவிதையும் கட்டுரையும் எழுதியதுதான்.

எனவே பாரதியார் பற்றி வித்தியாசமான ஒரு புதுக் கோணத்தில் — அறிவியல் பார்வையில் டாக்டர் குழந்தைசாமியும் ஆராய்ந்திருப்பதில் வியப்பில்லை. அதனை வழக்கமான தமது நிபுணத்துவத்துடன் செய்திருக்கிறார் என்பதே நூலின் சிறப்பு.

"மகாகவி என்ற உச்ச நிலைக்கு இலக்கியத் துறையில் வளர்ந்த ஒரு கவிஞர் பரவலான அறிவுத் துறைகள் பலவற்றிலும் ஆழ்ந்த ஈடுபாடும் தெளிவான சிந்தனையும் கொண்டிருந்தது அரியதொன்று" என ஆசிரியர் குழந்தைசாமி குறிப்பிடுவது உண்மையே எனில் ஆசிரியரைப் போன்ற ஓர் அறிவியல் அறிஞர் இலக்கியத்தில் இவ்வளவு ஈடுபாடும் தெளிவான சிந்தனையும் கொண்டிருப்பதும் அரிதேயல்லவா! அந்த அரிய இயல்பின் காரணமாக உருவான அரிய நூல் இது.

-மகரம்

வெளியிட்டவர்கள்: பாரதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. விலை ரூ. 7.

"ஜெயா கல்யாணத்தைப் பத்தி எனக்கு ஒன்னு தோணுது.

"வர்றவனுங்க எல்லாம் அதைத் தட்டி விட்டுக்கினே போறதுக்கு ஒரே காரணம் தான். நீ அதுங்கூட இருக்கே... அதனாலே... நீயே....நீயே...." அவன் முடிக்காமல் நிறுத்தினான். காசி சட்டென்று நின்றான்.

"முட்டாள்" என்று கடுமையான குரலில் திட்டினான் காசி. ஹரிக்கு அந்தத் திட்டு உறைக்கிற மாதிரி தோன்றவில்லை.

"டில்லி எருமை மாதிரி வளர்ந்திருக்கியே தவிர புத்தி இருக்காடா ஒனக்கு?" ஹரி அதை மட்டுமல்ல, இன்னும் எவ்வளவு திட்டு வேண்டுமானாலும் வாங்கிக் கட்டிக் கொள்ளத் தயாரானவன் போன்று முகத்தை மாற்றாமல் வைத்திருந்தான்.

"ஜெயாவை எங்கையே நான் எடுத்து வளர்த்துக்கிறேன். அதுக்குப் பாவாடை கட்டி விட்டிருக்கேன். தலை வாரி விட்டிருக்கேன். எப்பிடி... எப்பிடிடா அதைப் பொண்டாட்டியா நெனைக்க முடியும்? சே..." காசி கோபத்தோடு அறைகிற மாதிரி கையை ஹரியின் கன்னத்தருகே கொண்டுபோனான். பின்பு ஏதோ தடுப்பது போலக் கையை நிறுத்திக் கொண்டான்.

ஹரி வெள்ளையாகச் சிரித்தான்.

"அடிச்சுடறதுதானே அண்ணாத்தே... ஒங் கோவமாவது ஆறியிருக்குமே."

காசி நாக்கைக் கடித்தான். மேம்பாலம் முடிந்து படி கீழே இறங்கிற்று. ஜங்ஷனுக்கு வந்து கொண்டிருந்த டாக்ஸி ஒன்றின் ஹெட் லைட் வெளிச்சம் தூரத்தில் சீறிக் கொண்டு வந்தது.

"அண்ணாத்தே... ஜெயா கல்யாண விஷயத்துலே நீ நாலைஞ்சு நாளா ரொம்ப அவசரப்படறே...." என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ஹரி. அவன் சிரித்தால் எதையோ ஆழமாக உணர்ந்து அதை வெளியிடப் போகிறான் என்று காசிக்குத் தெரியும்.

"என்ன கண்டு பிடிச்சே?"

"வில்வம் ஜங்ஷனுக்கு வர்றதுக்கு முன்னாடியே ஜெயா கல்யாணத்தை முடிச்சடணும்னு நெனைக்கிறே..."

காசி அவனை ஆணி அடித்து நிறுத்துகிற மாதிரி அமைதியாகப் பார்த்தான். அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்தது போல் அவன் பார்வையில் வெளிப்பட்டது.

"ஆமாம்... அதுக்குக் காரணம் பயம் இல்லை!"

"எனக்குத் தெரியும் அண்ணாத்தே."

"நான் எதுக்கும் தயாரா இருக்கேன்."

ஹரியின் முகத்தில் சிரிப்பு மாறியது. கல் மாதிரி அவன் வெறித்து நின்றான். கீழே வந்து நின்ற டாக்ஸி ஹாரன் அடித்தது.

"போகலாம்" காசி சொன்னான்.

"சரி... ஒன்னு சொல்ல மறந்துட்டேன். ரயில்லே எறங்கினாளே பொண்ணு அவ, வில்வம்கிறவர் எங்க இருக்கார்னு விசாரிச்சா." (தொடரும்)

அசாதாரணத் தேடி...

ஜெயமாலா

"ஹலோ, மிஸ்டர் ஐயர்!''

ராமகிருஷ்ணன் திரும்பிப் பார்த்தார். கையில் பையுடன் க்ரே ஸஃபாரியில் புரி. ''எங்கே பஸ்ஸாக்கா?'' என்றார்.

''நான் பின்ன காருக்கா பஸ் ஸ்டாப்பில நிப்பேன்?'' லேசான கசப்புடன் பேசினார்.

''வெல்!'' ஏதோ பெரிய ஹாஸ்யத்தைக் கேட்ட மாதிரி சிரித்தான். ''இன்னிக்கு ஏதோ விக் ஊர்வலம். பஸ் வந்து விடுஞ் சாப்பலதான். முன்னாடியே டி. டி. ஸி. சர்வீஸ்அழகு... நீங்க 8லேதானே போவேள்?''


''ஆமா.''

''பின்ன நோ சான்ஸ். அந்த ரூட்லதான் ப்ரொஸஷன். டாக்ஸியும் கஷ்டம். ஸ்கூட்டர் (ஆட்டோ ரிக்ஷா) கிடைக்கிறதா பாருங்கோ. நான் கிளம்பறேன். டாக்ஸிலேயோ, ஸ்கூட்டர்லயோ என் அண்ணா வீட்டுக்குப் போயிடறேன். அங்கதான் கார் இருக்கே ஸோ லாங்'' உயர்தர லெதர் ஷூ சப்திக்க அவன் மறைந்தான்.

பஸ் வருமோ என்ற நப்பாசையில் நின்று கொண்டிருந்தவர்களும் ஒவ்வொருவராக மறைந்தனர்.

டிசம்பர் டில்லி குளிர் இரவில் அதிகரித்து அவர் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. மாதக் கடைசி. பாக்கெட்டில் 90 பைசா இருந்தது. ஸ்கூட்டருக்கு எங்கே போவது? பாத யாத்திரைதான்.

புரியின் அண்ணா வீடு பூஸா ரோடில் இருந்தது. புரியிடம் 'உன்னுடன் வரேன்' என்று சொல்லியிருந்தால் நல்ல காரியம் செய்ய மனம் வராவிட்டாலும் தற்பெருமைக்காக அவரை மட்டம் தட்டவாவது தோளைக் குலுக்கி 'ஷ்யூர்' என்று இருப்பான். பூஸா ரோடிலிருந்து வீட்டுக்கு ஐந்து நிமிஷ



நடை. ஆனால் இந்தத் தன்மானம் விட மாட்டேன் என்கிறதே!

பாண்ட் பாக்கெட்டைத் துழாவினார். கொஞ்சம் நசுங்கிய பனாமா கையோடு வந்தது. ஷர்ட் பாக்கெட்டிலிருந்து தீப் பெட்டியை எடுத்தார். காலி. நடந்துபோக காக ஏன்? ஓரத்திலிருந்த பான்காரரிடம் தீப்பெட்டி வாங்கினார். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நடந்தார். புகையை உள்ளிழுத்தார். தனிமை லேசான பயத்தைத் தர ''டிஸ்கோ ஸ்டேஷன் டிஸ்கோ'' என்று முணு முணுத்தார். நினைவு டைரியைப் புரட்டினார்.

''அடிமையாக மாட்டேன்''
ஆறடி மனுஷனுக்கு என்று கொக்கரித்த
என் இந்திய சகோதரனே!
இன்று அடிமையாகிப் போனாயே
மூன்றங்குலப் புகையிலைச் சுருட்டுக்கு''

என்று ராமகிருஷ்ணன் புதுமைக் கவிதை எழுதிப் பள்ளிச் சஞ்சிகைக்குத் தந்தான். தலைமையாசிரியர் அவனை அழைத்துப் பாராட்டினார். ''உன்னைப் போன்ற இளைஞனைத் தான் இந்தியா எதிர்பார்க்கிறது.''

ஆனால் ஸ்கூல் பைனல்ஸுக்குப் பிறகு விடுமுறையில் நண்பர்கள் வற்புறுத்தினார்கள். ''நான் ஆண்'' என்ற ஈகோ மேலெழ சிகரெட்டைப் பிடுங்கிப் புகையை உள்ளிழுத்தான். இருமினான்.

இருமினார். கோழையுடன் ரத்தம் துளி வந்தது. துப்பினார். டாக்டரிடம் காட்டணும்.

கான்ஸராக இருந்தால்? உண்மையை எதிர்க்கத் தைரியம் இல்லை.

'நான் வேலைக்கு எல்லாம் போக மாட்டேன். எழுத மட்டுமே செய்வேன்' என்ற வைராக்கியம் அப்பாவின் 'தண்டச் சோறு' முதலிய வசவுகளால் ஆட்டம் கண்டது. எல்.டி.ஸி.எக்ஸாம் எழுதி எல். டி.ஸி.யாகச் சேர்ந்து யு. டி. ஸி. ஆகி இப்போது அஸிஸ்டெண்ட். எல். டி. ஸி. ஆன பிறகும் பிரின்ஸிபிள்ஸ் விடவில்லை.

''ஜாதகம் எல்லாம் வேண்டாம். சுத்த ஹம்பக். வர்ற முதல் வரனோட கல்யாணம் பண்ணிடுங்க'' என்றான் இராமகிருஷ்ணன்.

''ஆனால் இந்தப் பெண்ணுக்கு தோஷம் இருக்கே. மாமனாருக்கு ஆபத்து. 'உன் ஆதர்சத்துக்கு என்னைக் காவு கொடுக்கிறதா இருந்தா பண்ணிக்க; எனக்கு என்ன?'' என்று அப்பா சொன்னதும் உள்ளே இருந்த பத்தாம் பசலித்தனம் எட்டிப் பார்த்தது.

மைதிலியைப் பெண் பார்க்கப் போனான்.

மைதிலி ''வாதாபி கணபதிம்பஜே'' என்று பாட ஆரம்பித்தாள். முடிக்கும் முன்னேயே அப்பா பேசி முடித்து வந்து தலையை ஆட்ட, அம்மா ''ஆகா, பிரமாதமாப் பாடறே'' என்றாள்.



எங்கள் உழைப்பிலும் வியர்வையிலும்
விளைந்த பொருளுக்கு நல்ல விலை
கிடைக்கிறதே! எப்படித் தெரியுமா?
கூட்டுறவு விற்பனைச்சங்கங்களின்
சேவையினால்தான்!



எங்கும் எதிலும் கூட்டுறவு
வளம் பொங்கப் பொலிவதும் கூட்டுறவு.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை

அடுத்த மாதம் மைதிலி அம்ம் மிதித்தாள். அருந்ததி பார்த்தாள். மிஸஸ் ராமகிருஷ்ணன் ஆனுள்.

ரஞ்சனிக்குப் பிறகு மறுபடியும் விளிதா பிறந்தபோது யாருக்கும் ஸ் வீட்கிடையாது.

மூன்ருவதாக மிருணு பிறந்தபோது வாழ்த்தியவர்களிடம் சிடுசிடுத்தான்.

ஆனல் நாலாவதாக சந்தர் பிறந்தபோது விருந்து, புத்தாடை என்று அமர்க்களம் பண்ணிவிட்டான்.

"ஸார் இந்த ஃபைல்மட்டும் அவசரம்."

"யாரைப் பார்த்துச் சொல்றேள், என்னுல முடியாது."

"எவ்னோ வேண்டுமானுலும் தரேன், ஐந்நூறு?" என்று குப்தா புன்னகைத்தார்.

"மிஸ்டர் குப்தா, ஷ்ல்யூ ஷட் அப். என்னிடம் இதெல்லாம் நடக்காது. யூ மே கோ" என்று ராமகிருஷ்ணன் இரைந்தான். அன்னிக்கு ஆபீஸில் அவன்தான் ஹீரோ.

அன்று மாலே.

வீட்டுக்கார சிங் வந்தான். டீ குடித்துவிட்டு மெதுவாக ஆரம்பித்து, காரசாரமாகப் பேசினுன்.

"இந்த மாசக் கடைசிக்குள் எனக்கு இரண்டு மாத வாடகை வேணும். இல்லேன்னு காலி பண்ணு" என்று இரைந்து விட்டுக் கிளம்பினுன்.

சிகரெட் புகைத்தபடியே வெளியே வந்தான் ராமகிருஷ்ணன். போன மாசம் மைதிலி தங்கைக்குக் கல்யாணம், டில்லியிருந்து மதுரை பயணம். கொஞ்ச நஞ்ச பாங்க் பாலன்சும் காலி. இந்த மாதம் மிருணுவுக்கு டிப்திரியா. ஆஸ்பத்திரிச் செலவு, பழம் ஆக இந்த மாசச் சம்பளமும் காலி.

அவன் கால் பப்ளிக் காலுக்கு இட்டுச் செல்ல, விரல்கள் குப்தாவின் நம்பரைச் சுழற்ற, ராமகிருஷ்ணனின் கிம்பளப் படலம் துவங்கியது.

"என் மனைவிக்கு எல்லா விதத்திலும் சம உரிமை உண்டு. அவள் விரும்புவதை அவள் வாங்க ஒரு தடையும் இல்லே. அவள் கொத்தடிமை இல்லே" ராமகிருஷ்ணன் கான்டீனில் மிளகாய் பஜ்ஜியைக் கடித்த படியே சொன்னுன்.

வீட்டில்,

"என்னைக் கேட்கக் கூடாதா, டிபன் பாக்ஸ் வாங்கலாம்னு வச்சிருந்தேன், ரொம்பத்தான் திமிர் ஏறிப்போச்சு" என்று ஒரு ப்ளவுஸ் பீஸ் வாங்கிய மைதிலியை ராமகிருஷ்ணபுரத்தில்அவள் அப்பா வீட்டுக்கு அனுப்பி விட்டான்.

மூன்றும் நாள் அவள் அப்பா இவனுக்குச் சாப்பாடு போடுவதை விட டிபன் பாக்ஸ் மலிவு என்று சமயோசிதமாக யோசித்து எவர்சில்வர் பாக்ஸும், அரை கிலோ ஜோன் பப்படியுமாக வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

"என் மகள், மகன் இருவரும் ஒன்றே! ஐ டோன்ட் கேர், எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரி சாப்பாடு, படிப்பு."

ஆனல் ஸ்கூல் ஃபைஸைேயோடு ரஞ்சனி நிறுத்தப்பட்டாள். "ஒழுங்கா வீட்ல இரு.



கட்டிப் போட்ட கவிதை வரிகள்

● நீங்கள் பத்திரிகைகளிலோ புத்தகங்களிலோ ஆங்கிலத்திலோ தமிழிலோ வேறு மொழியிலோ பல கவிதைகளைப் படித்திருப்பீர்கள். என்ருலும் அவற்றில் ஏதேனும் ஒரு செய்யுள்—நாலு அல்லது எட்டு வரிகள்—உங்கள் மனத்தை வெகுவாகக் கட்டிப் போட்டிருக்கும். சற்று நேரம் இலக்கிய நயத்தை ருசித்து ரசிக்கச் செய்திருக்கும். "ஆகா! அடடா! பேஷ்!" என்று மனதுக்குள் பாராட்டி வியப்பீர்கள். அத்தகைய நாலு அல்லது எட்டு வரிகளை மட்டும் பக்கத்தில் உள்ள கூப்பனில் கவிஞர் பெயரையும் குறிப்பிட்டு எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானுல் உங்களுக்குப் பரிசு உண்டு. புதுக் கவிதையோ மரபுக் கவிதையோ எதுவாக வேண்டுமானுலும் இருக்கலாம். பிறமொழி செய்யுள் எனில் கூப்பனில் தமிழாக்கத்துடன் தனித் தாளில் மூலத்தையும் எழுதி அனுப்புதல் வேண்டும். முடிவு தேதி: 28—11—83. உறையின்மேல் "கட்டிப்போட்ட கவிதை வரிகள்" என்று குறிப்பிடவும்.

என் பெயர் ______________________

விலாசம் ______________________

____

____

டைப் வேணு கத்துக்க. காலேஜ்ஜெல்லாம் அனுப்ப என்கிட்டப் பணம் இல்லே. சொன்னாக் கேளு. வீட்டுல வேலே செய். ஏதாவது சம்பாதிக்க முடியாவிட்டாலும் செலவழிக்க வழி பண்ணாதே.''

வினிதா செக்ரட்டரியல் கோர்ஸ் பண்ணினாள். மிருணா எப்படியோ அழுது பிடித்து ஸ்காலர்ஷிப்பில் ஒரு சுமாரான காலேஜுக்குப் போனாள்.

சந்தருக்கு பி. காம் ஹானர்ஸுக்காகக் கன்னியாக நோட்டுக்களை ராமகிருஷ்ணன் பெரிய மனிதருக்குத் தந்தார்.

வாண வேடிக்கை. ஷெவர்லெட்டில் மாப்பிள்ளே அழைப்பு முதலியவுடன் ராமகிருஷ்ணன் தந்த பரிசான ஒமேகா இடது கையிலும் வைர மோதிரம் வலது கையிலுமாக மற்றோர் பரிசான திருமாங்கல்யத்தை ரஞ்சனியின் கழுத்தில் முரளிதரன் கட்ட அவளும் ஒரு பரிசாக முரளிதரனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

இவ்வாறே வினிதாவுக்கும் கோபாலுக்கும் திருமணமானது. மிருணா பரிசாக விஷ்ணு வர்த்தனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

அதற்கு மறுநாள்!

அமெரிக்காவில் இன்று வீடுதோறும் பெரும் கவலையையும் பீதி பயங்கரத்தையும் ஏற்படுத்தி வரும் டீவி படம் ''மறுநாள்.'' எதற்கு மறுநாள்? ஓர் அணு ஆயுதப்போர் நடந்ததற்கு மறுநாள்! அணுகுண்டுகளைத் தாங்கி வரும் ஏவுகணைகள் கான்ஸாஸ் மீது விழுந்து அந்நகரை அழிப்பதையும் தொடர்ந்து மக்கள் படும் துன்பத்தையும் ஒளிவுமறைவின்றி எடுத்துக் காட்டுகிற இப்படம், அணு ஆயுத எதிர்ப்பு இயக்கத்துக்குப் பெரும் பக்கபலமாகக் கருதப்படுகிறது.

ஆதாரம்:— நியூஸ்வீக்.

''நான் தரமாட்டேன்னுதான் இருந்தேன். ஆறு பின்ன பெண்கள் கல்யாணமாகாமல் வீட்டிலேயேதான் இருந்திருக்கணும். நம்மால ஆனது. சந்தருக்கு வாங்க மாட்டேன்.''

'வாங்க மாட்டேன்' என்பதுடைய அர்த்தம், வைரத் தோடு நெக்லஸ் இரட்டை வடச் சங்கிலி, எட்டு வளையல், வெள்ளியில் கொலுசு, மெட்டி, நெளி மோதிரம், மூக்குத்தி, தங்கத் தோடு, எவர்ஸில்வர், வெள்ளி பித்தளைப் பாத்திரங்கள், பத்தாயிரம் ரூபாயில் இரண்டு சூட், வைர மோதிரம், கடிகாரம், மாப்பிள்ளை வீட்டாருக்குத் துணிமணிகள், கல்யாணச் செலவு தவிர வேறு எதுவும் வாங்க மாட்டேன் என்று அர்த்தமாம். தவிர கறுப்பு குட்டை குண்டு சந்தருக்கு அழகான மனைவி தேவையாம். யாரையும் தூக்கி எறிந்து பேசும் மைதிலிக்கு அடக்கமான பெண் வேண்டுமாம்.

எப்படியோ சுபத்ரா எல்லோருக்கும் பிடித்துவிட, சுபத்ராவின் அப்பா எல்லாப் பொருளுக்கும் ''சரி'' சொல்ல, சந்தரும் கத்தரிக்காய் பஜ்ஜியை முழுசாக விழுங்கியபடி ''ம்'' கொட்ட, அடுத்த மாதத்தில் ஒரு சுபயோக சுப தினத்தில் மேளம் கொட்டியது.

டில்லியில் ஓர் அறை வீட்டிலிருந்த ராமகிருஷ்ணனின் குடும்பம் கரோல்பாக்கில் ஓர்இரண்டுஅறைவீட்டுக்குக் குடிபெயர்ந்தது.

''அவன் இஷ்டப்பட்டாத் தனியாப் போகட்டும். அவன் சந்தோஷம்தானே முக்கியம்'' என்ற ராமகிருஷ்ணன் ''அப்பா, இடம் போறல்லியே!'' என்று மறைமுகமாகச் சொன்ன சந்தரிடம், ''ஒரு அபார்ட்மெண்ட் பார்க்கறேன். நாம போலாம்'' என்றார்.

''**பா**ய் சாஹப், தேக்கே சலியே, மர்னு ஹைக்யா?'' என்று அந்த மோட்டார் பைக் இளைஞன் கூறியபடியே செல்ல ராமகிருஷ்ணன் சுயநினைவுக்கு வந்தார். பூஸா ரோட்டை அடைந்துவிட்டதை உணர்ந்தார். கோல் சக்கரத் தாண்டி ஆர்ய சமாஜ ரோட்டை அடைந்தார்.

இன்று ஆபீஸில் எல்லோரும் அஞ்சு ரூபாய் போட்டு டீபார்ட்டி கொடுத்து சால்வாவின் வீட்டுத் தோட்டத்துப் பூக்களை வைத்து அவன் மகள் கட்டித் தந்த கோணல் மாலையைப் போட்டு இவருக்கு டாட்டா சொல்லிவிட்டார்கள். பேசும்போது செக்‌ஷன் ஆபீஸர் கான் சொன்னார்: ''ராம்கிஷன் இஸ் எ மேன் ஆஃப் மாரல்ஸ், ரொம்ப உயர்ந்த நோக்கங்கள் உள்ளவர். வீ வில் மிஸ் ஹிம்'' கொஞ்ச நாளாகும் மற்ற விஷயங்கள் செட்டில் ஆக. வர்றதை வைத்துக் கொண்டு புதுசா வாங்கியிருக்கிற வீட்டின் கடனை செட்டில் செய்யணும். மீதியை எப். டி. ஆர்ல. போடணும். எவ்வளவு மற்ற விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க முயன்றாலும் கானின் வார்த்தைகள் மனத்தில் எதிரொலித்தன. 'மேன் ஆஃப் மாரல்ஸ்''

''நானா? இல்லே! நான் பொய்யானவன். ஹிப்போகிரேட். சொல்லளவில் உயர்ந்தவன். தினம் ஓர் உயர்ந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லித் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ள முயற்சி செய்பவன். உண்மை வாழ்க்கையில் மிகவும் கீழானவன். இன்று கூடப் பேசும்போது, மனிதன் மனிதனாகச் சாகணும், மனிதனுக்காக உதவிச் சாகணும், அதுதான் அர்த்தமுள்ள இறப்பு என்று பேசினேனே!

''பப்பூ, ஜல்தி ஆஜா'' என்றபடி ஓர் பெண்மணி கையில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாகத் தூக்கிக் கொண்டு ஓடி சாலையைக் கடக்க பப்பு என்ற ஐந்து வயதுப் பையன் நடு ரோட்டில் விழுந்த தன் பொம்மை ரயிலையும், அதன் சக்கரங்களையும் பொறுக்க முற்பட, எதிரில் ஓர் லாரி ராட்சஸனாக வர,

''பப்பூ....''

ராமகிருஷ்ணன் நடுவில் வந்து முழு பலத்துடன் பப்புவைத் தள்ளிவிட்டு நிஜமானவராக, அர்த்தத்துடன் இறந்தார்.

நீங்கள் கேட்டவை

○ திருமதி லக்ஷ்மி நடராஜன், திருப்பூர்-1.

? 500 பேர் இன்ஜினியரிங் கல்லூரியிலிருந்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துவிட, ஏற்பட்ட காலி இடம் பி. காம்., பி.எஸ்ஸி. மாணவர்களால் நிரப்பப்பட, தற்போது சுமார் 500 பட்டப்படிப்பு இடங்கள் காலியாகி விட்டன. வருட ஆரம்பத்தில் பட்டப்படிப்பில் இடம் கிடைக்காததால் எனக்குத் தெரிந்த நண்பரின் மகன் விரக்தி நிலை அடைந்தான். தங்கள் கருத்து என்ன?

! நமது கல்வியாளர்களும் அமைச்சர்களும் குழப்படி மன்னர்கள். இன்டர் பி. யூ. ஸி. என்றிருந்த போது அந்த மட்டத்திலேயே இன்ஜினீரிங் படிப்பு தொடர விரும்பும் மாணவர்கள், மருத்துவம் பயில விரும்பும் மாணவர்கள் என்று பிரித்து விட வாய்ப்பிருந்தது. இப்போதுள்ள பிளஸ் டூ இரண்டு பிரிவிலும் விண்ணப்பிக்க வழி செய்கிறது. இதனால் குழப்பம் ஏற்படுத்துவது தவிர நமது கல்வியாளர்களும் அமைச்சர்களும் பாடத் திட்டங்களில் உருப்படியான, வாழ்க்கைக்கு உபயோகமான மாறுதல்கள் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை.

○ எம். ராகவன், அம்மாப்பேட்டை.

? ரஷ்யா, அமெரிக்கா போல் நம் நாடும் தொழில்வளத்தில் 'முன்னேற்றம் அடையுமா?

! அடையும். ரஷ்யா போல் அல்லது அமெரிக்கா போல் கொள்கைகளைப் பின்பற்றினால். இப்போதுள்ள சோஷலிஸமும் அல்லாத தனிநாயகமும் இல்லாத இரண்டுங்கெட்டான் கொள்கை வளர்ச்சிக்குத் தடை.

○ உ. சங்கரப்பு, தக்கலை.

? ஜி. பார்த்தசாரதியை முன்பு வரவேண்டாம் என்று கூறிய ஜெயவர்த்தனா இப்போது அழைப்பு விடுத்திருக்கிறாரே? என்னதான் எண்ணிக் கொண்டிருக்கிறார் இந்தியாவைப்பற்றி?

! உங்களைப் போல் மத்திய அரசு ரோசப்படாமல் இருக்கட்டும். யதார்த்த நிலை உணர்ந்து ஜி.பி.யை அனுப்பட்டும். இன்று அழைப்பு இருப்பதால் முன்பு 'இப்போது வேண்டாம்' என்று கூறியதற்குத் தக்க காரணம் இருக்கும் என்று நம்புவோம். ஜெயவர்த்தன —இந்திரா சந்திப்புக்குக் கூட ஸ்ரீலங்கா அரசு முயல்வதாகத் தெரிகிறது. நல்ல அறிகுறிகள். வரவேற்று வாழ்த்துவோம். நலன்கள் விளையப் பிரார்த்திப்போம்.

○ எஸ். ரமேஷ், மதுரை.

? அமெரிக்க ராணுவம் கிரனடாவில் புகுந்து அடித்து நொறுக்கி விருக்கிறதே. இந்தியா மட்டும் இலங்கைத் தமிழர்களுக்காக ராணுவத்தை அனுப்பினால் என்ன?

! பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் உள்ளிட்ட நேச நாடுகளின் அதிருப்தியையும் உலக நாடுகளின் கண்டனத்தையும் அமெரிக்கா பெற்றிருக்கிறதே. அப்படி இந்தியாவும் பெற வேண்டுமென்றால் செய்யலாம்.

○ ஆர். அரிகோபி, குடியாத்தம்.

? தமிழக சட்டசபைக்கு ஒரு பலம் வாய்ந்த எதிர்க்கட்சி எப்போது கிடைக்கும்?

! இப்போதே கிடைத்திருக்கிறதே தி.மு.க வடிவில். எதிர் அணியில் ஒரு கட்சி கூட வேண்டாம். ஒரு துரைமுருகன் போதும் என்று எண்ணுமளவில் சிமெண்ட் ஊழலை ஸிண்டிகேட் கூட்டத்தில் பிட்டுப் பிட்டு வைத்ததுடன் சட்டசபையிலும் பிரச்சினையை எழுப்பி அரங்கநாயகம், பொன்னையனைத் திணறத் திணற அடித்திருக்கிறாரே! எதிர்க்கட்சியின் பலம் எண்ணிக்கையால் மட்டும் வருவதல்ல; ஆற்றலுடன் செயல்படுவதிலும் இருக்கிறது.



○ மதுரை ஆதீனம்



○ சுந்தர்

பூ அலங்காரத்துக்கு

○ க. குமரேசன், திருவாரூர்.

? கலைவாணர் என்.எஸ்.கே. யிடமும் கல்கண்டு தமிழ்வாணனிடமும் தாங்கள் கண்டு வியந்த அம்சங்கள் என்ன?

! நகைச்சுவை நடிகர் வாழ்க்கையில் காட்டிய ஸீரியஸ்னஸ். ஸீரியஸ் எழுத்தாளர் பழகும், பேசும் விதத்தில் காட்டிய ஹாஸ்ய உணர்வு.

○ ஆர். சிவராஜ், லால்குடி.

? எட்டாயிரம் ரன்களையும் இருபத்தொன்பது செஞ்சுரிகளையும் அடித்துச் சாதனை புரிந்திருக்கும் கவாஸ்கர், பற்றி?

! நான் ஒரு சாதனை புரிந்திருந்தாலும் பிராட்மனுடன் ஒப்பிடுமளவில் ரிகார்ட் ஏற்படுத்தியதாகக் கூற முடியாது என்று அவர் அடக்கத்துடன் கூறியது இருபத்தொன்பது செஞ்சுரிகளுக்குச் சமம். பிராட்மனின் 29 டெஸ்ட் செஞ்சுரிகள் 80 இன்னிங்

னில் கிடைத்தவை. கவாஸ்கருக்கு 165 டெஸ்ட் இன்னிங்ஸ்கள் தேவைப்பட்டன. பிராட்மனின் 29 செஞ்சுரிகளில் 10 டபுள் செஞ்சுரிகள், 2 டிரிபிள் செஞ்சுரிகள் கவாஸ்கர் 3 டபுள் செஞ்சுரிகள் மட்டுமே அடித்திருக்கிறார்.

○ எஸ். தேவநேசன், வாலாஜாபேட்டை.

? உங்கள் கூற்றுப்படி இறைவன் உலகை, உயிர்களைப் படைத்தான் என்றால் இறைவன் எப்படி உண்டானான்? இறைவன் தானாகவே உண்டாக முடியுமென்றால் இந்தப் பிரபஞ்சமும் உயிர் உண்டாகக் காரணமான காரணிகளும் ஏன் தானே உண்டாகியிருக்க முடியாது?

! அந்த சுயம்பு சக்தியைத் தானே இறைவன், தெய்வம் என்றெல்லாம் பெயரிட்டு அழைக்கிறோம்; பல வடிவங்களைத் தந்து வணங்குகிறோம்.

கண்ணியம் தெரியவந்தது. இந்திய வீரர்கள் தங்கள் ஆற்றலுக்குக் குறைவாகவே ஆடினார்கள்; ஃபீல்டிங் மோசமாக இருந்தது; தன்னம்பிக்கை இல்லாததால் பாட்டிங் படுத்து விட்டது என்றெல்லாம் ஒப்புக் கொண்டவர் முதல் இன்னிங்ஸில் மதன்லாலும் பின்னியும் இரண்டாவது இன்னிங்ஸில் வெங்சர்க்காரும் ரவிசாஸ்திரியும் ஆடிய விதம் நம்பிக்கை அளிக்கிறது. இந்த ஒரு டெஸ்ட்டை வைத்து எங்களை எடைபோடாதீர்கள். இன்னும் கவனத்துடன் செயல்படுவோம். உடம்பைநன்றாக வைத்துக் கொண்டு சிறப்பாக ஆடுவோம் என்று உறுதி அளித்தார். காலாண்டு பரீட்சையில் குறைவான மார்க்குடன்வந்த சிறுவன் அப்பாவிடம்

வொன்றுக்கும் 150 ரூபாய் தந்தால் ஏழைமை ஒழியுமல்லவா?

! வறுமை அதிகரிக்கும்—பணவீக்கம் காரணமாக. பொருளாதாரம் செழிக்கவும் சுபிட்சம் நிலவவும் ஒரே வழி, உற்பத்தி அதிகரிக்கவும் வேலை வாய்ப்புக்கள் பெருகவும் வகை செய்து மக்களை உழைத்துச் சம்பாதித்து அதைக் கொண்டு சாப்பிடச் செய்வது தான்.

○ ஆ. சந்திரசேகரன், லால்குடி.

? பம்பாயில் நடைபெற்ற இந்திரா காங்கிரஸ்கமிட்டி கூட்டத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் பூ அலங்காரம் செய்தார்களாமே?

! இதைவிடப் பெரிய வயிற்றெரிச்சல் பாடன் சௌதரிக்கு இப்படி அள்ளிக் கொடுத்து விட்டுப் பணக்காரர்

ஒன்றரை லட்சம் செலவாமே?

○ வி. லலிதா, புதுக்கோட்டை.

? கான்பூர் டெஸ்டில் இந்தியர்களைத் திணற அடித்த மார்ஷலின் பந்து வீச்சு பற்றி...?

! ட.வி. யில் அவர் ஓடி வருவதைப் பார்க்க சின்ன வயது ரயில்விளையாட்டு நினைவு வந்தது. பந்து வீசும் கரத்தை அப்படி முன்னும்பின்னுமாக ஆட்டிக் கொண்டு வந்தார். வீச்சிலேயோ ரயில் இஞ்சினுடைய சக்தியைச்செலுத்தினார். நம்மவர் பிரண்டு சரிந்தனர். இரண்டாவது டெஸ்ட்டில்தான் சற்றே நிமிர்ந்திருக்கின்றனர்.

○ ஆர்.ராஜி, பெரியகுளம். ★

? இந்தியா உலகக் கோப்பையை வென்றது ஒரு குருட்டு அதிர்ஷ்டம் என்று கபில்தேவுக்கு லாபிட் உணர்த்தியது போல் ஆகிவிட்டதே முதல் டெஸ்ட்?

! மாட்ச் அப்படி முடிந்ததால் ஒரு நன்மையும் விளைந்தது. கபில்தேவின்

பேசுவது போலமைந்து மனசுக்கு இதமளித்தது!

○ ஸ்ரீராகவ் ராஜு, சேலம்.

? மதுரை ஆதீனம் அவர்களின் மடத்தைச் சோதனையிட்டது நியாயமா?

! சோதனைக்கு இடவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் விதமாக ஆதீனம் நடந்து கொண்டது துரதிர்ஷ்டம். தெய்வ பலத்தை நம்ப வேண்டியவர் துப்பாக்கி பலத்தை நம்புவதாவது! கொஞ்சம்கூடப் பொருத்தமில்லையே.

○ பி. ஜே. கென்னடி இராமதி, சென்னை.

? அமரர் கல்கியின் சரிதையை நீங்கள் எழுதினால் என்ன?

! ஏற்கெனவே எழுதியிருக்கிறாரே சுந்தா ''பொன்னியின் புதல்வர்'' என்ற தலைப்பில். அதை மிஞ்ச யாராலும் முடியாது.

○ ஆர். வி. ராமராவ், பள்ளிகொண்டா.

? ஆண்டுக்கு 150 கோடி சத்துணவுக்குச் செலவிடும் அரசு ஏழைக் குடும்பம் ஒவ்



○ தமிழ்வாணன்




○ [illegible]

களுக்கு இனியும் அரசாங்கம் உதவிக் கொண்டிருக்க முடியாது என்று பிரதமர் முழங்கியது தான். இப்படி தாம்தூம் செலவு செய்ய காங்கிரஸுக்குப் படியளக்கும் பணக்காரர்கள் மனசுக்குள் சிரித்துக் கொண்டிருப்பார்கள்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
ஆர். ராஜி,
பெரியகுளம்,
(முழு விலாசம் தேவை.)

- தராசு



பார்லிமெண்ட்



பனிக்கு விழுதுகளின்
அடையாறு ஆலமரம்
அடைகாத்த
பிரச்னைகள் எல்லாம்
இன்னும்
அட்டைக் கோழியின்
காகித முட்டைகள்தான்!
சோற்றுக் கேள்வியிலிருந்து
சோஃபிஸ்டி கேட்டட்
மைக்ரோ பிராசசர் வரைக்கும்
அண்டார்டிகா பனிக் 'கேக்'கை
பங்கு போடுவதிலிருந்து
நம் வீட்டின்
கர்ப்ப கிருகத்துள்ளும்
அண்டையில் உள்ள, கடைக்கண்
தருகின்ற 'ஹைஜூன்
மீசை'கள்வரைக்கும்
இங்குதான்
நெல்லிக்காய் மூட்டையை
அவிழ்க்கிறார்கள்.
'ஸ்பீக்கர்'
சோப்பு எடுத்துத் தர
எல்லாவற்றையும்
'மேஜைக் கல்லில்'
அடித்துத் துவைத்து
அலசிப் பிசைந்து
முறுக்கிப் பிழிந்து
விரிக்கும்போது
தெரிந்தது:
'நம் மூவர்ணத் துணி
கந்தலாகிப் போனது' என்று.
தேர்தலின்போது
'வாக்குறுதி'யில் தந்த
'கெட்டிச் சாய உத்தரவாதம்'
கெட்டுப்போய்
மூவர்ணம் சாயமிழந்ததும்
தெரிந்தது.
அந்த 'பார்லிமெண்ட்'
குளக்கரையின் படிக்கட்டுகளில்.

-செங்கீரன்



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran


REGISTERED
இனிய சுகந்தம்,
இதமான ஸ்பரிசம்,
துணிமணி சோபிதம்...
அழகுமிக்க துணியை உங்களால் அடுத்தவேறு பெயரிட்டு அழைக்க முடியாது.
ஸ்டேன்ரோஸ்®